www.tamilarangam.net


சரிநிகர்
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே -பாரதி

தேர்தல் விஷேட இதழ் ஜூலை 21 இல்

இதழ் 51, ஜூலை 14 — 20 1994, விலை 7/-


# ஐ.தே.கவின் தேர்தல் காடைத்தனம்!

பொதுத்தேர்தலுக்கு நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்வதற்கான இறுதித் தினம் திங்கள் 11.7.94 அன்று முடிவடைந்தது. நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்காகத் தென்னிலங்கையின் பிரதானமான போட்டிக் கட்சிகளான ஐ.தே.கவும் பொ.ஐ.மு ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் சகிதம் கச்சேரிகளை முற்றுகையிட்டனர்.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதையொட்டித் தென்னிலங்கையின் பல பகுதிகளில் ஐ.தே.க.வின் குண்டர் படைகள் எதிர்க்கட்சியினர் மீதான தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளனரென்றும் எதிர்க்கட்சிகளும் பல சந்தர்ப்பங்களில் எதிர்த் தாக்குதல் நிகழ்த்தியிருக்கின்றதெனவும் சரிநிகருக்குக் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலில் ஏற்படவுள்ள கடுமையான போட்டியையிட்டு எழுந்துள்ள குரோதம் காரணமாக நடந்துள்ள இத்தாக்குதல்களின் போது பொதுசன ஐ.மு.வேட்பாளர் ஒருவர் மற்றும் பொலிசார் உட்பட நூற்றுக்கணக்கானோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

### ஆஸ்பத்திரியில் கூரே

களுத்துறையில் பொ.ஐ.முன்னணியின் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யச் சென்ற வேளை ஐ.தே. கட்சி ஆதரவாளர்களும் குண்டர்களும் பொ.ஐ.முன்னணியைத் தாக்கியுள்ளனர். ஐ.தே.கட்சியாளர் இறுதித் தினத்துக்கு முன்பாகவே தமது பத்திரங்களைத் தாக்கல் செய்து விட்டார்கள் எனினும் திங்களன்று திட்ட மிட்ட முறையில் பொ.ஐ.முன்னணியினரைத் தாக்கியுள்ளனர் எனத் தெரிய வருகிறது. ஐ.தே.க வேட்பாளரும் முன்னாள் பா.உவுமான மேர்வின் ஜே.கூரே எதிர்கட்சி வேட்பாளரான றெஜினோல்ட் கூரேயைத் தாக்கியுள்ளார். பலத்த காயத்துக்குள்ளான நிலையில் றெஜினோல்ட் கூரே வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். தொடர்ந்து இடம் பெற்ற மோதல்களில் ஆறு பஸ் வண்டிகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. முப்பத்தைந்து பேர் காயமடைந்துள்ளனர்.

### காரியாலயம் உடைப்பு

மாத்தளையில் ஐ.தே.க.வேட்பாளர் அலிக் அலுவிகார தலைமையில் அரசாங்க் வாகனங்களில் சென்ற ஐ.தே.க குழுவினர் நியமனப்பத்திரம் கையளிக்கச் சென்ற பொ.ஐ.முன்னணியிருக்கு தாக்குதல் நிகழ்த்தியுள்ளனர். மாத்தளையிலும் இறுதித் தினத்துக்கு முன்பாகவே ஐ.தே.க நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்து விட்டிருந்தனர்.

→15

## வன்னியில் 6 ஆசனங்களுக்கு 90 வேட்பாளர்கள்!

வன்னி மாவட்டத்தில் கிட்டதட்ட 175,000 வாக்காளர்கள் இருந்த போதும், விடுவிக்கப்பட்ட பகுதிகளில் 82,000 வாக்காளர் மட்டுமே உள்ளனர். இவர்களில் கிட்டத்தட்ட 70,000 பேர் மட்டுமே வாக்களிப்பர் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இவர்களுக்காக மொத்தமாக ஒதுக்கப்பட்டுள்ள ஆசனங்களின் தொகை ஆறு. இதற்காக 90 வேட்பாளர்கள் தேர்தலில் குதித்துள்ளனர்.

ஐ.தே.க், பொ.ஜ.மு, முஸ்லீம் காங்கிரஸ் , கூட்டணி, தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணி (புளொட், ரெலோ, ஈரோஸ்), ஈ.பி.ஆர்.எல்.எப் நவசமசமாஜக் கட்சி, மூன்று சுயேட்சைகள் உள்ளடங்க 10 கட்சிகள் தேர்தலில் குதித்துள்ளன. தற்போதைக்கு வன்னி மாவட்டமே ஆகக்கூடுதலான கட்சிகள் சுயேட்சைகள் போட்டியிடும் மாவட்டமாக உள்ளது.




## பாலசிங்கத்திற்கும் மண்டையில்.!

தமிழ் இளைஞர்களின் இத்தனை தியாகங்களுக்குப் பின், இப்பொழுது நாங்கள் சமரசத்திற்குப் போவோமானால் மக்கள் எங்களது மண்டையிலும் (துவக்கை) வைப்பார்கள்.

பீ.பீ.சி சந்தேசிய நிருபர், வசந்த ராஜா அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது அன்ரன் பாலசிங்கம் அவருக்கு அளித்த பேட்டியோன்றில் மேற்கூறியவாறு கூறியுள்ளார். '' சிங்கள அரசியல்வாதிகளது தமிழீழப் போராட்டம் தொடர்பான அபிப்பிராயம் குறித்து நாம் அக்கறை காட்டுவதில்லை. ஏனென்றால் அவர்கள் தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வதில்லை. பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகளை நாம் திறந்தே வைத்திருக்கின்றோம்'' என்றும் பாலசிங்கம் கூறியதாக வசந்தராஜா தெரிவிக்கின்றார்.

## அவசரகாலச் சட்டம் அவுட்?

1983 இலிருந்து தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்து வரும் அவசரகால தடைச்சட்டம் எதிர்வரும் (ஜூலை) 15ம் திகதியுடன் காலாவதியாகிறது. மாதம் மாதம் பாராளுமன்றத்தில் புதுப்பிக்கப்பட்டு வந்த இவ் அவசரகாலச் சட்டம் 15ம் திகதி காலாவதி ஆவதனால் பாராளுமன்றத்தை திரும்பவும் விசேடமாக கூட்டி திகதியை புதுப்பிப்போம் என பிரதமர் அண்மையில் அறிவித்திருந்தார். ஆயினும் ஜனாதிபதி விஜேதுங்க இதனை மறுத்துள்ளதுடன் தேர்தல் காலத்தில் அவசர கால சட்டம் இல்லாமலே பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் நிலைமையை நிர்வாக முறைமைகளினூடாகவும் கட்டுப்படுத்திவிட முடியும்' என அறிவித்துள்ளார். அப்படியானால் இவ்வளவு காலமும் இச்சட்டத்தை வைத்திருந்ததன் நோக்கம் என்ன..?

## 200 வாக்குகட்கு ஒரு எம்.பி!

யாழ் தேர்தல் மாவட்டத்தில் உள்ள ஏறத்தாழ 600,000 வாக்காளர்களில் தீவுப்பகுதியிலுள்ள 6000 பேரே வாக்களிக்கவுள்ளனர். ஏனையவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே வாழ்கின்றனர். ஆறாயிரம் வாக்காளர்களின் வாக்குகளை கூறு போட 45 வேட்பாளர்கள் இம்மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர்.

டக்ளசின் தலைமையிலான ஈ.பி.டி.பியின் சுயேட்டைக்குழு, சுதா மாஸ்ரரின் தலைமையிலான தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணி, சர்வேஸ்வரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகியனவே இங்கு தேர்தலில் போட்டியிடவுள்ளன. இம்மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து புத்தளத்திலும் ஏனைய பகுதிகளிலும் வாழும் ஏறத்தாழ 15,000 முஸ்லீம் வாக்காளர்களின் வாக்குகளுக்காக முஸ்லீம் காங்கிரஸ் போட்டியிடுகிறது. எனவே மொத்தம் 21,000 வாக்குகளுக்கு 60 வேட்பாளர் போட்டியிடுகின்றனர்.

இதன்படி யாழ்மாவட்டத்தில் 200 வாக்குகளை பெறும் ஒருவர் கூட எம்பியாகி விடும் வாய்ப்பு இருப்பதாக தேர்தல் அவதானிகள் கூறுகின்றனர்.

## பொ.ஐ.மு.வின் 'இன உணர்வு'!

பதுளை தொகுதியில் அறுபதினாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் வாக்காளர்கள் இருந்த போதும் பொ.ஐ. முன்னணியில் பட்டயலில் ஒரு தமிழருமே இடம் பெறவில்லை. ஆரம்பத்தில் ஒரு தமிழர் பட்டியலில் இடம் பெற்றிருந்தார் எனவும் பின்னர் பொ.ஐ.முவின் நட்சத்திர வேட்பாளர் சமரவீர வீர வன்னி இத் தமிழரைப் பட்டயலிடாது நீக்கி விட்டுத் தனது 'வால்' ஒருவரைச் சேர்ந்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

21ம் தேதி விசேட இதழ் ரூ. 6/=

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மட்டக்களப்பு தேர்தல் நிலவரம்;

# ஐயா வாங்கோ!

மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைள் படிப்படியாகச் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளன. ஐ.தே.க, பொ.ஐ.முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எப், த.வி.கூ, தமிழ் தேசிய விடுதலை முன்னணி(புளொட், ரெலோ, ஈரோஸ். கூட்டு), ஈ.பி.டி.பி, சுயேட்சைக் குழு என்பன களத்தில் இறங்கியுள்ளன.

இக் கட்சிகளின் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளைப் பார்க்கும் போது எப்பாடுபட்டாவது பாராளுமன்றக் கதிரையைக் கைப்பற்ற வேண்டும் என்பதில்தான் குறியாக இருக்கின்றனவே தவிர, இத் தேர்தலுக்கூடாக தமிழ்மூஸ்லீம் மக்களுக்குக் கிடைக்கக் கூடிய நன்மைகள், தீமைகள் என்பனவற்றைப் பற்றிச் சிறிதளவேனும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

முஸ்லீம் காங்கிரசைப் பொறுத்தவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் அது முஸ்லீம்களை மடடுமே நம்பியிருக்கின்ற கட்சி. அதிலும் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாவின் கடந்த கால நடவடிக்கை காரணமாக ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய பகுதிகளில் செல்வாக்குக் குறைந்த நிலையில் காணப்படுகின்றது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது இவ்விரு பிரதேசங்களிலும் மு.காங்கிரஸ் நிராகரிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் இத் தேர்தலை அது மிகக் கவனமாகவே கையாள விரும்புகின்றது. அத்தோடு பாராளுமன்ற அரசியலினூடாகத்தான் தனது இருப்பை நிலை நிறுத்திக் கொள்ள விரும்புகின்ற கட்சியாக இருக்கின்ற காரணத்தினால் ஐ.தே.க, ஸ்ரீ.ல.சு.கட்சி ஆகிய முஸ்லீம்களைக் கூறு போடக்கூடிய கட்சிகளை வெட்டி விழுத்துவதிலேயே அத்ன் முழுக் கவனமும் காணப்படுகின்றது.

ஆரம்ப நடவடிக்கையாக ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய பகுதிகளில் இழந்த செல்வாக்கை மீண்டும் நிலை நிறுத்திக் கொள்ளும் விதத்தில் இப் பகுதியில் செல்வாக்குள்ள நபரான முன்னாள் பா.உறுப்பினர் பசீர் சேகுதாவுதை அது உள்வாங்கியிருக்கின்றது.

இதன் காரணமாக மு.காங்கிரஸைச் சேர்ந்த முன்னாள் எம்.பி ஹிஸ்புல்லா ஓரங்கட்டப்பட்டிருக்கின்றார். அதே சமயம் காத்தான்குடியில் உள்ளவரும், ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய பிரதேசங்களில் செல்வாக்குள்ளவரான சட்டத்தரணி ஜவாத் இம்முறை ஸ்ரீ.ல.மு.கா. சார்பில் போட்டியிடுகின்றார். மு.காங்கிரஸ் முஸ்லீம் மக்களின் ஆதரவைப் பெறுமா பெறாதா என்பது ஒருபுறம் இருக்க ஜவாத், சேகுதாவூத், ஹிஸ்புல்லா ஆகியோருக்கு இத் தேர்தல் ஒரு பலப்பரீட்சையாகவே அமைந்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை ''தங்கள் கைகள் இரத்தம் தோயாதவை'' என்ற நற்சாட்சிப் பத்திரத்தைத் தாங்களே தங்களுக்கு வழங்கிக் கொண்டு இத் தேர்தலில் குதித்திருக்கின்றனர். 1989ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலிலேயே மக்களால் நிராகரிக்கப்பட்ட கூட்டணி வேட்பாளர்கள் மீண்டும் வேஷம் கட்டிக் கொண்டு அரங்கேறுகின்றனர். சாம் தம்பிமுத்துவின் இறப்பை அடுத்து எம்.பியான ஜோசப் பரராஜசிங்கத்தின் தலைமையில் இவர்கள் போட்டியிட்டாலும் இத் தேர்தலில் கூட்டணி என்பதை விட நிறுத்தப்படும் நபர்களைப் பொறுத்துத்தான் நிலைமை கணிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மட்டக்களப்பில் முன்னாள் அமைச்சர் இராசதுரை எப்படியானதொரு இடத்தை வகித்திருந்தாரோ அந்த இடத்தை இத் தேர்தலினூடாக எட்டிப் பிடிக்க திரு. ஜோசப் பரராஜசிங்கம் பிரயத்தனப்படுகின்றார். அவர் பாராளுமன்றத்தில் இனப்பிரச்சினை தொடர்பாகப் பேசிய பேச்சுகளை உள்ளடக்கிய 'பத்திரிகைத் துண்டு'களுக்கு மத்தியில் கூப்பிய கைகளுடன் முழுநீள வேட்டியில் காணப்படும் சுவரொட்டிகள் மட்டுநகரெங்கும் நிறைந்து காணப்படுகின்றன. உண்மையில் இவரை முழுநீள வேட்டியுடன் மக்கள் எப்போதுமே காணவில்லை.

மட்டக்களப்பில் கூட்டணியினரைப் பொறுத்தவரை அவர்களை நோக்கி எழும் பிரதான கேள்வி மட்டக்களப்பு மக்கள் 1989க்குப் பின்பு எழுந்த யுத்தத்தின் போது சின்னாபின்னமாகிப் போயிருந்த வேளை கொழும்பிலும் இந்தியாவிலும் சொகுசாக இருந்துவிட்டு இப்போது வாக்குக் கேட்க என்ன யோக்கியதை இருக்கின்றது என்பதுதான். ஜோசப் பரராஜசிங்கம் என்ற தனிமனிதனைத்தான் மக்களுக்குத் தெரியுமே தவிரக் கூட்டணியை அல்ல.

ஈ.பி.ஆர்.எல்.எப்பின் தேர்தல் நடவடிக்கைகளை நோக்கும் போது அவர்களுக்கும் இத் தேர்தல் ஒரு பலப்பரீட்சைதான். ஏனெனில் வடகிழக்கில் தங்களுக்குள்ள உறுதியான தளம் மட்டக்க்ளப்புதான் என நினைத்துக் கொண்டிருக்கும் இவர்கள் அதை இத் தேர்தலினூடாக நிலைநிறுத்தத் தங்களாலான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்த நம்பிக்கைகளின் அடிப்படையில்தான் ஏனைய தமிழ் இயக்கங்களுடனான கூட்டையும் இவர்கள் நிராகரித்துள்ளனர். முன்னாள் பா.உ. பிரின்ஸ் காசிநாதர் இம்முறை தேர்தலில் நிற்க மறுத்ததையடுத்து பொருத்தமான வேட்பாளரைத் தேடுவதிலேயே இவர்கள் அதிக கவனம் செலுத்துகின்றனர். இந்திய அமைதிப்படை நிலை கொண்டிருந்தபோது நடாத்திய தேர்தலைப் போன்று இம்முறை நடாத்த முடியாது என்பதனால் பொதுமக்கள் அபிமானம் பெற்றவர்களை தேர்தலில் நிறுத்தி அதனூடாக வெற்றியடைய முயற்சிக்கின்றனர்.

இதேவேளை ரெலோ, புளொட், ஈரோஸ் கூட்டு முன்னணியைப் பொறுத்தவரை இவர்கள் தங்கள் இயக்கங்களின் சக்தியை நம்பித்தான் தேர்தலில் குதித்துள்ளார்கள். கடந்த பிரதேசசபைத் தேர்தலில் ரெலோ சார்பான சுயேட்சைக் குழு வெற்றி பெற்றதை அடுத்து இத் தேர்தலிலும் ரெலோ என்ற பெயரை முன்னிறுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர். அத்தோடு முழுக்க முழுக்க இயக்க உறுப்பினர்களாளேயே வேட்பாளர்களையும் நிறுத்த முயற்சிக்கின்றனர். ஆனால் பாராளுமன்றத் தேர்தலையொட்டிய நிலைமைகள் இவர்களுக்குச் சார்பானதாகத் தென்படவில்லை. ஏனைய கட்சிகளான கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப் என்பவற்றோடு ஒப்பிடும் போது அரசுடன் சேர்ந்து நின்று தமிழ் மக்களைக் கொன்றதில் இவர்களுக்கு ஒரு பங்குண்டு என்பது மறுக்கமுடியாத ஒன்று. கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப் என்பன பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடாத காரணத்தினால் ரெலோ கூட்டு முன்னணியினர் வெல்வதற்கான சாத்தியம் இருந்தது. ஆனால் தற்போதைய நிலைமை அவ்வாறு இல்லை.

தமிழ்க் கட்சிகள் இவ்வாறு மும்முனைப் போட்டியில் ஈடுபட தமிழ் மக்களின் வாக்குகளும் மூன்றாய்ப் பிரிந்து போய்விடும். எனவே இடையில் தனக்குக் கிடைக்கும் சொற்ப வாக்குகளைக் கொண்டு தாம் வென்றுவிடலாம் என்ற முழுக் கனவோடு ஐ.தே.க இருக்கின்றது. அதே சமயம் தமிழ் வாக்குகளை மேலும் பிரிப்பதற்காக கடந்த மாகாண சபையில் உறுப்பினராக இருந்து பின்பு ஈ.பி.டி.பியுடன் இந்தியாவுக்குச் சென்று, திரும்பிவந்து இலங்கை இராணுவத்துடன் பழுகாமம் என்னும் இடத்தில் இருந்து பலமான அடாவடித்தனங்களில் ஈடுபட்ட காளிதாஸ் என அழைக்கப்படும் இராசையா கோவிந்தராஜா என்பவரின் தலைமையிலும் ஒரு சுயேட்சைக் குழுவை நிறுத்த ஐ.தே.க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்காக காளிதாசுக்கு ரூபா நாலு லட்சம் விலை பேசப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. அதேசமயம், ஐ.தே.க வேட்பாளர் பட்டியலிலிருந்து ஈஸ்வரன், பத்மநாதன் ஆகியோர் ஓரம் கட்டப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

மட்டக்களப்பு அரச அதிபர் மோன குருசாமியிடம் நீங்களும் ஐ.தே.க சார்பில் போட்டியிடப் போவதாகக் கூறுகின்றார்களே அது உண்மையா எனக் கேட்டதற்கு 'கவிழப் போகின்ற கப்பலில் யாராவது நம்பி ஏறுவார்களா?' எனத் திருப்பிக் கேட்டுள்ளார். ஐயா பிழைக்கத் தெரிந்தவர். புலிக்கு வாலும் ஆனைக்குத் தலையும் காட்டிப் பிழைத்தவர் ஆயிற்றே.

**சத்தியேந்திரா**



# தேர்தல் களத்தில்...

## மண்ணைக்காக்க ஆணையிடுங்கள்!

மக்களையும் மண்ணையும் பாதுகாக்கும் வரலாற்றுக் கடமை எம் முன்னே இருப்பதாலேயே தேர்தலில் போட்டியிடுகிறோம். எனவே அதற்காக உங்கள் ஆணையை எமக்குத் தாருங்கள்.

-தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணி

## அறிவுக் கொழுந்துகள் நாமே!

சந்திரிகா குமாரணதுங்கா அணி இனப்பிரச்சினையை தீர்க்கக்கூடியதாக புதிய அரசியல் திட்டத்தை உருவாக்கப் போவதாகக் கூறியுள்ளது. அப்போது தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கக்கூடியதான ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குவதற்கு பாராளுமன்றத்தில் எழுதி வாசிக்கும் எம்.பீக்களா அல்லது அறிவின் அடிப்படையில் பேசக்கூடிய த.வி.கூவினரா தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதனை தீர்மானியுங்கள்.

-கூட்டணி

## எதிர்ப்புக் காட்டுவதற்கு நான்!

ஒரு தமிழன் தேர்தலில் போட்டியிட வேண்டும். அவனுக்கு தமிழர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும். தமிழர் பிரச்சினையை கையாள்வதில் சூடு சுரணையற்ற பாராமுகமான போக்கைக் கடைப்பிடிக்கும் ஐ.தே.க.வுக்கும் ஸ்ரீ.ல.சு.க.வுக்கும் எதிராக தமிழர்கள் எதிர்ப்புக்காட்ட வேண்டும். அதற்காகவே போட்டியிடுகிறோம்.

-குமார்.

## எங்கள் பிச்சையில் உங்கள் வெற்றி!

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடாது என முடிவு செய்துள்ளது. காரணம் தமிழர் மகாசங்கத்தின் சார்பில் போட்டியிடும் சுயேட்சைக்குழுவிற்கு விட்டுக் கொடுப்பதற்காகவே ஆகும். அதாவது அம்பாறை மாவட்டத்தின் தேர்தல் நிலவரத்தை மனதிற்கொண்டு அங்கு தமிழர் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற நோக்குடனேயே இம்முடிவுக்கு வந்ததாக அதன் செயலாளர் நாயகம் முடிவு செய்துள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

-செய்தி

## ஐக்கியமில்லையேல் முற்போக்கு!

தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது போல தமிழ் அரசியல் சக்திகளை ஐக்கியப்படுத்தி பொதுத் தேர்தலில் போட்டியிட முனைந்தோம். ஆனால் ஐக்கியம் கைகூடவில்லை. எனவே முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து போட்டியிடுகிறோம்.

- ஈ.பி.ஆர்.எல்.எப்.

# வாசு கட்சி மாறிய கதை!

பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு முன்னாள் எம்.பி.வாசுதேவ நாணயக்கார நவசமசமாஜக் கட்சியிலிருந்து விலகி மீண்டும் தனது பழைய கட்சியான சமசமாஜக் கட்சியில் சேர்ந்து கொண்டார். பொ.ச.ஐ முன்னணியின் பட்டியலில் இரத்திபுரி ஆசனத்தில் கேட்பதற்கு வசதியாக இக் கட்சி மாறல் நடைபெற்றுள்ளதாக தெரியவருகிறது.

ஐ.தே.க.வை தோற்கடிப்பதை நோக்கமாகக் கொண்டு ந.ச.ச.கட்சியானது ஆரம்பத்தில் பொது சன ஐக்கிய முன்னணியுடன் சில உடன்பாடுகளுக்கு வந்திருந்தது. இவ்வுடன்பாடுகளில் முக்கியமானது. பொ.ஜ.ஐ முன்னணியில் மேடைகளில் தமது தனித்துவத்தைப் பேணும் வகையில் தமது கொள்கைகளை மட்டுமே பேசுவோம் என்பதாகும். இவ் உடன்பாட்டுடன் மூன்று ஆசனங்கள் பொ.ஜ.ஐ.முவால் ஒதுக்கப்பட்டிருந்தன. ஆயினும் பொ.ஜ.ஐ.முன்னணிக்கு இவ்வுடன்பாட்டுக்கு வரும் பொழுதே ந.ச.ச.கட்சியில் இருந்த வாசுவை தனியே பிரித்தெடுக்கும் உள்நோக்கம் இருந்ததாக தெரியவருகிறது.

ந.ச.ச.கட்சியிலுள்ள விக்கிரமபாகு குழுவினர் பொ.ஜ.ஐ முன்னணியுடன் சேருவதை விரும்பாதவர்களாக இருந்ததால், வாசுவை பிரித்தெடுக்க அது முயன்று வந்தது. கட்சியின் உடன்பாடு இல்லாமல் வாசு தனிப்பட்ட முறையில் சில உடன்பாடுகளை பொ.ஜ.ஐ.முன்னணியுடன் ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அதேவேளை ந.ச.ச.கட்சியுடனான மேற்கூறிய உடன்பாட்டுக்கு பொ.ஜ.ஐ முன்னணிக்குள் பலத்த எதிர்ப்பு கிளம்பியதும் இவ்வுடன்பாடு முறிவுற்றது. ந.ச.ச.கட்சிக்கும், பொ.ஜ.ஐ.முன்னணிக்குமான தொடர்புகளும் முறிவடைந்தன. ஆயினும் உட்கட்சி ஜனநாயகம் என்ற பேரில் வாசு பொ.ஜ.ஐ. முன்னணியில் கேட்பதை ந.ச.ச. கட்சி ஒப்புக் கொண்டது. ஆனால் அவரது கட்சி அங்கத்துவம் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டது. ஆயினும் ந.ச.ச.கட்சியின் பொது செயலாளரின் கையொப்பமின்றி பொ.ஜ.ஐ.முன்னணியில் கட்சியின் சார்பாக அவர் போட்டியிட முடியாது என்ற நிலை எழுந்தது. எனவே வேறுவழியின்றி 18 வருடங்களுக்குப் பிறகு தனது பழைய கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியில் சேர்ந்து கொண்டு இரத்தினபுரி ஆசனத்திற்கு தேர்தலில் போட்டியிடுகிறார் வாசுதேவ.

இதுதான், ''பாராளுமன்றம் வெறும் மேடையே' என்று முழங்கிய வாசுவின் கட்சி மாறிய கதை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சரிநிகர்
4.ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 584380

## புதிய சந்திரிகையும் வால் வெள்ளியும்

"The King is dead; Long Live the King" என்று ஒரு ஆங்கிலப் பழமொழி இருக்கிறது. மன்னன் இறந்து விட்டான்; ஆனால் மன்னன் நீடுழி வாழ்க என்று தெரிவிக்கும் இப்பழமொழியின் தாற்பரியம் ஒரு மன்னன் போய்விட்டால் இன்னொருவன் வருவான். நிலைமை பழையபடி தொடரும் என்பதாகும். மன்னனுக்குப் பதில் மகாராணி வந்தாலும் நிலைமை ஒன்றுதான் என்பதும் சொல்லாமல் தெரிவதே.

ஐ.தே.கட்சியின் பதினேழு வருடக் கொடுங்கோல் ஆட்சிக்குப் பிற்பாடு ஒரு நம்பிக்கைச் சந்திரிகையாகப் பொது ஜன ஐக்கிய முன்னணி காலித்துள்ளது என்ற அபிப்பிராயம் தென்னிலங்கையில் பல மட்டங்களிலும் பரவலாக உருவாகி வருகிறது. இந்த நம்பிக்கை தமிழ் அரசியலாளர் பலரையும் விட்டு வைக்கவில்லை என்றும் தெளிவாகத் தெரிகிறது.

மூஸ்லீம் காங்கிரஸ் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்து கொள்ள ஈ.பி.ஆர்.எல்.எப் வட கிழக்கு தவிர்ந்த பிரதேசங்களில் ஆதரவு அளிக்கிறது.

யுத்தத்தை நிறுத்துதல், இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு, மக்களுக்குச் சுதந்திரமும் ஜனநாயகமும் என்று மிகக் கவர்ச்சியான கோஷங்கள் பொ.ஐ.முன்னணியில் முன் வைக்கப்படுகின்றன.

யுத்த நிலை நீடிக்கும் தமிழ், முஸ்லீம் பிரதேசங்களில் தேர்தல் திருவிழா நடத்துவது ஒரு மோசடியே என்ற எமது நிலைப்பாட்டுக்கு அப்பால், தென்னிலங்கை அரசியல் நிலைமையையும் ஒருதரம் விசாரணைக்குள்ளாக்க வேண்டும்.

ஆய்வாளர்கள், அறிஞர்கள், (லால் ஜயவர்த்தனா, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், கலாநிதி.வி.வர்ணபாலா...) "முற்போக்கு வாதிகள்" எனப் பலரை முன்னணிக்குக் கொண்டு வரப்போவதாகச் சொல்கிற பொ.ஐ.மு.அடித்தளம் இன்னும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பதை தமிழ், முஸ்லீம் மக்கள் மறந்து விட முடியாது.

பாரம்பரியமாகவே சி.சு.கட்சி மலையகத் தமிழருக்கு எதிரான வெறித்தனமான கொள்கைகளை அமுல்படுத்தி வந்துள்ளது. சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்துக்கு அப்பால் ஒரு சென்ரி மீற்றர் தானும் அவர்களுடைய மலையகக் கொள்கை மாற்ற மடையவில்லை. யுத்தத்தை நிறுத்துவதற்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்குமாக இன்று வரை குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எந்த உருப்படியான திட்டத்தையும் பொ.ஐ.முன்னணி முன் வைக்கவில்லை.

தாராள ஜனநாயகத்தை (Liberal Democracy) முன் வைக்கும் ஒரு இளைய, புதிய தலைமுறையே பொது ஜன ஐக்கிய முன்னணியை வழி நடத்த இருப்பதாகப் பரவலாகப் பேசப்பட்டாலும் இன்றுவரை குறிப்பான எந்த நடவடிக்கையையும் சுட்டிக்காட்ட முடியாமலுள்ளது.

தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மாற்றம் வேண்டி ஆட்சியாளரை மாற்றலாம். அதற்கான அறிகுறிகள் நிறையவே உள்ளன. இந்த ஆட்சி மாற்றம் இனப்பிரச்சினைக்கு உரிய, நீதியான தீர்வு ஒன்றைக் கொண்டு வரும் என்று நம்புபவர்கள் சாத்திரக்காரர்களாகவும், கனவுலக மனிதராகவுமே இருப்பார்கள்.

இது சோர்வுவாதம் சார்ந்த குறிப்பல்ல. எமக்குப் பின்னேயுள்ள அரசியல்/ ஒப்பந்த வரலாறும், எமக்கு முன்னேயுள்ள தேர்தல் திருவிழாக் குத்துக்கரணங்களும் நம்பிக்கைக் குறிப்பு ஒன்றை எழுத முடியாமல் தடுத்து விடுகின்றன.

அரசியல் இணக்கத்துக்கு அப்பால் சமூக இணக்கம், கலாசார இணக்கம்,பரஸ்பர கௌரவம் போன்ற அடிப்படையான அம்சங்கள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அவசியம். இவை கீழேயிருந்து மேலே எழ வேண்டிய விவகாரங்கள். இவை எழாமல் புதிய சந்திரிகைகள் உதயமானாலும் அவை வால் வெள்ளிகளாகத்தான் இருக்கும்.

## அதில் எனக்குப் பங்கில்லை! - மாவை

சரிநிகர் ஜூன்-30 - ஜூலை 13, 1994 ஏட்டின் 4ம் பக்கத்தில் "சரிநிகரிலும் சாதித்திமிரா?" எனுந் தலைப்பில் திரு.ஞானம் அவர்களால் எழுதப்பட்ட கடிதத்தில் "திரு.சி.சுந்தரலிங்கம், திரு. மாவை சேனாதிராசா அவர்களும் மாவிட்டபுரம் கோவிலுக்குள் எம்மைச் செல்லவிடாது தண்ணீர் ஊற்றியதையும்....." என்று எழுதியிருப்பது உண்மைக்கு மாறான கருத்தாகும்.

உண்மையில் திரு.சுந்தரலிங்கம் அவர்களை எதிர்த்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குள் பாகுபாடின்றி சைவ மக்கள் அனைவரும் வழிபட இடமளிக்க வேண்டும் எனப் போராடியவன் நான் என்பதிலும் அதனால் பல வசைமொழிகளையும் துன்பங்களையும் ஏற்றுக் கொண்டவன் என்பதிலும் ஆறுதல் பெறுவேன். ஆனால் இவ்வாறு உண்மைக்குப் புறம்பான செய்தியைப் பார்த்து மனவேதனையடைந்தேன்.

மாவை சேனாதிராசா
கொழும்பு




## தேர்தலைப் பகிஷ்கரித்து ஒற்றுமையைக் காட்டுவீர்களா?

யாழ்ப்பாணம் எப்படி இருக்கிறது? இங்கேயுள்ள மக்கள் வாழும் வாழ்க்கை எத்தகையத்தானது? என்பன பற்றி ஒன்றுமே தெரியாமல் தமிழ் மக்களிடம் 'வோட்டு'க் கேட்கக் கிளம்பியிருக்கும் மதிப்பிற்குரிய, மனச்சாட்சியுடைய குமார் பொன்னம்பலம் அவர்களே!

இதுவரை காலமும் எமது வோட்டுக்களை, எம்மவர்களின் பேச்சை நம்பிப் போட்டு நாம் கண்ட மிச்சம் பூச்சியம்தான். இனியும் எமது வோட்டுக்களை அர்த்தமற்றதாக ஆக்கவேண்டும் என்றா விரும்புகின்றீர்கள்? ஐ.தே.க, சு.கட்சிக்கு வோட்டுப் போட்டு எதனையுமே நாம் காணவில்லை. சரி! உங்களுக்கு வோட்டுப் போட்டு எதனைக் காணப்போகிறோம் என நினைக்கிறீர்கள்? தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் முக்கியமான யாழ் மாவட்ட மக்களில் பெரும்பான்மையோர் வாக்களிக்க முடியாதுள்ள இந்நிலையில் மிகுதித் தமிழ் மக்கள் வாக்களிக்க முனைவது தமிழ் மக்களின் மனச்சாட்சிக்கு செய்யும் துரோகமில்லையா?

தேர்தல் காலத்தில் மட்டும் மனச்சாட்சியைத் துணைக்கழைக்கும் ஆனால் மனச்சாட்சியே இல்லாத உங்களைப் போன்ற ஏனைய தமிழர்களால்தான் இன்னும் எமது ஒற்றுமையை வெளிக்காட்ட முடியாதுள்ளது. எங்கே, ஒரு தமிழராவது வேட்புமனுத்தாக்கல் செய்யாமல், எமது ஒன்றித்த நிலையை எடுத்துக் காட்டுமாறு நீங்கள் பிரச்சாரம் செய்வீர்களா? ஒரு தமிழனாவது இந்தத் தேர்தலில் வாக்களிக்காமல் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு நீங்கள் பிரச்சாரம் செய்வீர்களா?

நி.லக்ஸன்.
கொழும்பு

## யாழ்ப்பாணத்தில் பெண்களே இல்லையா?

பாரதியாரின் 'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே' என்னும் பாடல் அடியிலிருந்து பெறப்பட்ட சரிநிகர் என்னும் தொடரைப் பெயராகக் கொண்ட தங்கள் பத்திரிகையில் அடிக்கடி ஆண்வழிமுதன்மை நோக்கும், பெண் விரோதக் கருத்துக்களும் இடம் பெறுவது விசனிக்கத்தக்கதாகும்.

குறிப்பாக மார்ச் -23 -1994 சரிநிகரில் ஈழமோகத்தின் செய்யுள் "....காசுக்காய் படுக்காத தாசியெவள் பகர்" என்று பெண்குரோதத் தொனியுடன் அமைந்திருந்தது. சலுகைகளுக்காய் கொள்கை மாறும் அரசியல் வாதிகளை விபரிக்க வேறு சொற்கள் கிடைக்கவில்லையா? சில பெண்கள் விபசாரத்திற்கு நிர்ப்பந்திக்கப்படும் சமூகக் காரணங்கள் பற்றி சரிநிகர் அறிந்திருக்குமென நினைக்கிறேன்.

பால், வர்க்க, சாதி, இனத்துவரீதியான சமத்துவ நோக்குநிலை கொண்டது என உரிமை கோரும் (கவனிக்க: நான் இங்கு 'மார்தட்டிக் கொள்ளும்' என ஆண்வழிப்பட்ட மரபுத் தொடரைக் கையாளவில்லை) சரிநிகர் இது குறித்து சொல்லும் செயலும் ஒன்றாக நடப்பது நல்லது.

'யாழ்ப்பாணம் இன்று', 'எதிலிருந்து தொடங்குவது?' போன்ற தொடர் கட்டுரைகளிலும் முற்றிலும் ஆண்வழி நோக்கே தென்படுகிறது. இக்கட்டுரைத் தொடரை வாசித்த போது யாழ்ப்பாணத்தில் பெண்கள் இல்லை என்ற கருத்துடன் எழுதப்பட்டது போலத் தோன்றியது. வியாபாரம் செய்வதும், விறகு தேடுவதும், தோட்டத்திற்கு பட்டையால் தண்ணீர் இறைப்பதும் ஆண்கள் மட்டும்தானா? அருணா பரமேஸ்வரன் டேவிட் நந்தகுமார் ஆகியோரின் கண்களில்தான் பெண்கள் படவில்லை என்றால் கட்டுரைத் தொடர்களைப் பிரசுரிக்கும் ஆசிரியபீடத்தினரும் gender blindness ஆல் பாதிக்கப்பட்டுள்ளார்களா?

க.ராஜலஷ்மி
மட்டக்களப்பு

## நான் சொன்னால் மிகையாமோ?

அவ்வப்போது சூர்யா, மற்றும் சிலர் உணர்ச்சி வசப்பட்டு விடுகின்றனர். அல்லது தங்களது சுயரூபத்தை வெளிப்படுத்தி விடுகின்றனர். இப்போதெல்லாம் சரிநிகர் படிக்கும் முன்பு "சொல்லைக் கவனி. சொல்பவனைக் கவனிக்காதே" என்ற வாசகத்தை உச்சரித்து விட்டே படிக்கின்றேன்.

சரிநிகரின் வைராக்கியங்களில் ஒன்று: தமிழ் படைப்பாளிகளை, தமிழ் படைப்புகளை குற்றம் காண்பது, புறக்கணிப்பது (தங்களை சார்ந்தவர்கள் மட்டும் விதிவிலக்கு)

இதன் கீழ் அண்மையில் சுபமங்களா, இந்தியாருடே இரு இதழ்கள் மீது தன் இயாலாமையை - குற்றவாளிகளாக்கி சூர்யா எழுதி இருந்தார். ஒரு சராசரி படைப்பாளிக்கு இருக்க கூடிய உயர்ந்த மனசு அவரிடம் இல்லாமல் போனது மிகுந்த வேதனையைத் தந்தது. சூர்யா இப்படி சரிந்து போவார் என்று நான் எண்ணவே இல்லை.

மிகத் "தெளிவான", "முரண் அற்ற" அவரது எழுத்தின் சில வரிகளை பாருங்கள்.

"...பிரதான காரணம் வேறு. சுபமங்களா, இந்தியா ருடே ஆகிய இவ்விரு இதழ்களும், இலங்கையிலும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழரிடையேயும் அதிகளவில் விற்பனையாகின்றன. அதனால் இதனை வியாபார தந்திரமாகவும் கொள்ளலாம்.

இந்த ஆராய்ச்சி முடிவை எழுதச் சூர்யாவாலும், வெளியிட சரிநிகராலுமே முடியும்.

இந்தியா ருடே தொடங்கி ஒரு தசாப்தம் முடியவில்லை. கடந்த வருடம் தான் இலக்கிய மலரை முதன் முதலாக வெளியிட்டனர். இரண்டாவது இலக்கிய ஆண்டு 'இலங்கை எழுத்து'க்கென 25 பக்கத்தை ஒதுக்கி உள்ளதைப் பாராட்டாமல் இப்படி எழுத எப்படி மனம் துணிந்தது.

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கோபத்திலும் சிரிக்க வைக்கும் கிரிஷாந்த எனும் கவி !

—சுப்புக்குட்டி

எங்களுடைய மக்களில்
பத்து வீதத்துக்கும் குறைவானோரே
கிறிக்கற் விளையாடுகிறார்கள் அல்லது
கிறிக்கற் விளையாட்டைப் பார்க்கிறார்கள்.
என்றாலும்
அது ஒரு தேசிய விளையாட்டு என்று
சொல்லப்படுகிறது..
எங்களுடைய மக்களில்
இருபது வீதத்துக்கும் அதிகமானோர்
பேசுவது: தமிழ்
என்றாலும் அவர்களுக்குப் பேர்
சிறுபான்மை மக்கள்!

திம்பிரிகஸ்ஸாய, கொழும்பில் பிறந்து பதினேழாவது வயதில் கனடாவுக்குப் புலம் பெயர்ந்து சென்று இப்போது கொழும்பு திரும்பியிருக்கும் கிறிஸாந்த சிறீ பாக்கியதத்தா எனும் கவிஞரின் சமீபத்திய வெளியீடான The 52nd state of Amnesia எனும் கவிதைத் தொகுதியிலுள்ள ஒரு சிறு கவிதையே மேலுள்ளது.

1971 சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சியோடு ஈடுபாடு கொண்டிருந்த கிறிஸாந்த அரசியல் தீவிரமும் கவிதா ஆவேசமும் ஒன்றிணையப் பெற்றவர். ஆங்கிலத்திலேயே எழுதி வரும் கிறிஸாந்த கடந்த இருபது வருடங்களாகக் கனடாவின் தென்னாசிய இலக்கியவாதிகளிடையேயும், கனடாவின் கவிதை உலகிலும் பரவலாக முக்கியத்துவம் பெற்றிருப்பவர். அவருடைய முதலாவது கவிதைத் தொகுதி Domestic Bliss. 1981இல் ரொறன்ரோவில் வெளியிடப்பட்டது. தன்னுடைய ஆரம்ப காலக் கவிதைகளே பெரும்பாலும் அதில் இடம் பெற்றுள்ளன என்று கூறும் கிறிஸாந்தவின் இரண்டாவது தொகுதி கனடாவின் இடதுசாரி மற்றும் தொழிற்சங்க வட்டாரங்களில் பெரிய சலசலப்பையும் வரவேற்பையும் பெற்றது.

The Only Minority Is The Bourgeoisiec(ஒரேயொரு சிறுபான்மையினர் பூர்ஷுவாக்கள் மட்டுமே) எனும் அத்தொகுப்பு ரொறன்றோ கறுப்பு நிலா வெளியீட்டாளர்களால் 1983 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. சென்ற வருட இறுதியில் கிறிஸாந்தவின் மூன்றாவது நூலான The 52nd State of Amnesia (நினைவுகள் தொலைந்த 52வது மாநிலம்) வெளியாகிற்று.

கிறிஸாந்தவின் கவிதைகள் பெரும்பாலும் ''எதிர்க்- கவிதை''கள். பாரம்பரியமான கவிதை அணிகள், அழகியல் கூறுகள் பலவற்றைப் புறந்தள்ளி விட்டு உடனடி அரசியல் செய்திகள், இனவாதம், நிறவாதம், மேலாதிக்க எதிர்ப்பு போன்றவற்றைக் கவிதைக்கும் வசனத்துக்கும் இடைப்பட்ட ஒரு தளத்தில் அங்கதச் சுவையோடு எழுதுகிறார் அவர்.

இனவெறி/ நிறவெறி இவற்றுக்கெதிரான போராட்டங்களிலும் தொழிலாளர்களுக்கு கல்வியறிவூட்டும் இயக்கங்களிலும் கனடாவில் பணிபுரிந்து வருகிறார் கிறிஸாந்த. இவருடைய அனுபவங்கள் மற்றும் அரசியல் நோக்குகள் Rivers have Sources; Trees have roots என்ற பெயரில் வெளியாகியுள்ளன.

ஒரு லட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் (இவர்களுள் மிகப் பெரும்பான்மையானோர் தமிழர்கள்) மற்றும் பல்வேறு இன மக்கள் கனடாவில் வாழ்ந்து வருகிறபோதும் கனடாவின் ''தேசிய மனோநிலை'' இன்றும் வெள்ளைக்கார - கொலனித்துவ மனோநிலையாகவே இருக்கிறது என்று சீறுகிறார் கிறிஸாந்த.

''அரசியல் தஞ்சம் கோரியும் அகதி நிலை கோரிலும் கனடாவுக்குள் நுழைபவர்களின் நிலை மழைக்கொதுங்கி மரத்தின் கீழ் நின்றவர்களின் நிலை போல உள்ளது. இரண்டுதரம் நனைய வேண்டும்.'' என்று கனடாவின் வெள்ளை நிறவெறி பற்றிக் குறிப்பிடுகிறார்.

''ஒப அமெரிக்காவுக்கு அகதிகளாக வரும் எல்லாவகையான மக்களுக்கும் கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் படுமோசமான நிற/இன வெறிக் கொள்கைகளின் வரலாறு தெரிவதில்லை.

40மில்லியன் பூர்விக மக்களை (''செவ்விந்தியர்கள்'') கொன்றொழித்த பிற்பாடுதான் வெள்ளையரின் ஆதிக்கம் வட அமெரிக்காவில் வந்தது. இந்தப் பூர்வீக குடிகளை ஒழிப்பதற்கு சின்னம்மை போன்ற பல பயங்கரமான தொற்று நோய்களை உயிரியல் ஆயுதமாக (Biological Weapons) வெள்ளையர்கள் நீண்ட காலம் பயன்படுத்தி வந்துள்ளனர் என்று தகவல் தருகிற கிறிஸாந்த கனடாவுக்குப் புலம் பெயரும் பெரும்பாலான இலங்கையர்கள் ஆங்கில மோகிகளாகவும், தமது இனத்தின், தமது மொழியின், தமது கலாசாரத்தின் மீதான ஒரு கேவலமான சுய- வெறுப்புள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்று கோபப்படுகிறார். நியாயம்தானே!

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பற்றி அறிந்து/ உணர்ந்து கொள்ளத் தான் கனடாவுக்குத்தான் போக வேண்டி நேர்ந்தமை இலங்கைப் பேரினவாத அரசியலின் மோசமான விளைவு என்று ஆதங்கப்படுகிறார். 1983 பெப்ரவரியில் யாழ்ப்பாணம் சென்று மீண்டு தன்னுடைய அனுபவங்களைப் பற்றி கிறிஸாந்த எழுதிய கவிதை ஒன்று இங்கு தரப்படுகிறது.

## ஈழத்துக்குச் செல்லும் ஒரு பகல்நேர ரயில், பெப்ரவரி 1983

## (வ.ஐ.ச.ஜெயபாலனுக்கு)

பார்த்தேன்:
கடலோரம் வெள்ளைச்சதுரங்கள்,
உணர்வற்று வெறித்த வானத்தை நோக்கி
அமிலப்புகை கக்கும் வெள்ளைப்
புகைபோக்கிகள்

பார்த்தேன்:
தலைநகரையும் கிராமப்புறத்தையுமிணைக்கும்
ஒரு பாலத்தை.
அது ஆற்றின் மேலாக, ரயிலின் பாரத்தில்
கிறீச்சிடுகிறது...
செத்துப் பிறந்த தேசத்தின் மலர்களை,
குழந்தைகளினுடல்களை
இந்த ஆற்றில் தான் மிதக்க விட்டார்கள்
(அதற்குப் பிறகு மீன் சாப்பிடுவதையே
விட்டு விட்டேன் என்று அஜித்தா சொன்னாள்!)
சாந்தேஸ்ட்டில் பயின்ற பிரிகேடியர் ஜெனரல்
சொன்னதோ:
வியட்நாமிலிருந்து நாங்கள் பாடம் கற்றுக்
கொண்டோம்.

பார்த்தேன்:
சாம்பல் தண்டவாளங்களுக்கும்
பச்சை வயல்களுக்கு மிடையே
பாடசாலை செல்லும் வழியில்
புத்தகங்களற்ற கைகளுடன்
தூய ஆடை அணிந்த குழந்தைகளை
ரயில் அவர்களருகாக விரைகிற போது
நின்று தலையைத் திருப்புகிறார்கள்

பார்த்தேன்:
உதைவாங்கி, இரத்தத்தில் தோய்ந்தபடி
நடுங்கிக் கொண்டிருக்கும் ஒரு தமிழன்
வெளியே தூக்கி விசப்படுவதை.
ரயில் நிற்கிறது.
அவனுடைய மணிக்கூட்டையும்
பொருள்களையும்
யாரோ அவனருகில் வைக்கிறார்கள்.
தலைத்தெறித்தோடுகிறது நிமிடக் கம்பி
அவனுடைய கண்களைப் போல

பார்த்தேன்:
ஒவ்வொரு பத்துசெக்கனுக்கும் ஒரு
புதுவகைப் பூவை

பார்த்தேன்:
தாமிரநிறத்திலிருந்து செம்மஞ்சளுக்கும்
பின்பு சிவப்புக்கும் என மண்நிறம்
மாறுவதை.

பார்த்தேன்:
ஆகாயத்தை நோக்கித் தன்னையே தூக்கும்
ஒரு கறுப்பு மலையை.
அது யானைத் தலை போல..

பார்த்தேன்:
வெண்ணிற வண்ணாத்துப் பூச்சிகளின்
பெரிய பட்டாளங்கள்
இருபுறமும் ரயிலை வழி நடத்திச் செல்வதை...

பார்த்தேன்:
தங்கள் பசுமையால்
என்னை அழ வைத்த மரங்களை.
பார்த்தேன்; 71 இல் சிங்களக் குழந்தைகளைப்
புதைத்த நிலத்தை.
பார்த்தேன்; பழைய மரங்களை, ஓலமிடும் மரங்களை
பார்த்தேன்:
தமிழ் இளைஞரை வதை செய்யும் 'இறவை'.
பிறகு
மௌனம்.
திடீரெனச் சமதரையாய் விரிந்தது வெளி.
அகலக்கைகளை நீட்டியபடி.
நிலா ஒளிர்வித்த உயரப்பனைகள்
தனித்து நிற்பன-
உப்பு- வெள்ளை மணலிலிருந்து
விரல்களைப் போல ஊசிகள் போல்
வெளியே தெரிவன..

அவன் சொன்னான்:

எமது பழைய நண்பர்கள்
புதைகுழியிலிருந்து எழுந்து
கல்லறை மீது அமர்ந்திருக்கிறார்கள்
உன்னை வரவேற்க....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புள்ளடி அரசியலுக்கு வெளியே தான் புதிய பாதை இருக்கிறது!



## குமாருக்கு ஒரு பதில்

**சோமசுந்தரம்**

மற்றெல்லா நாடுகளிலும் வாழ்கின்ற மக்களுக்கும், இந்நாட்டுத் தமிழர்களைப் போல் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் இவர்களைப் போல துரதிஸ்டம் பிடித்தவர்கள் ஒருவரும் இல்லை என்றே சொல்லிவிடலாம். அப்படி ஒரு விதி இவர்களுக்கு! ஒரு அரைநூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாக ஏமாற்றுப் பேர்வழிகளும் அரசியல் வியாபாரிகளுமான நபர்களையே தமது தலைவர்களாக கொண்டுள்ள துரதிஸ்டம் உலகத்தில் வேறெந்த இனமக்களுக்குத்தான் இருக்கிறது?

அண்மையில் தென்னாபிரிக்காவில் அதிகாரத்திற்கு வந்த கறுப்பினமக்கள் தமது உரிமைகட்காக பல தசாப்தங்களாக உறுதியாகப் போராடினார்கள்; அவர்களுக்கு தலைமை தாங்கியவர்களிடையே கொள்கை ரீதியான முரண்பாடுகள் நிறையவே இருந்தன; தமது மக்களின் விடுதலையை எப்படி வென்றெடுப்பது என்பதில் அவர்களிடையே பல தீவிரமான மோதல்கள் ஏற்பட்டுமுள்ளன. ஆனால் அவர்களில் எவருக்கேனும் தமது மக்களின் முதுகில் ஏறிச் சவாரி விட்டுக் கொள்ளும் தமது பைகளையும் வயிறுகளையும் நிரப்பிக் கொள்ளும் நோக்கம் இருந்ததில்லை. பதவி ஆசைகாட்டி கறுப்பின தலைவர்களை விலைக்கு வாங்க எந்த தென்னாபிரிக்க வெள்ளை ஆட்சியாளர்கட்கும் முடிந்ததில்லை!

பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்படுகின்ற போதும், யாசிர் அரபாத்தின் பலஸ்தீனிய விடுதலை இயக்க தலைவர்களை நோக்கி அரசியலை வயிற்றுப் பிழைப்பாக்கியதாக ஒரு குற்றச்சாட்டுக்கூட எழுந்ததில்லை. ஆனால் அரசியல் மூலம் பிழைப்பு நடத்துவதை பிரதான இலட்சியமாக கொண்டு கட்சிகள் இயங்க முடியும் என்பதற்கு உலகத்திற்கே எடுத்துக் காட்டாக விளங்குபவர்கள் தமிழ் மக்களுக்கு வாய்த்துள்ள நமது தலைவர்கள். தேர்தல் அறிவிப்பு வெளியானவுடன் இந்த தலைவர்கள் குதிக்கிற குதிப்பை பார்த்தாலே இது மிகவும் தெளிவாகிவிடும்.

சென்ற சரிநிகர் இதழில் குமார் எழுதிய கட்டுரை கூட இந்தப்போக்குக்கு இன்னொரு சான்றுதான். 'இது தான் எனது பாதை' என்று அவர் தெரிவிக்கும் பாதை - அதாவது எல்லாத் தமிழர்களும் ஒன்று சேர்ந்து ஒரு தமிழருக்கு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்பது - ஒன்றும் 'புதிய பாதை' அல்ல. ,'புதிய பாதை' என்று புறப்பட்டவர்கள் கூட விட்டு விட்டு வந்து சேர்ந்துள்ள அதே 50 ஆண்டுகளுக்கு மேலான பழைய பாதைதான்! தமிழ் மக்களை 'சுத்து சுத்தென்று சுத்திய அதே சுத்துமாத்துப் பாதைதான்!

'நான் ஒரு தமிழன்; ஆகவே எனக்கு வாக்களி' என்றுதான் எங்கள் தமிழ் தலைமைகளின் அரசியலே ஆரம்பமானது. தமிழராக இருப்பதே - அது ஒன்றே தமிழ்மக்களுக்கு தலைவராகி விடுவதற்கு போதுமான தகுதி என்றுதான் தமிழ் மக்களும் நம்பினார்கள்! ஆனால் தமிழ் மக்கள் நம்பிய தலைவர்களோ பாராளுமன்றப் பதவியிலேயே குறியாக இருந்தார்கள்; தமிழ் மக்களை ஏமாற்றுவதையே தமது அரசியல் வழிமுறையாக கொண்டிருந்தார்கள்.!

'தமிழர் பிரச்சினையை கையாளுவதில் சூடு சுரணையற்ற, பாராமுகமான போக்கை கடைப்பிடிக்கும் ஐ.தே.கவுக்கும் ஸ்ரீ.ல.சு.கக்கும் எதிராக தமிழர்கள் காட்டக்கூடிய ஒரே எதிர்ப்பு' ஒரு தமிழருக்கு வாக்களிப்பது மட்டுமே ஏன்று கூறும் குமார் பொன்னம்பலம் அவர்கள், இதே காரணத்திற்காக எத்தனை தடவை தான் தமிழ் மக்கள் வாக்களிப்பது என்பதைப்பற்றி கூறாமலே விட்டுவிட்டார்!

1977ம் தேர்தலில் கூட எல்லாத் தமிழர்களது வாக்குகளும் இலங்கை சிங்கள பேரினவாத கட்சிகளுக்கு எதிரான தமது நிலைப்பாட்டை தெரிவிப்பதற்கானதாக போடபபட வேண்டுமெனவே இந்தத் தலைவர்கள் கோரினார்கள்; தமிழீழத்திற்கு அங்கீகாரம் தரும்படி கேட்டார்கள்! தமிழ் மக்களும் கேட்டதை கொடுத்துப் பார்த்தார்கள். (இதே தேர்தலில் திருவாளர் குமார் பொன்னம்பலம் அவர்களும் போட்டியிட்டார்கள்! அவருக்கு விழுந்த வாக்குகளும் தமிழீழ ஆணைக்கு விழுந்த வாக்குகளாக கணிக்கப்பட வேண்டுமென பின்னர் அறிவித்ததாகவும் ஞாபகம்)

ஆனால் கொடுத்த ஆணையை முதல் வேலையாக உடைப்பில் போட்டுவிட்டுத்தான் மறுவேலை பார்த்தார்கள் நமது தலைவர்கள்.

எந்தத் தமிழீழம் அவசியம் என்றும், இதோ தேசிய சபையை கூட்டுகிறோம் என்றும் கூட்டணி உட்பட எந்தக் கட்சியினரும் முழங்கினார்களோ அந்த தமிழீழத்தை அடைவதற்காக ஒரு தடியைத்தானும் அவர்கள் தூக்கவில்லை. 60ம் ஆண்டு சத்தியாக்கிரகத்தையடுத்து வந்த தடுப்புக்காவலை தமது அரசிய்ல் வாழ்வுக்கு முதலாகப் போட்ட இக் கூட்டம் தமது மாபெரும் 'தியாகத்தைச்' சொல்லிச் சொல்லியே ஆயிரக்கணக்கில் தமிழ் மக்களை 'தியாகிகள்' ஆக்கினர்.

தடியை தூக்காவிட்டாலும் பரவாயில்லை, தடிக்குப் பதிலாக துவக்கைத் தூக்கியவர்களுக்கு வழிகாட்டும் நோக்கம் கூட இவர்களுக்கு இருக்கவில்லை. மாறாக அவர்களின் துவக்குகளை மேலும் மேலும் த்வறான வழிக்கு தூண்டிவிட்டு தம்மை வளர்த்துக் கொள்ளவே முனைந்தாகள். இறுதியில் அவர்களைக் காட்டிக் கொடுக்கவும் கூட தயாரானார்கள்!

இந்தத்தலைமைகள் எல்லாம் திரும்பத் திரும்ப தமிழ் மக்களிடம் கேட்பது இந்த குமாரின் 'பாதைக்கு' வரும்படிதான். அவர்களுக்கு வரும்படி சேர்க்கும் இந்தப்பாதைக்கு இலட்சிய முலாம்கள் வேறு!

இலங்கை அரசு தேர்தலை நடாத்துவதே ஒரு மோசடி; அதுவும் அதை தமிழ்ப்பகுதிகளில் நடாத்துவது அதைவிட மோசடி; இந்தத் தேர்தல்கள் மூலமாக தமிழ் மக்களுக்கு ஏதாவது கிடைக்கும் என்று இந்தக் கட்சிகள் கூறுவதுவோ அதைவிடச் சுத்தமான மோசடி. அப்படியென்றால் இந்த மோசடியான தேர்தலுக்கு புள்ளடி போடக் கேட்கின்ற பொன்னம்பலத்தின் பாதை மட்டும் என்னவாக இருக்கும்?

அவர் சொல்கின்ற விடயங்கள் எத்துணை உண்மையாக இருந்த போதும் அவர் காட்டுகின்ற பாதை எந்தவிதமான நம்பிக்கையும் அற்ற மோசடியான பாதையே! இப்பாதை இத்தனைகாலமாக உருவாக்கித் தந்ததெல்லாம் ஒருவர் பின் ஒருவராக தொடர்கின்ற வயிற்றுப்பிழைப்பு தலைவர்களை மட்டுமே!

உண்மையில் பொன்னம்பலம் கேட்பது போல பேரினவாத கட்சிகளை எதிர்ப்பதானால் அவர்களால் நடாத்தப்படும் இந்த தேர்தலை தமிழ் மக்கள் நிராகரிக்கவல்லவா வேண்டும்? அதை பகிஷ்கரிக்கவல்லவா வேண்டும். ஆனால் குமார்? அவர் புள்ளடி போட்டு எதிர்ப்பு தெரிவிக்கும் படி தமிழ் மக்களை நோக்கி கோருகின்ற போது, தமிழ் மக்களுக்கு புள்ளடி போடுதலை ஒரு மாபெரும் அரசியல் விவகாரமாக காட்டவே விரும்புகின்றார்; அதன் மூலமாக அவர் திரும்பத் திரும்ப இந்த புள்ளடி அரசியலுக்குள்ளேயே தமிழ் மக்களின் போராட்டத்தை நடாத்திவிட வழிகாட்டுகிறார் என்றே கொள்ள வேண்டும்!. உண்மையில் தமிழர் பிரச்சினை' என்று அவர் குறிப்பிடும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண 'புள்ளடி'க்குள் வழி இருப்பதாக அவர் நம்புகிறார் தானா? அல்லது மற்றெல்லாக் கட்சிகளையும் போலவே அவரும் அதே 'பிழைப்புவாத வழிமுறையைத்தான் பிரேரிக்கிறாரா?

பொன்னம்பலம் மட்டுமல்ல எந்த புள்ளடி அரசியல்வாதியும் தேர்தலை பகிஸ்கரிக்கும்படி கோரப் போவதில்லை என்பது மட்டும் உண்மை. ஏனென்றால், அவர்கள் நம்பியிருப்பதும் தங்கியிருப்பதும் அந்த ஒன்றில் மட்டும்தான். இதை விட்டுவிட்டு, வேறெந்த அரசியல் நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபடத் தயாராக இல்லை. தாமும் தமது பிழைப்பும் என்று இருக்கும் இவர்கள் தேர்தல் காலம் வந்ததும் அரசியலுக்கு வருவதற்கும் மற்றப்படி பொழுது போக்காக பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதற்கும் இதைவிட்டால் வசதியான வழி என்னதான் இருக்கிறது? தேர்தலும் இல்லையென்றால், இவர்களால் எப்படித்தான் பதவிக்கு வர முடியும்?

பொன்னம்பலத்தாருக்கு மட்டுமல்ல மற்றெல்லா அரசியல்வாதிகட்கும் தெரிவிக்க வேண்டிய ஒன்றுதான் இருக்கிறது.

அதுதான், 'புள்ளடி போடுவது புதிய பாதை அல்ல. புதிய பாதை புள்ளடி அரசியலுக்கு வெளியே இருக்கிறது' என்பது. அந்த அரசியல் பாடத்தை படிக்க இவர்கள் தயாரில்லாவிட்டால் புள்ளடியாலல்ல, தலையிலே குட்டுப் போட்டு படிப்பிப்பார்கள் தமிழ் மக்கள்.



ஆகாது பாவம்... விரட்டாதே!
முடாப்பானை போல
வயிறு
ஐந்தாறு குட்டிகளை
ஈனுமாக்கும்.

விரட்டாத விரட்டாத
ஆகாது பாவம்!
இந்தக்குட்டித்தாய்ச்சி
இருந்த இடமெல்லாம்
வெள்ளமும் தண்ணியுமாக்
கிடக்கு இப்போது.
என்னமாய்க் கொடுவுது
ஆற்றையும் கடலையும்...
வெள்ளக்காட்டையும் தொட்டு
வருகிற இந்த ஜில் காற்று
பட்டவுடன்

என்னமாய்க் கொடுவுது....
பாவம்....
போர்த்திவிட ஒரு போர்வைகொடு!
உனக்கு ஒரு
செய்தி தெரியுமா...
ஈனப்படப்போகும் இந்த
குட்டிகளின் தந்தையை
இரைதேடிப் போனவிடத்தில்
காணாமல் போ(னது)னார்.
ஓ
நீ என்ன மனிஷன்
இவ்வளவு கதைச்சும்....

சரி....நீ
ஏசு...திட்டு.... அதன்
உடம்புக்குள்ளும் பூராது
நெஞ்சுக்குள்ளும் பூராது

ஆனால் விரட்டாத!
ஆக்கித்திண்ட சோத்தோடும்
உடுத்தி இருந்த உடுப்போடும்
ஒரு வேலைக்காரனென்று
என்னை விரட்டி இருக்கிறாயே...
வெளியேறு என்று சொல்லி
இருக்கிறாயே.... அப்படி...
அந்த வாய்பேசாப்பிராணியை...

பூனைப்பழி பொல்லாப்பழி
அதன் ஒரு மயிர்விழுந்துவிட்டால்
வானம் போல
ரொட்டி சுட்டுக் கொடுக்க வேண்டுமாம்.

இன்றைக்கோ நாளைக்கோ
இது ஈன்றுவிடும் குட்டிகளை...
வயிறு நன்றாக இறங்கியிருக்கு.

அதுவரை அதுவரை
உனதுவீட்டுத் தாழ்வாரத்தில்
இந்தப் பரிதாப ஜீவனை
குந்திக் கொண்டிருக்க விடுவாயா...
விட்டு விடு

ஆகாது பாவம்!
இனியும் விரட்டாத..!
பூனைப்பழி பொல்லாப்பழி
அதன் ஒரு மயிர் விழுந்துவிட்டால்
வானம் போல
ரொட்டி சுட்டுக் கொடுக்க வேண்டுமாம்

பூனையென்றபடியால்தான்
விரட்டுகிறாய்
புலியென்றால் விரட்டுவாயா....?

**காத்தான்குடி றஹீம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வீட்டில் வெளிச்சம். வெளியில் ஒளி. றோட்டில் பிரகாசம். எதிரில் வருகிறாளின் முகம் காணலாம். பேயாக இருக்காத வரைக்கும் என்ன பயம்?

சீமேந்துத் தூணாகப் போட்டிருக்கலாம். நிறைய நாட்கள் நீடிக்கும். மரத்தூண் என்பதனால் உக்குவதற்குச் சந்தர்ப்பம் அதிகம். எப்படித் தான் இருந்தாலும் நம்மூரிற்கு மின்சாரம் வரப்போகிறது. இது சந்தோஷத்திற்குரிய சமாச்சாரம்.

நம்மிலிருந்து இரண்டு, மூன்று வயதுதான் கூட இருக்கலாம் அவருக்கு. அவர் ஒரு கவிதை பாடினார். ''எங்கள் கிராமத்திற்கு மின்சாரம் வருகிறது'' என்று.

கறுத்தப் பனை போன்ற மின்சாரத் தூண். வெள்ளிக்கம்பி. காலையில் சூரிய ஒளிபட்டுத் தெறிக்கிறது. பல வீடுகளில் 'வயறிங்' செய்தாகி விட்டது. சிலவீடுகளில் கரகம் தூக்கியது போல் மின்சார விளக்கு. இவற்றையெல்லாம் கவிஞர் பாடி

# எதிலிருந்து தொடங்குவது?...9

ஆனால் வரப்போகிற மின்சாரம் கொஞ்சம் முன்னர் வந்திருக்கலாம். அவ்வளவு நாட்கள் தேவை இல்லை. இரண்டு மாதம் முன்னர் வந்திருக்கலாம். அப்படி வந்திருந்தால் அம்மம்மாவின் இறப்பைத் தவிர்த்திருக்கலாம்.

நம்மூரிற்கு மின்சாரம் வரப்போகிறது. இது மிகுந்த சந்தோஷத்தைத் தந்தது.

எப்ப வரும்?

எப்படியும் அம்மாள் கோயில் திருவிழாவிற்கிடையில் வரும்.

அப்ப இந்த முறை அம்மாள் கோயில் திருவிழா நம்மூரிற்கு வருகிற மின்சாரத்திலிருந்து தான் நடக்கப் போகிறது. கோயிலெங்கும் ஜெகஜ் ஜோதியாகப் பிரகாசிக்கப் போகிறது.

தோட்டத்தினுள் ஐயா கட்டியிருந்தார் சின்னக் கல்வீடொன்று. நம் வீட்டிற்கும் மின்சாரம் வந்திடப் போகிறது.

நம்மூரில் ஒரு கவிஞர் இருந்தார்.

னார். இறுதியாக இப்படி முடித்தார்.

## திரிதூண்டி விளக்கெடுத்து....



''.........

எனினும், பலவீட்டில்
திரிதூண்டி, விளக்கெடுத்துத்
தீப்பெட்டி உரசலினால்
மெதுமெதுவாய்ச் சிறுவெளிச்சம்
சிணுங்கிச் சிணுங்கி அழும்.''

இந்தக் கவிதை அப்போது மனசை என்னவோ செய்தது. ஓம், அது உண்மை தான், சில வீடென்ன, பல வீடுகளில் மின்சாரம் எடுக்க வழியில்லை. அவர்கள் என்ன செய்வார்கள்? பாவம். தொடர்ந்தும் அதே மண்ணெண்ணெய் விளக்கு. அதே திரி. அதே நெருப்புப் பெட்டி.

சோளகக் காற்றில் அணைந்து போகிற விளக்கு. விளக்குத் தூக்கி வெளியில் வரமுடியாது. பாம்பும் தெரியமாட்டாது. பின்னேரம் முற்றத்தில் கண்ட பாம்பு என்ன ஆனதோ? இரவில் அது காலுக்குள் தடக்குப்படலாம். ஆகவே இரவில் வெளியே வரத்து இல்லை. கக்கூசுக்கு வந்தால் அடக்க வேண்டியது தான். அடக் கடவுளே!

அம்மாள் கோயில் திருவிழாவிற்கிடையில் வரும் என்று நம்பியிருந்த மின்சாரம் இன்னும் வரக்காணம்.

இவ்வேளைக்குள் மின்சாரம் வந்திருந்தால் அந்த அனர்த்தம் நிகழ்ந்திருக்காது.

அம்மம்மா நம்வீட்டில் தங்கியிருந்தார். கண் அவ்வளவு தெரியாது. அவ்வளவு என்ன, துண்டறத் தெரியாது. முற்றத்தில் ஓலைத்தட்டியின் கீழ் தான் பகலில் படுப்பார். காற்றோட்டமாக இருக்கும். காலையில் நீர் தெளித்தமையால் ஈரலிப்பாகக் குளிர்ந்து போய் இருக்கும்

புளியம்பழம் சைஸில் சிறிய ஓட்டைகள் உள்ள மரக்கட்டில். சிக்குப் பிடித்து. ஊத்தையாகி எண்ணெயில் தோய்ந்து போன தலைகணி ஒரே மணம். அம்மம்மாவின் சீலையில் நல்லெண்ணெய் மணம் தான். குளிர்மை என்று சொல்லி உச்சியில் எண்ணெயை அள்ளி ஊற்றுவார். கிட்டப் போக ஏலாத மணம்.

பாக்குரல், பாக்குச் சாவி, வெத்திலைத்தட்டம், தலைகணி, இவற்றுடன் அம்மம்மா காலையில் மரக் கட்டிலுக்கு வருவார். மூன்று நேரச் சாப்பாடும் அதிலிருந்து தான். இரவு படுக்கப்போகும் போது தான் வீட்டினுள் செல்வார்.

வெத்திலைத் தட்டத்தினுள் வெத்திலையை எடுத்துவிட்டு நான் பூவரசமிலையை வைப்பதுமுண்டு. பூவரசமிலையையும் சேர்த்து உரலில் இடித்து சாப்பிடுகிற போதுதான் அது வெத்திலை அல்ல என்பது தெரியும். பொயிலைக் காம்பு என்று நினைத்து அட்டையையும் எடுத்து முறித்திருக்கிறார். அது துடித்த போது தான் தூக்கி எறிந்தார்.

## அ.டேவிட் நந்தகுமார்

இந்தச் சமயங்களிலெல்லாம் தன் 'பாழாய்போன' கண்ணைத் திட்டினார். கண்தெரியாமல் இன்னும் தன்னை வைத்திருக்கிற கடவுளைத் திட்டினார்.

அவ்வாறெல்லாம் திட்டுவதற்கு ஒருநாள் சந்தர்ப்பம் இல்லாமல் போய் விட்டது.

அம்மம்மா இரவு படுக்கப் போகிற போது, காலடியில் கைவிளக்கு இருந்திருக்கிறது. நெருப்பு சீலைத் தலைப்பில் பிடித்துக் கொண்டது. ஏற்கனவே எண்ணெய் பிசுக்கேறின சீலை. படபடவென எரியத் தொடங்கியது. சுருக்கம் விழுந்த தோலில் சூடு பட்டவுடன் தான், தான் எரிகிறேன் என்பது அம்மம்மாவுக்குத் தெரிந்தது.

(வரும்)

## ஒரு குறிப்பு:

பத்தரமுல்லையிலிருந்து சி.ஞானம் என்பவர் நான் எழுதுகிற 'எதிலிருந்து தொடங்குவது?' எனும் கட்டுரையில் சாதி அமைப்பிற்கேற்றவாறு கட்டுரையின் சில பகுதிகள் வருவதாகக் குறிப்பிட்டார்.

ஞானம் அவர்களின் ஆதங்கம் எனக்குப் புரிகிறது. ஆனால் அவருக்கு நான் சில விளக்கங்களைக் கூறவேண்டிய கடமையும் உண்டு. (''எதிலிருந்து தொடங்குவது'' ஒரு நினைவு கொள்ளல் பாணியிலான (memoirs) ஒரு படைப்பாகும்.)

இக்கட்டுரையில் வருகிற நான் 13-15 வயதிற்கிடைப்பட்ட ஒருவனாகச் சித்திரிக்கப்படுகிறான். அவன் அவ்வயதில் சாதி ஒடுக்குமுறையை ஆதரிப்பவன் என்றில்லை. ஆனால் அது தொடர்பான பிரக்ஞையற்றவனாக இருக்கிறான். சின்னத்தம்பியை, ஊரிலுள்ளோர் சின்னத்தம்பி என்கின்றனர். சரவணமுத்துவை சரவணமுத்தண்ணர் என்கின்றனர். அவ்வாறுதான் 'அவனும்' கூறுவான் அதனைமீறி சின்னத்தம்பியண்ணர் என்று எழுதியிருந்தால், அது அப்பாத்திரத்திற்கு ஊறுசெய்வதாக அமையும்.

ஆனால் காலம் செல்லச் செல்ல அவன் அரசியல், சமூக பிரக்ஞையுள்ளவனாக மாறுகிறான். அந்த வளர்ச்சியில் இச்சாதி ஒடுக்குமுறை பற்றிய பிரக்ஞை கொண்டவனாக 'அவன்' அமைகிறபோது அம்மொழிநடையிலும், மொழிப் பிரயோகத்திலும் சில மாற்றங்கள் வரத்தான் செய்யும். கட்டுரை முடிகிறவரை ஞானம் அவர்கள் பொறுத்திருக்கலாம். முழுமையான கட்டுரையை வாசித்து முடித்துவிட்டு கருத்துக் கூறியிருக்கலாம்.

இதே பிரச்சினை பெண்ணிலைவாதத்திலிருந்தும் எழுப்பப்படலாம். ஆணைச் சார்ந்துதான் இக்கட்டுரை வளர்த்துச் செல்லப்படுகின்றது. இதில் வருகிற 'அவன்' ஆணே. காலங்காலமாக 'அவனில்' ஊட்டி வளர்க்கப்பட்ட மொழிப் பிரயோகமும் ஆணாதிக்க நிலைப்பட்டதே. பேராசிரியர் சிவத்தம்பி கூட ''யார் இந்த யாழ்ப்பாணத்தான்'' என, ஆண் நிலைப்பட்ட கட்டுரை எழுதுகிறார். ''யார் இந்த யாழ்ப்பாணத்தார்?'' என அவரால் தலைப்பு கொடுக்க முடியாது போய்விட்டது. இதனால் பேராசிரியர் சிவத்தம்பியை ஆணாதிக்கவாதி என அழைத்து விட முடியாது. காலங்காலமாக பழகி வந்த அதேமொழிப்பிரயோகம் ஒரு நாளில் ஒரு இரவில் மாறிவிடும் என எதிர்பார்க்க முடியாது. எழுத்துச் சீர்திருத்தம் இன்னும் பலரின் கையில் எவ்வாறு பழக்கப்படவில்லையோ அதே போலத்தான் இதுவும்.

அ.டேவிட் நந்தகுமார் ஆகிய நான் சாதி ஒடுக்குமுறையாளனோ, ஆணாதிக்கவாதியோ அல்ல. சாதி ஒடுக்குமுறை தொடர்பான மொழிப்பிரயோகத்தில் அப்பாத்திரத்தின் வளர்ச்சிக்கேற்ப மாறுபாடடைகிற சந்தர்ப்பம் உண்டு. ஆண் நிலைப்பட்ட மொழிப்பிரயோகம் தொடர்வதற்கும் 'அவன்' எனும் பாத்திரத்தின் குணாம்சம் ஒரு காரணம். இம்மொழிப்பிரயோகத்தை மாற்றுகிற போது, செயற்கையாகி, கட்டுரை தன் 'அழகை' இழந்துவிடுமோ என அஞ்சுகிறேன். இலக்கியத்தின் இத்தகைய அம்சங்கள் தொடர்பாகப் பல விவாதங்கள் இடம் பெற்று வருவதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

அ.டேவிட்நந்தகுமார்

## திகிலுறையுமோர் பொழுதில்

பொட்டைப் போலவது
வெள்ளை தெரியா இருட்டு, இரவு
நிலவோ உருகிலால்
போர்த்தித் தூங்கிப்போய் நெடுநேரமாயிற்று

வாழ்வின் நெருக்குதல் நீங்கி
பரபரப்பு மறந்து
சற்றேயுறங்க முனையும் ஆன்மா.
ஆயினும்
தூரத்தே கேட்கிற நாய்க்குரைப்பால்
திகிலுறையும் மனதுள்,
நடுக்கம் பரவும் உணர்ந்தன்றோ

தொடர்ந்து திடீரெனக் கேட்ட
துவக்குவெடியோசை
அடிக்கடி உதட்டை ஈரப்படுத்த
நீர்ப்பந்திக்கும் நாக்கை

சென்ற பகுதியுத்து
ஒழுங்கைத்தலையருகே தெருவால்;
கண்ணு கலந்து கண்களோடு
பீதியழிய வாழ்த்தவர்களாக

மால் உச்சிய நேரம்
கருமையாகக் கத்தின காகத்தின் கத்தலை
இனைப்பட்டு நியாயப்படுத்துகிறதே
துவளமாயிருப்பா பக்கத்து வீட்டுக் கிழவி

வருந்தியபடியவாறே
தெருவால் பறந்து போகிற சைக்கிள்கள்
கையது காலது வைக்கும்

நெருங்கியவர்களின் உயிரோடிருப்பை
உறுதி செய்தபின்
சற்றே குறையும் நடுக்கம்
மீண்டும் அடிநாக்கு நீடூழி ஏரலிக்கும்

இருந்தும்.
தூரத்தே யாரோவைக்கிற ஒப்பாரியால்
கவியுமோர் கவலை
நாளைய ஒப்பாரி யாருக்காகவாருக்குமோவென

940317 — ஏ.எம். றஸ்மி



## வானத்தைப் பார்ப்பவர்கள்

ஜன்னலினூடே நீள்சதுரமாய்
நீண்டு அசையாது விசாலித்துக் கிடந்தது
நள்ளிரவு தாண்டிய வானம்...
அது – மனம் போலவே –
தளர்ந்து இருண்டு துக்கம் தேக்கிக் கிடந்தது...

—●—

குளு குளு வென்று
வேப்பமரங் களினூடாக இறங்கும்
நட்சத்திர மினுக்குகளை அதிற்காணவில்லை...
வானம் அழகிய சௌந்தர்யத்த
கவிதையையும் காணவில்லை...
கணவனை சுமந்திய மனைவியின்
முகம் போல் – அது
துயரத்தால் சுழித்தது....

—●—

அமைதியை உட்கொண்டு எழுந்தபட்சிகளும்
வேட்டையைக் குறித்த நினைவுகளுடன் பறந்தன...
செடிகளும் தங்கத் தளிர்களும் கூட
பொட்டுப் பூச்செடிகளும் பயந்தன...

—●—

பறக்கும் ஒவ்வொரு பட்சிகளும்
துயரத்திலும் பயத்திலும் தோய்வதும்...
சவ சடங்கு முடிந்த வீட்டின் மௌனமும்
வானமெங்கும் தேங்கிக் கிடப்பதும்....
ஓர் எச்சரிக்கை போல் பீதி தருகிறது..
மனத்தில்... வானத்தில்...
காற்று... மழை... அனைத்திலும்
குடி கொண்ட பீதி...

—●—

எனினும் வானம் –
இவற்றையெல்லாம் கணக்கிலெடுக்காமல்
ஆர்ப்பாட்டமும் இரைச்சலும் மிக்க சூழலுக்கு வெளியே
தன் நீலக் கருப்பினுள் கண்விழித்துக் கிடக்கிறது
நாளை விடியுமென்ற நம்பிக்கையை மென்றபடி...!
நாங்களோ இன்னும் –
தண்ணீரில் மிதக்கிற கப்பல்களாய்ப் போனபடி....!

-நற்பிட்டிமுனை பளீல்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இந்தியாவும் தமிழ்த் தேசியப் பிரச்சினையும் - 7

# இலங்கை இந்திய அரசுகள் கண்ட உண்மை: எதிரிக்கு எதிரி நண்பன்!

டி.சிவராம்



### முதலாவது கட்டம்: போ என்றால் போ! நில் என்றால் நில்!

இலங்கைத் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீட்டை இரண்டு கால கட்டங்களாகப் பிரிக்கலாம். அவை இரண்டும், இந்திய ஆளும் வர்க்கம் தமிழ்த் தேசியம் தொடர்பாகக் கொண்டிருந்த இரு கண்ணோட்டங்களைப் பிரதிபலிப்பனவாகும்.

''இலங்கை என்ற அண்டை நாடு நம் நலன்களுக்கு எதிராக மேற்குலகை நோக்கி நகர்கிறது. அந்நாட்டின் அரசுடன் முரண்பட்டு நிற்கும் ஒரு தேசிய இனச்சிக்கல் அங்கு உண்டு. எனவே அச்சிக்கலை நாம் உரியமுறையில் தூண்டி விட்டு இலங்கை அரசிற்கு நெருக்கடியை ஏற்படுத்தி அதனூடாக அந்த அரசை எம் செல்வாக்கினுள் மீட்டெடுப்போம்'' என்ற வகையில் அமைந்த சிந்தனையின் அடிப்படையிலேயே 1982 - 1989 வரையிலான காலகட்டத்தில் டெல்லி ஆட்சியாளரின் சிந்தனை அமைந்திருந்தது. இதனையே நாம் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியத் தலையீட்டின் முதலாவது காலகட்டம் என்கிறோம். இக்கட்டத்தில் இந்தியா இலங்கைத் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையை, மொஹாஜிர்கள், சிந்திகள், சக்மாக்கள் போன்ற அண்டைநாடுகளின் 'பயன்படு' சிக்கல்களில் ஒன்றாகவே பிரதானமாகக் கருதியிருந்தது.

இந்திரா காந்தி, ராஜீவ் ஆகியோரும் மற்றும் றோ உள்நாட்டு உளவுத்துறை (I.B) வெளிவிவகார அமைச்சு என்பவற்றின் அதிகாரிகளும் இக் கண்ணோட்டத்திலேயே இலங்கைத் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையை இக்காலகட்டத்தில் கையாண்டனர்.

1984 இல் ஒரு மூத்த இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒரு தமிழ்த் தலைவரிடம் கூறியதை இது தொடர்பாக இங்கு நான் நினைவு கூர்கின்றேன். ''நாம் போ என்றால் அவர்கள் (தமிழ் இயக்கங்கள்) போக வேண்டும். நில் என்றால் நிற்க வேண்டும்''

### இரண்டாவது கட்டம்: சுண்டங்காய் விடயமல்ல

எமது பிரச்சினையில் இந்திய தலையீட்டின் இரண்டாவது காலகட்டம் 1989 இல் ஆரம்பமாகிறது. தமிழரின் பிரச்சினை என்பது அண்டை நாடு ஒன்றில் ''கையாண்டு பின் பயன்பாடு முடிய வீசி எறிவதற்கான'' ஒரு சுண்டைக்காய் விடயமல்ல. ஆனால் அது தன் இருப்பையே கேள்விக் குறியாக்கும் ஆதிமூலமான ஒரு அரசியல் வரலாற்றுப் பேரிடி என்ற உணர்வுடனேயே இக்காலகட்டத்தில் இந்திய ஆளும் வர்க்கம் எம் இனப்பிரச்சினையை இன்று அணுகுகின்றது. இதனால்தான் தமிழரின் சுயநிர்ணய உரிமையானது ஏதோ ஒரு மாபெரும் கிரிமினல் குற்றம் என்ற அடிப்படையில் அது செயல்படுகிறது.

இதில் நாம் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், இந்திய ஆளும் வர்க்கத்தின் இந்தக் கண்ணோட்டத்திற்கும் ராஜீவின் கொலைக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்பதாகும். புலிகளின் இச்செயல், 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல' இந்திய ஆளும் வர்க்கத்திற்குக் கிடைத்த ஒரு நொண்டிச் சாட்டே அன்றி வேறில்லை. நமது இக்கூற்றைக் கண்டு கொதித்தெழுவோரும் உளரேயெனில் அவர்கள் அந்நாள் இலங்கைத் தூதுவர் டீக்சிற் 1989 இல் டெல்லியில் உள்ள Inter Servies Institute என்ற இந்திய படைத்துறைகளின் பொது அமைப்பொன்றிற்கு ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையினை படிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கையில் இந்தியா ஏன் தலையிட்டது என்பது பற்றியும், எந்த அடிப்படைக் கண்ணோட்டத்தில் அது இலங்கைத் தமிழ்ப் பிரச்சினையைக் கையாள வேண்டும் என்பது பற்றியும் திரு.டீக்சிற் அவ்வுரையில் மிகத் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார். ''எமது நாட்டில் (இந்தியாவில்) தோன்றிய முதலாவது தனிநாடு கோரிய போராட்டம் தமிழர்களுடையது என்பதனை நாம் மறக்கலாகாது'' எனத் தன் உரைக்கு அழுத்தம் கொடுத்து, இலங்கைத் தமிழ்த்தேசிய இனப்பிரச்சினையும் அந்தக் கண்ணோட்டத்திலேயே கையாளப்பட வேண்டும் என அவர் வாதிட்டார். (அவருடைய உரையின் முழுமையை இங்கு விரிவஞ்சி விடுகின்றேன். அதனை அந்நேரத்தில் ஐலன்ட் பத்திரிகை அப்படியே வெளியிட்டிருந்தது.)

இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது ஒரு வெறும் அண்டை நாட்டுப் பிரச்சினையல்ல அது தன் இருப்பிற்கே நீண்டகாலத்தில் ஒரு சவால் என்ற கண்ணோட்டந்தான் டெல்லியில் இன்றுள்ளது,

### 'இந்தியர்' போல் 'இலங்கையர்' ஆகுக:

இதனாலேயே இன்று, முதல் கால கட்டத்தில் நடந்து கொண்டதற்கு எதிர்மாறாக, இலங்கை அரசின் கருத்தைப் பலப்படுத்துவதிலும், அதனுடன் பொருளாதார உறவுகளை வளர்ப்பதிலும், தமிழர் அவலத்தைப் பற்றி மூச்சு விடாமல் இருப்பதிலும் இந்தியா, மிகக்கவனமாக இருக்கிறது.

இத்துடன் இங்குள்ள தமிழரும் தென்னிந்தியத் தமிழர் போல் மெதுமெதுவாகத் தமது சுயநிர்ணய அபிலாசைகளைக் கைவிட்டு இலங்கையர் என்று வாழப் பழகிக் கொள்வதே தனது தேசிய நலனுக்கு ஏற்றது எனத் தன் நடவடிக்கைகள், கூற்றுக்கள் என்பவற்றின் மூலம் சிங்களப் பேரினவாத அரசிற்குப் புரிய வைத்து வருகிறது.

தமிழரின் அரசியல் அடையாளத்தினையும் பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் காலங்காலமாக அழிப்பதற்குக் கங்கணம் கட்டி நின்ற பேரினவாதச் சக்திகள் நமது நோக்கினை நிறைவேற்றிட தமக்கு உலகிலேயே சிறந்த நண்பன் இந்தியாதான் எனத் தற்போது திடமாக நம்புவதும் இதனாலேயாம்.

### தெளிவுபடுத்திய டெல்லி:

1983இல் பாண்டிபஜார் பிரச்சினையில் கைது செய்யப்பட்ட உமாவையும், பிரபாவையும் விடுவிக்க முடியாது என இந்திய அரசு கூற முற்பட்ட காலத்திலிருந்து இந்தியாவையும் தம் 'எதிரிகளான' தமிழரையும் ஒன்றெனவே கருதி அதன் காரணமாக இந்திய எதிர்ப்பு சமன் தமிழர் எதிர்ப்பென இதய சுத்தியுடன் நம்பிய பேரினவாதிகளை டெல்லியாட்சியாளர்கள் இன்று தெளிவுபடுத்தியுள்ளனர். தமிழர் வேறு இந்திய ஆளும் வர்க்கம் வேறு, ''தமிழரால் நாம் எதிர்நோக்கும் ஆபத்துக்களையே இந்தியாவும் எதிர் நோக்குகிறது. எதிரிக்கு எதிரி நண்பனுக்கு நண்பன் என்பதை நாம் புரிந்து கொண்டு டெல்லிக்கும் எமக்கும் பொதுப்பிரச்சினையாக உள்ள தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையை இருவரும் இணைந்து நசுக்கிட வேண்டும்'' என இன்று சிங்களப் பேரினவாதிகள் தெளிவடைந்துள்ளனர்.

சிங்கள பேரினவாதத்தின் உச்சநிலையாகிய ஜாதிக சிந்தனய எனும் கோட்பாட்டின் பிதாமகரான குணதாச அமரசேகர என்பார் (டி.பீயின் பல் வைத்தியர்) தமிழ்த் தேசியம் என்பது இலங்கைக்கு மட்டுமல்ல இந்தியாவிற்கும் ஒரு பெரும் ஆபத்து; ஜின்னா இந்தியாவைப் பிரித்து பாகிஸ்தான் ஆக்கிட முற்படுவதற்கு வெகுகால முன்னரே தென்னிந்தியாவில் தமிழனுக்கு ஒரு தனித்தமிழ்நாடு வேண்டுமெனக் கோரிய ஒரு அரசியல் எழுச்சியின் கூர்ப்பே இன்றைய தமிழ்த் தேசியம்; திராவிட நாட்டுக் கோரிக்கையின் வாரிசுகளும். தமிழீழப் போராளிகளும் ஒரே கொள்கை வழி பின்னிப் பிணைந்து உள்ளவர்களே என இன்னோரன்ன விடயங்களை விளக்கி 'திவயின' நாளிதழில் 1991 ஆம் ஆண்டில் ஒரு கட்டுரை வரைந்தார். (இதில் குணதாச அமரசேகர அவர்கள் தமிழ்ப் பிரிவினை வாதத்தின் தொடக்கம் 1916 இல் எனக் குறிப்பிடுகின்றார். அவ்வாண்டில் தென்னிந்திய நலவுரிமைச்சங்கம் தோன்றிற்று. ஆனால் அது தமிழனுக்கு தமிழ் நாடு என்று செயல்படவில்லை.)

ஜாதிக சிந்தனையின் பிதாமகர் தன் கருத்துகளைச் செவிமடுக்கும் சிங்கள மக்களுக்கு அக்கட்டுரை மூலம் தெளிவுபடுத்த முற்பட்டது இது தான், தமிழர் எம்மை விட இந்தியாவிற்குப் பெரும் அச்சுறுத்தலைக் கொடுத்துள்ளார்கள். எனவே நாம் தமிழ்த் தேசியத்தை அடக்கி ஒடுக்கிட இந்தியாவை நாடிடுவோம். இரண்டாம் கூற்று; அவர் கட்டுரையின் மையமான உள்ளுறை கருத்து.

### தமிழரை முறியடிக்க வட இந்தியருடன் கூட்டு:

அமர சேகராவை விடவும் விஷயத்தைத் தெளிவுபடுத்துவதில் ஒரு படி மேலே சென்றார் திரு.காமினி திசநாயக்கா. இந்தியாவின் பிரதான சிங்கள நண்பர், ஒப்பந்தத்தின் மூலவர்களில் ஒருவராகத் தம்மை இனங்காட்டிக் கொள்பவர் ஐலன்ட் நாளிதழின் றொமேஷ் பர்னாந்து என்ற நிருபருக்கு அளித்த விலாவாரியான பேட்டியோன்றில் அவர் சொன்னார் ''நாம் (சிங்களவர்) வரலாற்றைப் பார்க்க வேண்டும். முற்காலத்தில் நமது அரசர்கள் வட இந்திய ஆரிய அரசரின் உதவியைப் பெற்று தமிழரின் படையெடுப்புகளை முறியடித்தனர். அது போல் நாம் இன்றும் (வட) இந்தியருடன் இணைந்து தமிழர் பிரச்சினையைக் கையாளலாம். திரு.திசநாயகாவின் கூற்றின் தாற்பரியம் படித்த சாதாரண சிங்களக் குடிமகனுக்கும் புரியக் கூடியதாகும். அது என்ன? சிங்களப் பாடநூல்கள் சிங்களவரை வட இந்தியாவில் இருந்து வந்த ஆரிய பரம்பரையினர் எனவும், சிங்கள தேசத்தின் பரமவைரிகள் - எல்லாளன் முதற் கொண்டு தென்னிந்தியாவிலிருந்து காலத்திற்காலம் படையெடுத்து வந்த தமிழரான திராவிட பரம்பரையினர் எனவும் சித்திரிக்கும். எனவே இனத்தோடு இனங் கூட்டும் பொது எதிரியை நாசமாக்கட்டும் என்பதே திசநாயக்கா கூறியதன் உள்ளுறை என்பது வெள்ளிடை மலை.

இந்தியா தன் ஆட்சியைக் கவிழ்த்திட ஆன காரியங்கள் எல்லாம் செய்து வருகிறது எனப் பதவிக்கு வந்த நாட்களிலிருந்து நம்பி வந்த பிரேமதாச கூட மெதுமெதுவாக தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் 89இற்குப் பிற்பட்ட நிலைப்பாட்டை தெளிவாகப் புரிந்து கொண்டனர். இத்தெளிவிற்கு முக்கிய காரணகர்த்தாவாக அமைந்தவர் டெல்லியில் றோவின் விருந்தாளியாக ஒரு காலத்தில் தங்கியிருந்து மீண்ட ஒரு புத்தி ஜீவியாவார்.

### நாங்களும் விரும்பவில்லை

அத்துடன் தான் பதவியேற்ற ஆரம்ப காலத்தில் தமிழருடன் பிரச்சினையைப் பேசி நட்புடன் இருந்தால் இந்தியாவின் தலையீட்டைக் குறைக்கலாம் என நம்பியிருந்த பிரேமா பிற்காலங்களில் தமிழ் அரசியலாளர் யாவருடைய காதுகளிலும் பூ வைக்க முற்பட்டது தமிழரின் அரசியற் பலத்தை எந்த வகையிலும் பெருக்க இந்தியா இடங்கொடுக்க விரும்பவில்லை என்பதைத் தெளிவாகக் கண்ட பின்பேயாகும். இதற்கு ஒரு உதாரணம் கூறலாம். இலங்கை வெளிவிவகார அமைச்சில் ஒரு முக்கிய திறமை வாய்ந்த அதிகாரி திரு.நிஹால் றொட்றிகோ 1992 இல் சாக் மாநாடு கொழும்பில் நடைபெறுமுன் ஒருமுறை டெல்லி சென்றிருந்தார். பல விடயங்களின் மத்தியில் தமிழர் பிரச்சினை பற்றியும், அதைத் தீர்ப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் வட கிழக்கு இணைப்பு என்பதே முக்கிய சிக்கலாக உளதென்றும் இந்திய வெளியுறவு அமைச்சில் இலங்கைக்குப் பொறுப்பாக உள்ள உயர் அதிகாரிகளுடன் உரையாடிய போது அவர்கள் வெளியிட்ட கருத்து அந்த மனிதருக்குத் திகைப்பாயிற்று. அவர்கள் கூறியது இதுதான் ''வட கிழக்கு இணைப்பை நாமும் பெரிதாக விரும்பவில்லை''.

### இலங்கைக்கு கைகொடுப்பு:

அடுத்து இன்னொரு முக்கியமான விடயமும் நடைபெற்றது. இலங்கையில் இனப்பிரச்சினை இன்னும் கனன்று கொண்டிருக்கிறது. எனவே எம்மண்ணில் தங்கியிருக்கும் ஈழத்தமிழ் அகதிகளை அங்கு திருப்பி அனுப்பிட முடியாது என டெல்லி பல காலமாகக் கூறி வந்தது. இது சர்வ தேசரீதியாக இலங்கை அரசு மீது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு இராஜதந்திர அழுத்தத்தைக் கொடுத்து வந்ததென்றே கூற வேண்டும். எனினும் பின்னர் டெல்லி ஆட்சியாளர் இலங்கையுடன் பேசி அகதிகளை - போர்ப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்களைக் கூடத் திருப்பி அனுப்ப முடிவெடுத்தமை, இலங்கை அரசின் கருத்தைப் பலப்படுத்தச் செய்த மாபெரும் உதவியாக அமைந்துவிட்டது. ஏன்? ஒன்று; இது கொள்கையளவில் இலங்கை இராணுவத்தின் கீழ், இனப்பிரச்சினை தீர்க்கப்படாத நிலையிலும், போர் நிகழும் காலங்களிலும் தமிழர் வாழலாம் என்பதை தெளிவாக அங்கீகரித்தலாகும். இரண்டு; இலங்கையில் அரசியல் ரீதியாகத்

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Vol 22 No 1

# இனத்துவக் கட்சிகளும் சிறுபான்மையினர் வாக்குகளும்




ஜனநாயகத்தின் பிரிக்க முடியாத அம்சமான கட்சி அரசியலினால் ஏற்படும் நன்மை தீமைகளை ஜனநாயகத்துக்கு மாற்றீடான ஏற்பாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மட்டுமே ஜனநாயகம் 'பரவாயில்லை' என்ற எண்ணம் தோன்றுகிறது. மற்றும்படிக்கு, ஜனநாயகத்தையும் சர்வாதிகாரத்தையும் வேறுபடுத்தும் காரணிகளில் கட்சி அரசியலினால் ஏற்படும் தீமைகளே ஜனநாயகத்தின் மீது எமக்கிருக்கும் பிடிப்பினைக் குறைப்பதாக இருப்பதை நன்கு அவதானிக்கலாம். சில விடயங்களில் நம்மைப் பிடித்த பிசாசுகள் (necessary evil) சிலவற்றுக்கு அவசியம் இருந்தே தீரும். அதனைத் தவிர்க்க முடியாது. அப்படித் தவிர்க்க முற்பட்டால் ஏற்படுஞ் சேதம் இன்னும் அதிகமாகலாம்.

கட்சி அரசியலின் பெறுபேறாக அரசியற் பெரும்பான்மை, சிறுபான்மை என்று நிரந்தரப் பிளவு சமூகத்தில் ஏற்பட்டு விடுகின்றது. நிரந்தரப் பிளவினால் சமூகம் பாதிக்கப்படாமலிருப்பதை ஓரளவுக்கேனும் உறுதிப்படுத்தவே காலத்துக்குக் காலம் பெரும்பான்மை - சிறுபான்மை அதிகாரம் கைமாற்றப்படுகின்றது. இந்தக் கைமாற்றல் தாமதமாகுதலும் சமூகத்தின் நிரந்தரப் பிளவுக்கு மேலும் ஊக்கமளிப்பதாகவே போய்விடும். இதனைத் தடுக்க நியாயமான வழிகளில் முயல்வது வாக்காளர்களுக்குள்ள இன்றியமையாத கடமையாகிறது. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் முறையே குடியரசுக் கட்சி - ஜனநாயகக்கட்சி கன்சர்வேட்டிவ் கட்சி - தொழிலாளர் கட்சி என்பவற்றுக்குகிடையே காலத்துக்குக் காலம் அதிகாரக் கைமாற்றம் நடைபெற்று வருவதைக் காண்கிறோம். இங்கே பெரும்பான்மை - சிறுபான்மைப் பிரிவு இனரீதியலன்றிக் கொள்கை ரீதியில் அமைந்திருப்பதைக் காணலாம்.

பல்வேறு இனக்குழுக்கள் வாழுஞ் சமூகமொன்றில் சமூகப்பிளவு கட்சிகளின் கொள்கை அடிப்படையில் ஏற்படுவதற்குப் பதிலாக வேறுகாரணிகளின் அடிப்படையில் எழும் அபாயமுண்டு. அமெரிக்கர்களில் கறுப்பர்கள் ஜனநாயகக் கட்சியினர், வெள்ளையர்கள் குடியரசுக் கட்சியினர் எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. இதுபோலவே பிரிட்டனிலும் இன அடிப்படையில் கட்சி அமைவதில்லை. ஆயினும் எமது ஆய்வுக்குட்பட்ட விடயம் யாதெனில் இக்கட்சிகளில் இனவாரிப் பிரதிநிதித்துவம் முக்கிய பங்கினை வகிக்கின்றதா இல்லையா என்பதேயாகும். உதாரணமாக கறுப்பினத்தவர் ஒருவர் இன்றும் அமெரிக்காவின் ஜனாதிபதியாக வரமுடியமா? இதே இனத்தவர் பிரிட்டனின் பிரதமராக முடியுமா? காரணம் இனத்துவ அணுகுமுறையில்லையா? விடை தெளிவானது.

ஆயின், எத்துணை ஆரோக்கியமான அரசியல் பாரம்பரியமுடைய சமூகமாயினும் இனத்துவ அணுகுமுறை இருப்பதைத் தவிர்க்க முடியாது. சமூகம் பல்வேறு இனக்குழுமங்களாகப் பிரிந்திருப்பின் பெரும்பான்மையாக உள்ள இனங்களின் பிரதிநிதிகளே கட்சித் தலைமையினை அங்கீகரிப்பர். இது மேற்கு நாடுகளிலேயே சகஜமாக இருக்கும் போது கிழக்கு நாடுகள் பற்றிக் கூறவே தேவையில்லை. உதாரணத்துக்கு இந்தியாவைப் பாருங்கள்: காங்கிரஸ் கட்சி, பாரதீய ஜனதா, கம்யூனிஸ்ட் கட்சி என்று எதையெடுத்தாலும் தலைமையிலேயே இனவாரி அணுகுமுறை தவிர்க்க முடியாததாக இருக்கும். இலங்கையிலுள்ள நிலைமையும் இதேதான். வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும், தலைமையைத் தக்க வைப்பது இனவாரி அணுகுமுறைதான்.

மூன்றாம் உலகநாடுகளில் இனப்பிளவுக்கு மேலதிகமாக மதம், சாதி, பிரதேசம் என்ற அடிப்படையிலும் பிளவுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆசியாவில் இந்தியா, மலேசியா, இலங்கை போன்றவற்றையும் ஆபிரிக்காவில் கானா, ரினிடாட், சாம்பியா, கென்யா போன்றவற்றையும் இங்கு உதாரணமாகக் காட்டலாம். ஒன்றுக்கு மேற்பட்ட அடிப்படையில் பிளவுகள் இருப்பதனைத் தவிர்க்க முடியாது. இதன் விளைவாகச் சிறுபான்மைக் குழு ஒன்று எப்போதும் நிரந்தரமாக இருப்பது தவிர்க்க முடியாதாகிவிடும். ஜனநாயகத்தில் சிறுபான்மையென்பது நிரந்தரமாக இருக்க முடியாது. இம்முறை சிறுபான்மையாக இருக்கும் கட்சி மறுமுறை பெரும்பான்மையானதாக மாறக் கூடிய சூழ்நிலை வேண்டும். அங்ஙனமில்லாவிட்டால் ஜனநாயக ஆட்சி அங்கு நிலவுவதாகக் கூறமுடியாது.

பல இனக்குழுமங்கள் உள்ள நாடுகளில் பெரிய இனங்கள் போட்டிக் கட்சிகளை அமைத்துக் கொள்ளும். சிறிய இனங்களைத் தம்மோடு சேர்த்துக் கொள்வதில் உரிய தந்திரங்களைக் கையாளும். சிறிய இனங்கள் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கு உத்தரவாதந் தேடுவதே பேரப்பேச்சாக இருக்கும். கட்சி அரசியல் என்றாலே வாக்குவேட்டை ஆடியேயாக வேண்டும். இந்த வேட்டைக்கு எதுசிறந்த ஆயுதமோ அதையே கட்சிகள் தூக்கிப் பிடிக்கும். மிக மலிவான ஆயுதமாகக் கருதப்படுவது இன, மத, சாதி பேதங்களை முன்னிறுத்தலாகும். மூன்றாம் உலக நாடுகளில் இந்த ஆயுதம் துரிதமாகவும் பயனுள்ள முறையிலும் வேலை செய்வதைப் பார்க்கிறோம். இந்த ஆயுதத்தைப் பாவித்து ஆட்சிக்கு வந்தபின் ஆயுதத்தைக் கீழேபோட முயன்றவர்களும் அப்படி முயன்றதனால் பழிவாங்கப்பட்டவர்களும் வரலாற்றில் காணப்படுகின்றார்கள். இன ஆய்வாளர்கள் இலங்கையில் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவின் கொலையை இத்தகையதாகவே பார்க்கிறார்கள்.

பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கிர்லூட் என்பவர் எப்போதும் சர்ச்சைக்குரிய கருத்துக்களைப் பாராளுமன்றத்தில் முன்வைத்து வாதாடியவர். 'சில்லறை'த் தனங்களினால் அலைக்கழிக்கப் படாதவர். அவரே தனது நூலொன்றில் ''பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் முதல் கவனம் அவரது ஆசனத்தை தக்க வைப்பதிலேயே இருக்கும்'' என்பதை ஒப்புக் கொண்டு விளக்கிச் செல்கிறார். ஆசனத்தைக் காப்பாற்றுவதற்கு எத்தகைய வழிகளைக் கையாளலாம்? இவற்றில் மலிவானது எது?

ஜனநாயகம், சர்வாதிகாரம் என்று பாகுபாடு செய்து நாம் புனிதமிக்கதாக முன்னையதைக் கருதுகிறோம். ஆனால் வாக்குகளில் தங்கியிருக்கும் அதிகாரத்தைப் பெற்றுத் தருகிறது ஜனநாயகம். இதிலுள்ள வேடிக்கையை சேர் ஐவர் ஜெனிங்ஸ் பின் வருமாறு கூறுகிறார். ''பிரிட்டனிலுள்ள ஆட்சிமுறைக்கும் சர்வாதிகார நாடுகளிலுள்ள ஆட்சிமுறைக்கும் இடையிலுள்ள உண்மையான வேறுபாடு இதுதான். அதாவது எமது நாட்டில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் ஒரேயொரு குழு மட்டும் தூண்டுதல், மோசடி, பலாத்காரம் என்பவற்றில் ஈடுபடுவதில்லை. ஆகக் குறைந்தது இத்தகைய இரு குழுக்களையாவது இங்கு இந்தப் போட்டியில் காண்கிறோம்''. அவரது கருத்தில் இரு குழுக்களும் போட்டியிடுவதற்குத் தனிப்பட்டதும் பொருளாதார ரீதியிலுமான நோக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. கிர்லூட்டின் கருத்தையும் ஜெனிங்ஸின் கூற்றையும், ஒப்பிட்டுப் பார்த்தால் ஜனநாயகத்தில் 'ஆசனக் கவனத்தின்' அவசியமும் அதற்குப் பாவிக்கப்படும் ஆயுதமும் இலகுவில் புலனாகும்.

## சிறுபான்மையின் வாக்குப் பலம்

சிறுபான்மை இனததவரின் பங்கு என்பது இங்கே பெரும்பான்மைமையினக் கட்சிகளைத் தவிர்த்து அல்லது அத்தகைய கட்சிகளில் பெயரளவுக்கேனும் இருக்கும் சிறுபான்மையினப் பிரதிநிதிகளைத் தவிர்த்துப் பார்க்கப்படவேண்டும். சிறுபான்மையினத்தவரின் வாக்குகள் பயன்பாடுடையதாவதற்கு முன்னிபந்தனையாகப் பெரும்பான்மையின வாக்குகள் சமமாகப் பிளவுண்டிருக்க வேண்டும். இப்பிளவும் ஆரோக்கியமான காரணம் ஒன்றின் அடிப்படையிலானதாக இருக்க வேண்டும். நாட்டிற்கு திறந்த பொருளாதாரம் உகந்ததா இல்லையா என்பதில் பெரும்பான்மையினக் கட்சிகள் சம அளவில் பிரிபட்டிருந்தால் சிறுபான்மையினர்து வாக்குகள் இறுதி முடிவை எடுப்பதில் உதவுவது சிறப்பானதும் தேசியக் கடமையுடன் கூடியதுமாக இருக்கும். மாறாக சிறுபான்மையினங்களுக்கு எத்தகைய உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதில் பெரும்பான்மையினக் கட்சிகள் சம அளவில் பிரிபட்டிருக்கும் நிலையேற்பட்டால் அது சிறுபான்மையினத்தின் வாக்குகளுக்குத் தேவையினை ஏற்படுத்துமா? இலங்கையில் அத்தகையதொரு சம அளவுப் பிரிவு இதுவரை ஏற்பட்டதாக இல்லை. இதற்குத் தலைகீழாக, சிறுபான்மையினரது உரிமைகளை மறுப்பதையே கொள்கையாக வைத்துத் தேர்தலில் வெற்றி பெற்றமைக்கான ஆதாரங்களே காணப்படுகின்றன.

கட்சி அரசியல், இனத்துவ பிரதிநிதித்துவம் என்பதன் இன்னொரு முக்கிய அம்சம் சிறுபான்மை இனத்தவர் இனவாரிக்கட்சி அடிப்படையில் ஒன்று திரள்வதைத் தடுப்பதேயாகும். சமபலமுள்ள இரு இனங்கள் போட்டியிடும் நாட்டில் நிலைமை வேறு. பெரும்பான்மை இனம் ஒன்றில் இரு கட்சிகள் இருந்து அவை சிறுபான்மை இனங்களது வாக்குகளைக் கவரக் கைக்கொள்ளும் தந்திரங்கள் பல நாடுகளிலும் ஒரேவிதமாகவே காணப்படுகின்றன. இன ஒற்றுமையை இரண்டு விதங்களில் நிலை நாட்டலாம் என்பது நாடுகளிடையே காணப்படும் ஒருமித்த போக்கிலிருந்து தெரியவருகிறது.

பொருளாதார, அரசியல் கொள்கைகள் மீது அமைந்த கட்சிகளாயினும் அவற்றின் தலைமைக்குப் பெரும்பான்மை இனத்தவரைத் தெரிதல் ஒருமுறை. சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்களை 'வசீகரித்து' அவர்களைச் சாட்டாக வைத்துச் சிறுபான்மையினங்களைப் 'பிரதிநிதித்துவப் படுத்துவதாகக்' காட்டுதல் மற்றொருமுறை. இரண்டின் அடிப்படையும் ஒன்றேதான். அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சியின் தலைவராக இப்போது இருப்பவர் ஒரு கறுப்பினத்தவரே. ஆனாலும் கறுப்பர் ஒருவர் அங்கு ஜனாதிபதியாக இப்போதும் வரமுடியாது என்பது நிதர்சனம். ஆக, உண்மையான அதிகாரம் எங்குள்ளது என்பதைக் கண்டு கொள்ளலாம். இலங்கையிலும் இந்தியாவிலும் இதே போக்கைச் சற்று வித்தியாசமான முறையில் பார்க்கலாம். இந்தியப் பிரதமர் ஒரு தெற்கு இந்தியர். அதாவது இந்தி பேசாத மாநிலத்தைச் சேர்ந்தவர். ஆனாலும் அவரால் கட்சிக்குள் முழுமையான கட்டுப்பாட்டினைச் செலுத்த முடியுமா? எத்தனை விட்டுக் கொடுப்புகளைச் செய்ய வேண்டியுள்ளார் என்பதனை அவதானிக்க வேண்டும். இலங்கையில் ஆளும் ஐ.தே. கட்சியின் தலைவராக பொருளாளராக என்றெல்லாம் சிறுபான்மையினர் இருந்தனர். இருக்கின்றனர். ஆனால் அதிகாரம் எங்கே உள்ளது?

## இடதுசாரிகளும் இனத்துவக் கட்சிகளும்

மேற்கூறிய அம்சங்கள் இடதுசாரிகளுக்குப் பொருந்துமா என்ற வினா வாசகர்கள் மத்தியில் எழலாம். ஏனெனில் இடதுசாரிகள் ''மார்க்சிஸம்'' மற்றைய பேதங்களை ஊடறுத்துச் சென்று மக்களை ஒன்றிணைக்கும் என்று நம்புகிறார்கள். நாடளாவிய ரீதியில் இடதுசாரிகள் இனவாதக் கொள்கையை முன்னெடுப்பதில்லை என்பது உண்மையேயாகினும் இனவாத அரசியலின் முன்பு மார்க்ஸிஸ்டுகள் தோற்கடிக்கப்பட்டமையை ஏராளமான நாடுகளில் காணமுடியும். இதை இன்னும் தெளிவாக்குவதானால், இடதுசாரிக் கட்சிகளின் வேட்பாளர் பட்டியல்களை ஆராய்வதால் இனத்துவரீதியில் அல்லது சாதியடிப்படையில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். உதாரணமாக, மலேசியாவில் சீனப்பிரஜைகளே இடதுசாரிக் கட்சி வேட்பாளர்களாக முன்பு நிறுத்தப்பட்டு வந்தனர். மலே இனத்தவர் வலதுசாரிகள் என்று காட்டுவதற்கான முயற்சி. இந்தத் தொடர் போராட்டம் மலேசியாவில் ஒரு கட்சி ஆட்சிமுறைக்கு வித்திடும் வழியில் சென்றதையும் மறக்க முடியாது.

இலங்கையில் இடதுசாரிகள் கண்ட தோல்வி இனத்துவ ஆய்வாளர்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னுக்கமாக ஆராயப்
மாகிறது. மொழிப்
இங்கு இடதுசாரிக
லமை சோதனைக்
1956க்குச் சற்று
டதுசாரிகள் இங்கு
தக் காணலாம். தமி
சிங்களவர்கள் கூடு
த்திய எதிர்ப்பாளர்
உழைக்கும் வர்க்க
அறிவிப்பவர்கள்
கைக் கம்யூனிஸ்ட்
நிலைப்பாட்டை
த்திருந்தனர். இதன்
த நிர்வாக மொழி
'முற்போக்கானது''
ள் தந்தனர் இக்கட்
மாஜக் கட்சியின்
பாட்டிற்குச் சற்றுக்
வந்தனர். 1963 இல்
முன்னணி' அமைக்
து ரொஸ்கியவாதி
ட்டும் என்ற கொள்
விக் கொண்டனர்.
த உத்தியோகபூர்வ
ப் பெறுவதில் சிங்க
ர் முனைவதில் ஒரு
போராட்டம்' உள்ள
ன சமசமாஜக் கட்
னர்.

இவர்களை அரவ
நிலைமை ஏப்
மான கட்சிகளுட
ன்மையினர் கூட்ட
விருப்பம் கொண்
விருப்புக்குப் புரட்
ற்படுவதும் அண்
பற்பாடுகள். எத்த
காளர் பெரும்பான்
சியின் தலைமை
பற்றாலும் இனப்பி
அவரின் செயற்
மோசமான மட்டுப்
பட்டிருக்கும் என்
தவர்களாகச் சிறு
இருப்பதாகக் கூறு
றயாகும். இடதுசா
ங்கிருக்கிறார்களே
ம் இந்த ஏமாற்றுக்
பாடே. எத்
ப்புகளுக்குப் பின்
ள் அங்கு 'அணை
ன்பதும் எடைபோ
ய விடயம்.

## கட்சிப்பற்றா?

ல் கட்சிப்பற்றே
பெறுகிறது. கட்சிப்
ப்பாற்றுவதற்காகத்
ந்தந்த இனவேட்
வ்வப் பிரதேசங்க
உதாரணமாக நியூ
த்தில் குடியரசுக்
பரை நிறுத்தினால்
சியும் ஒரு கறுப்ப
. இதே பாணியில்
லும் வேட்பாளர்
யூனூடாக இனப்
படுத்தும் முயற்சி
றன. பெயரளவில்
பலை'ப் போட்டு
சேர்ந்த இருவரை
கள். இவர்களுக்கு
பிரதிநிதித்துவம்
படும். தேசிய கட்சி
ளிக்கத் தயங்கும்
சிறுபான்மையினர்
கும் போது அவர்
மேலாக இனரீதி
க்க சிறுபான்மையி
வட்பாளர் பட்டியல்
றுவது வழக்கமே.
ன்மையினக் கட்சி
கொள்ளும் போது

அவற்றின் சார்பில் இரு சிறுபான்மையினரும் மோதிக் கொள்வார்கள்.

ஆனால், மாற்றுவழியாக மூன்றாவது தெரிவாக முற்றிலும் சிறுபான்மையினத்தவரே உள்ளடங்கிய கட்சியொன்றும் போட்டியிட்டால் நிலைமை சிக்கலாகிறது. ஆரம்பத்தில் இந்த முயற்சி முழுவரவேற்பைப் பெறமுடியாது போகலாம். தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் உருவாகிய காலத்தில் அது தனது வேட்பாளர்களை ஆந்திராவிலும் கர்நாடகத்திலும் கூட நிறுத்தியிருந்தது. இன உணர்வுகளைப் பிரதிபலிப்பதே இதன் நோக்கம். அ.தி.மு.க வை ஆரம்பித்த எம்.ஜி.ஆர் கூடத் தனது 'இனவுணர்வைப்' பறைசாற்ற கர்நாடக அரசியலில் தனது வேட்பாளர்களைக் களமிறக்கிப் பார்த்திருந்தார். தனிப்பட்ட இனரீதியில் வாக்களிப்பதைவிடத் தேசியக் கட்சியிலுள்ள ஒரே இனத்தவர்களுக்கு வாக்களிப்பது 'முற்போக்கானது' என இன்றும் பலர் நம்புகின்றனர். ஆனால் இந்த நம்பிக்கையை நியாயப்படுத்த முன்வைக்கப்படும் காரணங்கள் வாக்காளர்களைத் திருப்திப்படுத்த வேண்டும்.

''பேரினவாதமிக்க கட்சியானாலும் பரவாயில்லை. அதிலுள்ள எனது சொந்த இனத்தவருக்கே நான் வாக்களிப்பேன்'' என ஒருவர் கருதுவதில் தவறில்லை என்று வாதிடும் போது மாற்றுவழிகளையும் மனதிலிருத்திட வேண்டும். மாற்றுவழியாக, இனவாரி வாக்களிப்புக்கு வழியிருக்கும் போது தேசியக் கட்சியை நாடுவதனால் அத்துணை கட்சிப்பற்றிருக்க வேண்டும். அத்துடன் அக்கட்சியிலுள்ள இனவாரி வேட்பாளரும் மிகுந்த 'இனக்கவர்ச்சி' உடையவராக இருக்க வேண்டும். இவையில்லாத போது சிறுபான்மையின வாக்காளர்கள் தமது சொந்த இனக் குழுவுக்கு வாக்களிக்கவே முன்வருவர்.

இது ஆரோக்கியமான அரசியலேயல்ல என்பதில் இருகருத்துக்கு இடமில்லை. ஆனால் பெரிய கட்சிகளின் தொடர் தவறுகளினால் சிறுபான்மையினர் இத்தகைய 'புதிய வழியை' நாட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்படுவர். ஜனநாயக நீரோட்டத்தில் உண்மையான அக்கறையுள்ளோர் இதனையும் சகித்தேயாக வேண்டும். சிறுபான்மையினர் இனரீதியாகச் சிந்தித்து வாக்களிக்கின்றனர் என்று பெரும்பான்மையினர் முறையிடுதல் தவறாகும். ஏனெனில் பெரும்பான்மையினரின் கட்சிகளிலுள்ள சிறுபான்மையின வேட்பாளர்களுக்கு வாக்களித்து அலுத்துச் சலித்தவர்களே சிறுபான்மையினருக்கெனக் கட்சியமைத்துப் போராடுகின்றார்கள் எனக் கொள்வதே பொருந்தும்.

இலங்கையில் ஒருகாலத்தில் இனத்துவப் பிரதிநிதித்துவம் நடைமுறையிலிருந்தது. அது ஆரோக்கியமற்றதென்று எண்ணியே அகற்றப்பட்டது. இன்று எங்கெல்லாமோ சுற்றி இறுதியில் மீண்டும் இனவாரிச் சிந்தனைகளை வாக்காளர்கள் ''மனப்பாடஞ்' செய்ய வேண்டியேற்பட்டுள்ளது. கடந்தகால அரசியல் பாதை சரியானதல்ல என்பதை எல்லோரும் ஏற்பார்கள். ஆனால் அதற்கான காரணங்களைக் கூறுவதிலும் பெரும்பான்மை - சிறுபான்மை வேறுபாடிருப்பதையும் அவதானிக்க வேண்டியிருக்கிறது.



தொழிலாளர் குடியிருப்புகளை உடமையாக்குதல்:

# தொண்டமான் செய்தது என்ன?

தோட்டத் தொழிலாளர்கள் குடியிருந்து வருகின்ற 'லயன்' காம்பிராக்கள் குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை, இ.தொ.கா. தலைவரான சௌமியமூர்த்தி தொண்டமானினால் சில வருடங்களுக்கு முன்பு முன்வைக்கப்பட்டது. 1965 ஆம் ஆண்டு முதல் ஐ.தே.க.வுக்கு தனது முழுமையான ஆதரவை வழங்கி வந்த தொண்டமான். 1977ஆம் ஆண்டும் அதற்குப் பிறகும் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் ஐ.தே.கவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியதோடு, பெரும்பான்மையான தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளையும் பெற்றுக் கொடுத்ததன் மூலம் ஐ.தே.கவின் வெற்றிகளுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளார். எனினும் இதற்குக் கைமாறாக தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு சில சலுகைகளையேனும் ஐ.தே.க. அரசிடமிருந்து பெற்றுக் கொடுக்க முடியாத நிலையில், தனது இயலாத்தனத்தை மூடி மறைப்பதற்காக அரையடிமை வாழ்க்கையின் சின்னமாகவும் சுகமான வாழ்வுக்குப் பாதகமாகவும் அமைந்துள்ள இந்தக் குடியிருப்புகளை, குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தார். எனினும் இந்தக் கோரிக்கையை அவர் அமைச்சராக இருக்கின்ற ஐ.தே.க. அரசு எள்ளளவேனும் கவனத்தில் எடுக்கவில்லை.

தோட்டத்தொழில் துறையின் நிர்வாகம் தனியார் மயப்படுத்தப்படுவதற்காக நடவடிக்கைகளை அரசு மேற் கொண்ட சமயத்தில், இந்நடவடிக்கைக்கு ஆதரவளிக்க முடிவெடுத்து இது தொடர்பாக தன்மீது எழக்கூடிய தப்பபிப்பிராயங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வகையில் இக்கோரிக்கை மீண்டும் தொண்டமானினால் முன்வைக்கப்பட்டது. உண்மையிலேயே முழு அக்கறையுடன் இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்குமானால் தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்படுவதற்கு முன்பாக - குடியிருப்புகள் தொழிலாளர்களுக்கு சொந்தமாக ஆக்கப்படுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் தொண்டமானைச் சமாளிப்பதில் கைதேர்ந்த அனுபவம் பெற்ற ஐ.தே.க அரசானது, தோட்டங்கள் தோறும், தோட்டத்துரையைத் தலைவராகவும் காரியாலய உத்தியோகத்தர்களை செயலாளராகவும் பொருளாளராகவும் கொண்டு அமைக்கப்படவிருக்கின்ற ''கூட்டுறவுச் சங்கங்களு''க்கு குடியிருப்பு உரிமைகளை வழங்கும் ஒரு கண்கட்டு வித்தையைப் பட்டப்பகலில் மேடையேற்ற முடிவு செய்தது. ஆயினும் தோட்டங்கள் தனியார்களுக்கு கையளிக்கப்பட்டு பல வருடங்களாகியும் இக் கூட்டுரிமை பற்றிய முடிவைக் கூட அரசாங்கம் செயற்படுத்த எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் 1993, மே மாதம் 17ம் திகதி நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல் காலத்தில், அப்பாவித் தொழிலாளர்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகளை ஐ.தே.கவுக்கு பெற்றுக் கொடுக்கும் கைக்கூலித் தொழில் செய்யும் தொண்டமானும் அவரது சகாக்களும் ஒன்றுகூடி, மே மாதம் 31ம் திகதிக்கு முன்பாக தொழிலாளர்களின் குடியிருப்புகளும் அவர்கள் விவசாயம் செய்யும் காணிகளும் தொழிலாளர்களுக்கே உரிமையாக வழங்கப்படும் என இ.தொ.காவிற்கு பிரச்சாரம் செய்வதற்கு தளம் அமைத்துக் கொடுக்கின்ற ஒரு தமிழ் தினசரிப் பத்திரிகையிலே கொட்டை எழுத்தில் விளம்பரப்படுத்தினார்கள். அத்தோடு மேடை மேடையாகச் சென்று இதனைப் பிரச்சாரப்படுத்தி பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றும் கொண்டார்கள். கடந்த 50 வருடங்களுக்கு மேலாக அறியாமையிலுள்ள தொழிலாளர்களை சுரண்டுவதிலும் ஏமாற்றுவதிலும் தன்னிகரற்ற அனுபவத்தைக் கொண்ட தொண்டமானுக்கு இவ்வாறு பட்டப்பகலில் பொய்கூறி வாக்குகளைப் பெறுவது பிரச்சினைக்குரியதொரு விடயமல்ல. எனினும் 1993, மே மாதம் 31ம் திகதி போய் 1994 மே மாதம் 31ம் திகதியும் முடிந்து மாதங்கள் சில வாகியும் இது சம்பந்தமான எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இதற்கிடையில் தென்மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற போது, அப்பகுதி தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தோடு, பிரதம மந்திரி ரணில் விக்கிரம சிங்காவினால் மீண்டும் இவ்வாறு வாக்குறுதியளிக்கப்பட்டது. தென் தேர்தல்களின் பிறகு இவ்விடயம் மீண்டும் மறக்கப்பட்டதொரு விடயமாகப் போய்விட்டது. இப்பொழுது பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறுவதற்கான அறிவித்தல்கள் விடுக்கப்பட்டதன் பிறகு மீண்டும் இம்மாதம் 17ம் திகதி தோட்டக்குடியிருப்புகளை தொழிலாளர்களுக்கு கையளிப்பதற்கான வைபவமொன்று நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வழமையாக தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகளை பராமரிக்கும் பொறுப்பு தோட்ட நிர்வாகத்தைச் சார்ந்ததாகவே இருந்து வந்துள்ளது. இப்பொழுது தொண்டமானின் கோரிக்கைக்கு இணங்கி தொழிலாளர்களை ஏமாற்றும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகின்ற இந்த தந்திரமான நடவடிக்கையின் மூலம், குடியிருப்புகளை நிர்வகிக்கின்ற பொறுப்பு தோட்ட நிர்வாகத்திடமிருந்து விலக்கப்படுகின்றது. இக் குடியிருப்புகளை பராமரிக்கின்ற பொறுப்பும் நிர்வகிக்கின்ற பொறுப்பும் 'தோட்டத் தொழிலாளர்களது நலன்புரி நம்பிக்கை அமைப்பு' என்ற ஒரு அமைப்பிடம் ஒப்படைக்கப்படவிருக்கின்றது. தோட்டத் தொழிலாளர்கள் அமைக்கப்படவிருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களில் 250/= சந்தாப் பணத்தினை கட்டி அமைக்கப்படவிருக்கிற சங்கத்தின் அங்கத்தினராக இருக்க வேண்டும் என்றும் அதன் அடிப்படையில் தொழிலாளர்கள் கூட்டுரிமையாக இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒப்படைக்கப்படவிருக்கின்ற குடியிருப்புகளுக்கு மறைமுகமான பங்குதாரர்களாக வரவிருக்கின்றனர். ஏதேனும் காரணத்தின் அடிப்படையில் தொழிலாளர் ஒருவரை அவரது அங்கத்துவத்திலிருந்து கூட்டுறவுச் சங்கம் நீக்குமேயானால் அவர்

**மலைஞானி**

சகல உரிமைகளையும் இழந்தவராக ஆக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படலாம். நாளடைவில் தான் வாழுகின்ற குடியிருப்புகளை பாதுகாப்பது பழுதுபார்ப்பது சீரமைப்பது போன்ற பொறுப்புக்களும் இவர்களின் தலைமேல் சுமத்தப்படும் நிலைமை ஏற்படலாம். எல்லாவற்றிக்கும் மேலாக தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்தமாக உரித்தாவணங்களுடன் குடியிருப்புகள் வழங்கப்படாத இந்த நிலையற்ற செயற்பாட்டின் மூலம் எதிர்காலத்தில் அவர்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படக் கூடிய காணிகளையோ வீடுகளையோ பெற்றுக் கொள்வதிலிருந்து ஒதுக்கி விலத்தி வைக்கப்படும் நிலைமை ஏற்படலாம்.

வருடத்துக்கு பத்துலட்சம், பதினைந்து லட்சம் என வீடுகளைக் கட்டுவதற்காக பிரச்சாரம் செய்கின்ற ஐ.தே.க. அரசுக்கு, பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் முஸ்லீம் மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் பலாத்காரமாக, அரச செலவில் சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்தி, சிங்கள மக்களைக் குடியேற்றுவதன் மூலம் தமது பேரினவாத வேட்கையை பூர்த்தி செய்வதற்காக பல கோடி ரூபாய்களை செலவு செய்கின்ற ஐ.தே.க. அரசுக்கு, இந்நாட்டின் அபிவிருத்திக்கு பல தலைமுறைகளைப் பலிகொடுத்து பல்வேறு அடக்குமுறைகளின் மத்தியிலும் பேசாமடந்தையாக வாழுகின்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு முறையான குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்து அவற்றை அவர்களுக்கு உரிமையாக்குவது ஒன்றும் கடினமான காரியமல்ல. ஆனால் இந்த அரசாங்கத்தைப் பதவியில் இருத்துவதற்கு முக்கிய சக்தியாக விளங்கிய மலையக மக்கள் மத்தியில், சந்தர்ப்பவாதத்திற்கும் சுயநலத்திற்கும் அப்பால் நின்று, மக்களின் அபிலாசைகளை கருத்திற் கொண்டு செயற்படக் கூடிய அமைப்புகளோ தலைமைகளோ இல்லாமை ஒரு பெரும் குறையாகும். ஐ.தே.கவுடன் இணைந்திருக்கின்ற இ.தொ.கா தலைமையானது இவ்வகையான வழிகளில் செயற்பட்டு தமக்கு வழங்கப்பட்டுள்ள பதவிகளையும் வசதி வாய்ப்புகளையும் இழப்பதற்குள்ள தமது தயாரின்மையை பலமுறை வெளிக்காட்டியிருக்கின்றது. எனினும் இவற்றை உணர்ந்து தமது எதிர்கால நலனில் அக்கறை கொண்டு செயற்படக்கூடிய தகுதியை மலையகத் தொழிலாளர்கள் இன்னும் பெற்றிராததன் காரணமாக இத்தலைமைகளின் சுரண்டலுக்கும் ஏமாற்றுதல்களுக்கும் தொடர்ந்தும் ஆளாகும் நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

தோட்டங்கள்தோறும் பொதுவான ஒரு இடத்தை தெரிவு செய்து ஒரு குடும்பத்திற்கு குறைந்தது 20 பேர்ச்சஸ் காணியை நிர்ணயம் செய்யப்பட்ட விலைக்குப் பெறக்கூடியதும் அக்காணியில் வீடமைப்புத் திட்டங்களின் அடிப்படையில் வீடுகளை அமைத்து கிராமிய சூழ்நிலையில் மனிதர்கள் வாழத்தகுந்த குடியிருப்புகளை, எதிர்காலத்தில் உரிமையாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இம் மண்ணில் பல தசாப்தங்களாக அந்நிய மனநிலையில் வாழுகின்ற மலையகத் தொழிலாளர்கள் நிரந்தரக் குடிகளாக வேரூன்றுவதற்கு முன்னெடுக்க வேண்டிய முக்கியமான நடவடிக்கையாகும். இத்தகைய மாற்றுக் கோரிக்கையை முன்வைத்து தோட்டக்குடியிருப்புகளை சொந்தமாக்குவோம் என, வாக்கு வேட்டைக்காக நடாத்தப்படுகின்ற கண்கட்டு வித்தைகளை முறியடிப்பது தோட்டத் தொழிலாளர்களின் சமகால கடமைகளில் ஒன்றாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று மலையக சமூகத்தின் உயர்வுக்காக, அவர்களின் தொழிற்சங்க உரிமைகட்காக 20ற்கு மேற்பட்ட தொழிற்சங்க அமைப்புகள் உருவாகி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத் தொழிற் சங்கங்களினால் தொழிற்துறை சம்பந்தமான பிரச்சினைகளை போராட்டத்தின்

டுக்குப் பலியான போராளியின் நினைவு இன்றும் மக்களின் மனதை விட்டு அகலவில்லை. மலையக மக்கள் பல போராட்டக் களங்களைச் சந்தித்திருந்த போதும், தங்களின் அரசியல் உரிமை பறிக்கப்பட்ட பொழுது போராட வேண்டுமென்ற உணர்வு ஏன் உதிக்கவில்லை?

ளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகித்தது.

கண்டியில் இடம்பெற்ற இடைத் தேர்தல் இந்தியவம்சாவழி மக்களான மலையகத் தமிழர் வாழ்வில் ஒரு மாபெரும் பேரழிவுக்கு வழிகோலியது. இத்தேர்தலில் ல.ச.ச. கட்சியின் வேட்பாளர் வெற்றிக்கு

## மலையக அரசியலில் சமூக கலாசார அமைப்புக்கள் - 4

மூலம் அணுகும் பயிற்சியைப் பெற்றனர். இப்பயிற்சிப் பாசறைகளாக இந்த அமைப்புகள் அமைத்து நடத்திய போராட்டமே இன்று தொழிலாளர்கள் அனுபவிக்கின்ற தொழிலாளர் உரிமைகளாகும். போராட்டமும் தியாகமும் இன்றேல் பயனும் இல்லை வெற்றியும் இல்லை என்பதற்கிணங்க போராட்டங்களினால் சில உரிமைகளையாவது தொழிலாளர்கள் வென்றெடுக்க முடிந்தது.

மலையகத் தொழிலாளர்கள் போராட்டக் குணாம்சம் படைத்த

போராட்டங்களினால் தங்களின் உயிர்களை மட்டுமா இழந்தார்கள்? வேலையிழந்து வீதியிலேயே அலைந்தார்கள்; கணவன்னை இழந்து கைம்பெண்ணாக வாழ்ந்தார்கள்; அங்கங்களை இழந்து முடமாக வாழ்ந்தார்கள்; பெரிய காங்காணிமார்களினாலும், தோட்டதுரைமார்களினாலும், நிர்வாகிகளினாலும் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு துடித்த பெண்கள். எத்தனையோ பேரின் கதைகள், மலையகத்தில் மறைந்து கிடக்கின்றன. இந்த இழப்புகளின் தியாகங்களின்

மலையகத் தொழிலாளர்களின் வாக்குப் பலமே காரணம் எனக் கணக்கிட்ட ஐ.தே.க.அரசாங்கம் துரிதமாக செயற்படத் தொடங்கியது. தோட்டத் தொழிலாளருக்கு வாக்குரிமை இருந்தால் இலங்கையின் ஆட்சி இடதுசாரிகள் வசம் சிக்கிவிடும் என்பதை மனதில் வைத்துக் கொண்டு பிரஜாவுரிமைச் சட்டத்தை பாராளுமன்றத்தில் அவர்கள் நிறைவேற்றினர். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தோட்டத் தொழிலாளரின் அரசியல்சக்தி பெருகிவிடக் கூடா

# அரசை நடுங்க வைத்த போராட்டங்கள்

வர்கள், துணிவுள்ளம் படைத்தவர்கள், தியாகம் செய்யத் தயங்காதவர்கள் என்பதைப் பல போராட்டங்கள் நிரூபித்துள்ளன. துரைமாரையும், தோட்ட முதலாளிகளையும் மட்டுமல்ல, அரசாங்க காவலர்களான பொலிஸாரையும் ''முல்லோயா'' போராட்டம் நடுக்கம் காணவைத்தது. தொழிலாளர்களே இப்போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முன்நந்தனர். போராட்டத்தை முறியடிக்க தோட்ட நிர்வாகம் பொலிஸாரை அழைத்தும் பயனற்றுப் போய்விட்டது. அடக்க முயன்றவர்களை எதிர்த்துப் போராடிய தொழிலாளர்களின் துணிவை குறைத்து மதிப்பிட முடியாது. ''முல்லோயா''வில் நடைபெற்ற இப்போராட்டத்தை அடக்க, உறுதி கொண்ட போராளிகள் மீது பொலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இத்துப்பாக்கி 'வேட்டு'க்கு முல்லோயா கோவிந்தன் 'பலி'யாகிய வரலாறு மறக்கப்பட முடியாதது.

துப்பாக்கிக் குண்டுகளைக் கண்டு அஞ்சாத நெஞ்சுரம் படைத்த மக்கள் உருவாகி வாழ்ந்து மலையகத்தில் வரலாறு படைத்துள்ளார்கள். போராட்டத்தில் தழும்பேறிய உடலும், உறுதிகொண்ட உள்ளமும் படைத்தவர்களால் பல தொழிற்சங்க உரிமைகள் வென்றெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு 'வீர'வரலாறு படைத்த சமூகம் அரசியல் உரிமைகளை இழந்த போது மௌனம் சாதித்து. ஏன்?

ஜனாப் ஏ.அஸீஸ் தலைமையில் இயங்கிய ஜ.தொ.காங்கிரஸ் நடாத்திய ''டயகம'' போராட்டத்தில் ஏபிரகாம்சிங்க உயிர்த் தியாகம் செய்தது தொழிலாளர்களுக்குள் இன மத பேதம் இல்லையென்பதை எடுத்துக் காட்டியது. பதுளை கீனாக்கல தோட்டத்தில் நடந்த போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்

விளைவுதான், இப்போது அனுபவிக்கின்ற தொழிற்சங்கங்களின் உரிமைகள் என்பதை மறுக்க முடியாது. இப் போராட்டங்கள் அன்று ஏற்பட்டிருக்காவிட்டால், அதில் மக்கள் துணிவுடன் ஈடுபட்டிருக்காவிட்டால், தொடர்ந்து அடிமைகளாக, அவலங்களுக்கு ஆளாகி வாழவேண்டியிருந்திருக்கும்.

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் இப்போராட்டங்களினால் முற்று முழுதாகத் தீர்க்கப்பட்டுவிடவில்லை. அவர்களின் பிரச்சினைகள் இன்னும் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன. மேலும் தொழிற்சங்கங்கள் உதித்த வண்ணம் இருக்கின்றன.

### அரசியல் உரிமை பறிக்கப் பட்டது :

ட்டங்களில் தொழிற்பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வளர்ந்து வந்த சமூகம், அரசியல் சமூகப் பொருளாதாரப் பிரச்சினையைப் பற்றிச் சிந்திக்கவில்லை.

**வி.ரி.தர்மலிங்கம்**

1931ம் ஆண்டு டொனமூர் அரசியற் சீர்திருத்தம் இலங்கை மக்களுக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கியது. அவ்வேளையில் அமைந்த அரசாங்க சபையில் இந்திய வம்சாவழி மக்களின் பிரதி நிதிகளாக நான்கு பேர் (4) இடம் பெற்றனர். ஒருவருக்கு தொழில் மந்திரிப் பதவியும் வழங்கப்பட்டது. இடைவிடாத வற்புறுத்தல் போராட்டத்தின் பயனாக 1948ம் ஆண்டில் இலங்கை சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி சுதந்திர இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. இந்திய வம்சாவழிகளை பிரதிநிதித்துவபடுத்தும் இலங்கை இந்திய காங்கிரஸ் இத்தேர்தலின் மூலம் 7 தொகுதிகளில் வெற்றிபெற்று பாரா

தென்பதில் கவனமாகவிருந்து படிப்படியாக குறைத்துக் கொண்டே வந்தவர்களின் எண்ணம் இதன் மூலம் நிறைவேற்றப்பட்டது. அன்றைய சட்டமூலத்தின் ஊடாக மலையக மக்களின் அரசியல் சக்தி அழிக்கப்பட்டது. அவர்களை அரசியல் அனாதைகளாக்கி அந்தமக்களின் அவலமான வாழ்க்கை தொடர வழிவகுக்கப்பட்டது.

மலையக மக்களின் அரசியல் உரிமை பறிக்கப்பட்ட பொழுது பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த இ.இ.கா பிரதிநிதிகள் தங்களின் ஆக்கபூர்வமான எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை. போராடி முறியடிக்கக் கூடிய மக்கள் சக்தியைப் பெற்றிருந்தும் போராட்டத்தின் மூலம் தொழில் உரிமைகள் பலதைப் பெற்ற துணிவுமிக்க மக்களைப் பெற்றிருந்தும் அந்த மக்களின் அரசியல் உரிமை பறிபோன போது அந்த மக்கள் சக்தியை இந்தத் தலைவர்கள் பயன்படுத்தாதது ஏன்?

''சத்தியாக்கிரகம்'' என்ற பெயரால் கொழும்பில் விரட்டியடிக்கப்பட்ட போராட்டக் கதையொன்று சொல்லப்படுகின்றது. போராட்டக் களத்தில் உயிர்த்தியாகம் செய்த போராளிகளின் வரலாறு எங்கே? கொழும்பில் நடத்திய இந்தப் போலியான போராட்டக் கதையெங்கே? போராட்ட வரலாறு படைத்ததை, அந்த வீரமிக்க மக்களை அவமானப்படுத்தவா இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் நடாத்தப்பட்டது? இப்போராட்டம் மக்கள் போராட்டமாக உருவாக்கப்பட்டிருந்தால் மலையக மக்கள் அரசியல் அனாதைகளாக வாழ்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்நாட்டில் சமஉரிமை பெற்றமக்களாக வாழ்ந்திருக்கலாம்.

**(வரும்)**

## அதிகாலை மூன்று முப்பது கொழும்பு....




இரவு,
நித்திரை... நித்திரையா?
பொரிகள் சிந்திக் கிடக்கின்றன.
பொற்சுண்ணப்பாடல் ஓயாது... ஓயாதோ?
வெற்றுத் தோரணங்கள் வெய்யிலில் ஆட
பாடை சுமக்கிறான் தம்பி.
சாவீட்டின் வாசம்.
இல்லை
வேண்டாம்
அறுத்தெறி
அமங்கலமான தோரணங்களை.
கைகளை நீட்டுகிறேன்
இன்னும் நீட்டுகிறேன்
ஏன் எட்டவில்லை?
சிறுகடலுக்கப்பால் நான்,
அப்பாலுக்கும் அப்பால்...

அநாதரவான விழிகளுடன் அழைக்கிறாள் அம்மா,
'வா இங்கு'
வரமாட்டேன் அழைக்காதே என்னை
பார் நானிங்கு நாடகங்கள் பார்க்கிறேன்
என் நண்பனுடன்.
தேசத்தின் துயரங்களைச் சொல்லி அழுகிறேன்
கனன்றெரி இதயங்கள் தாங்கி அவர் போன காலத்தின்
நினைவுகளை நான் என்ன செய்ய
'ஏன் இங்கு நாடகங்கள் இல்லையா?'
இருந்தன.
திரைவிலகும் போது
எல்லாக்கதிரைகளும் நிரம்பி வழிந்தன.
அரங்கத்தில் அவலத்தின் குரல்கள் உயர்கையில்
என்னைச் சூழ இருந்த கதிரைகள் வெறுமையாகின,
தனித்திருக்க அஞ்சினேன்
அரங்காடிகளின் முகமழிய
இறுதிபாடல் கேட்கத் தொடங்கியது;
''ஆயுதங்கள் அங்கங்கள்''.
அரங்கத்தில் எனது கதிரை வெறுமையாக.
எழுந்து வெளியில் வருகிறேன்.
வாகை மரங்களின் கிழான கல் மணைகளில்
தேனீர்க் கடைகளில்
வாசிக சாலை முன்றல்களில்
காணாமல் போனவர்களின் மனங்கள்
நின்று தயங்குவதைப் பார்த்தேன்.
''உயர்ந்த பாடல்'' என்னைத் துரத்தத் தொடங்கியது.
ஓட விரும்பினேன்;
முடியவில்லை;
வேரோடிப் போயிருந்தேன்.

இரண்டு காலத்துக்குமாகப் பிளவுண்டு போனேன்!

ஆனாலும் அம்மா
உறுதுயரம் பாடாத ஒற்றைப் பனையாகவுள்ளச் சம்மதமோ!
வாயடைத்தால் வாராதே கவிதை!
ஒற்றைக் குயிலானாலும் ஓசை இழக்காதே!!

'எப்போழுதோ நீ வருவது?'
எல்லா மனிதரும் உங்கு வரக்கூடியவொரு நாளிலாய்
'வருவாரோ உன் நண்பர்களும்?'
..................
நான் தலையை குனிந்து கொண்டேன்

வார்த்தைகள் தோற்றதும்
வாவென்று இழுத்தாள்.
மாட்டேன்!
கடலுக்கப்பாலும் கைகளை நீட்டி இழுத்தாள்.
இழுபறி;
போராட்டம்.

இதென்ன
உராய்வற்ற உயர் வேக வாகனத்தின்
கையற்ற சாரதியா நான்!
வெளியே பாய வேண்டும்! பாய்!!
திடீர் என கலங்கிய நிறங்களின் குட்டையில் நான்
முக்குளிக்கிறேன்
மூச்சற்று;
மொழியற்று;
வாராதோ வாய்?
ஐயோ!

உன்னி எழுகிறேன்
இருள்;
வியர்வை
பளீர் என எரிகிறது மின்குமிழ்
கரியா நகிடின்ன... நகிடின்ன... இக்மன்ட என்ட.. நகின்ட...★

★ இழிந்தவனே.. எழும்பு...எழும்பு...கெதியாவா...ஏறு...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எப்போதும் மேடையை விட - மேடையின் பின்புறத்திலேயே சுவாரஸ்யமுண்டு. பின்புற வாய்ப்புக் கிடைத்த ஒருவர் பேசும் போது அது இன்னும் சுவாரஸ்யமாக இருக்கும்.

இந்தப் ''பிரமுகரை'' நீங்களும் சந்தித்திருப்பீர்கள். அல்லது கறுப்புக் கண்ணாடிக் காரில் - முன்புறத்தில் சிறியதோர் தேசியக் கொடி பறக்க பாதுகாப்பு கெடுபிடிகளுடன் வீதியைக் கீறிப் பறந்து செல்கையில் பார்த்திருப்பீர்கள். அல்லது ஊர் ஊராய்ப் பேசக் கேட்டிருப்பீர்கள். இன்னும் சற்று மேலாக பத்திரிகையில் 5செ.மீ X 5செ.மீ. புகைப்படத்துடன் 17 வருடங்களாக ஒரேவகையான அறிக்கைகளுடன் பார்த்திருப்பீர்கள்.

''பிரமுகர்கள்'' தொடர்பான விழாக்களை நடாத்த வேண்டிய உத்தியோகபூர்வப் பொறுப்பு எதுவும் பிரதேச செயலாளருக்கு உரியதல்ல. பிரதேச செயலாளர்- தான் ஒரு அரசாங்க அதிபருக்கு அல்லது இந்தியாவின் கலெக்டருக்குச் சமனான அதிகாரம் உடையவர் என்ற ரீதியில் விழாக்களில் மட்டுமே கலந்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் பிரமுகர் தொலைபேசியில் உறுக்கி எச்சரித்த மறுகணம் - எப்படித்தான் போய் விழுந்தாரோ என்று வியக்கும்படி -பிரமுகரின் காலடியில் கிடந்தார். இறப்பர் நாடாவால் சுண்டப்பட்ட பந்தின் நிலை அவருக்கு. கழுத்தில் கட்டியிருந்த ''ரை'' பிரமுகரின் கால்களுக்குள் அகப்படாமல் பார்த்துக் கொண்டார். தேவையான வேளைகளில் பிரமுகர்தான் - பிரதேச செயலாளரின் சேட் கொலரைப் பிடித்து எழுப்பி எழுப்பி நிமிர்த்தினார்.

நாட்டின் சகல பிரதேசங்களிலும் தேர்தல் கால ''அசுரவேகம் களைகட்டியிருந்தது. அதனால் பிரதேச செயலாளர் பாடு அதோகதியானது. வெளியூர் பிரமுகர்கள், முக்கிய பேச்சாளர்கள், பாடகர்கள் என்று வரவேற்று அந்தஸ்த்துக்கேற்ற வீடுகளில் தங்கவைத்தல் தொடக்கம் வீதிகள்..... தோரணங்கள் வரை அனைத்தும் சரிவர உள்ளனவா என்று பார்ப்பதுவரை அனைத்துப் பொறுப்புக்களும் அவர் தலையில் மலையெனக் கவிழ்ந்து கிடந்தன.

சிங்கங்களிடம் ஊழியம் பார்ப்பதென்பது சாமானிய வேலையா.....? சிரிக்கிற வரை தான் உயிர்.....! சினந்தால் அத்தனையும் மயிர்....! குடியரசின் அதிகாரமல்லவா.....? அதிகாரத்தின் உச்சம்....!

ஒருதடவை பிரமுகரின் நடிகை போன்ற மகளை தலைநகருக்கு அனுப்ப தனது ''எயாகண்டிசன்'' வாகனத்தையும் விட்டுக் கொடுத்து விட்டுத்தான் பயணம் போனதாக மேலிடத்துக்கு அறிவித்தார். மகள் அதியுயர் கல்வியை அயல்மொழியில் புகட்டும் கல்லூரி ஒன்றில் படித்துக் கொண்டிருந்தது.

மகளுக்குப் ''பூ'' என்றால் கொள்ளை ஆசை. நமது வீட்டுப் பெண்களுக்கும் பூப்பைத்தியம் இருக்கிறது. இது அப்படியல்ல. பூவை ஒருத்தி விரும்பவில்லை என்றால் - பெண்மைக்கே லாயக்கில்லாதவள் என்று யாரும் எண்ணிவிடக்கூடாதென்ற ஆசை. கூடவே பவிசும் இருந்தது.

இன்னும் ஏதாவது புதியவகை பூக்கள் கிடைக்குமா என்று போவோர் வருவோரிடமெல்லாம் கேட்டாள். தபால்காரன், தந்திக்காரன்களையும் விட்டபாடில்லை. நாள் முழுக்க பூக்களுக்கு அருகில் சென்று அவை மொட்டு விட்டதா.... மேலும் மலர்ந்ததா.... என்று பார்ப்பது அவளது பகல் வேலையாக இருந்தது.

பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளராக இருந்த காலத்தில் தான் அந்த ரெலிபோன் எச்சரிக்கை கிடைத்தது. அன்று பிரமுகரின் முன் குழைந்து விட்டு நிமிர்ந்த முகூர்த்தத்தில் தான் மகளின் கண்கள் இவனைப் பார்த்தன.

அவ்வளவு தான். அன்று முதல் ஒரு வார காலத்திற்கு கலர் கலராக பூக்களாகவே கனவுகள் குவிந்தன. எல்லாம் விதம் விதமான ரோஜாக்கள். விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கு அப்பாற்பட்ட கலர்களில் எல்லாம் ரோஜாக்கள் மலர்ந்தன.

அவள் எதிர்ப்படும் போதெல்லாம் நவீன வகை ரோஜாவொன்றை மறைத்து வைத்துக் கொண்டு கடந்து செல்வது போன்ற பிரமை. அவள் தனது கனவுகள் ததும்பும் விழிகளை அலையவிட்டபடி நடந்தாள்.

அதனால் பிரதேச செயலாளரை அந்த வீட்டில் காண்பது சகஜமாகி விட்டது. சம்பளமில்லாத வேலைக்காரன் தானாக வந்தால் யார்தான் வேண்டாம் என்பார்கள்.

தேர்தல் வேலைகளுக்கு மத்தியில் பம்பரமாய்ச் சுழன்ற களைப்பில் சற்று ஓய்வெடுக்கலாம் என்று வீட்டிற்கு வந்து படுக்கையில் வீழ்ந்து பிரமுகர் சொன்ன அந்த முக்கிய விடயத்தை நினைவுக்கு கொண்டு வந்தார்.

''.... நாளை நடாத்துவதுதான் கடைசிக் கூட்டம்.... நாளை இரவு 12.00 மணிக்குப் பின்னர் எந்தக்கூட்டமும் நடாத்த முடியாது.... கடற்கரை ஓரத்தைச் சாடி இருக்கின்ற மெயின் ரோட்டுக்குப் பக்கம் உள்ள சூனியக் கிழவன்ட வளவில் கூட்டம் வைக்க வேணும்....'' என்று பிரமுகர் கூறியிருந்தார்.

எதிர்கட்சிக்கு ஏகப்பட்ட ஆதரவுள்ள அந்தப் பிரதேசத்தில் கூட்டம் நடாத்த அந்த இடம் மிக்க பொருத்தம் என்று அவரைச் சுற்றியிருந்தவர்கள் கூறியிருந்தனர். அவர்கள் சிறந்த கதாசிரியர்களையும் மிஞ்சும் அளவுக்கு மற்றவர்களின் குணாதிசயங்களைப் பற்றியும்..... பிரத்தியேக தகவல்களைப் பற்றியும் பிரமுகருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்....

....உங்களுக்கெண்டால் உலகத்தில் கிடைக்காத ஏதும் உண்டா.... என்ற விதத்தில் அவரைக் குளிரச் செய்து விட்டு வந்திருந்தார் பிரதேச செயலாளர். எதிர்கட்சிக்காரர்கள் தடை போட்டால் என்று நினைக்கும் போது உடம்பு சூடேறியது. இந்தப் பொறுப்பு அவரை மிகவும் பாரமாக அழுத்தியது.

அந்தப் பிரதேசத்திற்குப் பரிச்சயமான ஒரு உத்தியோகத்தரையும் அழைத்துக் கொண்டு உடனே கிழவரின் வீட்டுக்குப் புறப்பட்டார். பித்துப்பிடித்தவன் போல சிறுசிறு வீதிகளிலும், குடிசைகளிலும் இறங்கி இறங்கி விசாரித்தது சற்று வெட்கத்தையும் உண்டாக்கியது.

அதை வீடென்று சொல்ல முடியாது. அதைச் சுற்றிலும் குப்பைக் கீரைகளும் நாயுருவிகளும் முளைத்திருந்தன தென்னோலைப் படலையைத் தூக்கி வைத்தபடி உள்ளே போக வேண்டியிருந்தது. குடிசை மூலையில் சிறு குஞ்சுக் கோழிகள் மேய்ந்த படி இருந்தன.

இந்த வளவுதான் பிரமுகர் குறிப்பிட்டது என்று அறிந்து கொண்டனர். அப்பச்சி... என்று குரல் கொடுத்ததும் - தோல் மூடிய ஓர் உருவம் எழுந்து போர்வையை விலக்கியபடி திண்ணையில் அமர்ந்திருந்தது. முகமெங்கும் முதுமையின் உக்கிரம் வேரோடியிருந்தது.

பிரதேச செயலாளர் சுருக்கமாக விசயத்தைக் கூறினார். கிழவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. உடனடியாகவே மறுத்தார். பிரதேச செயலாளரும் தனது குரலில் கோபத்தைக் காட்ட ஆரம்பித்ததும் கிழவர் பணிந்து தன் நிலையைச் சொல்லத் தொடங்கினார்.

வயது போய்விட்டது... வேறு இடம் இல்லை... உதவிக்கு யாருமில்லை... என்றெல்லாம் சாட்டுக்கள் சொல்ல வேண்டாம் என்ற விதமாகப் பிரதேச செயலாளர் பேசினார். கொடுக்க மறுக்கும் பட்சத்தில் எப்படி எடுத்துக் கொள்வதென்பது தனக்குத் தெரியும் என்று விளக்கினார். பிரமுகருடன் தொடர்புள்ள விசயம் என்பதையும் பட்டும் படாமல் சொருகினார்.

பொலிஸ் என்ற கடைசி வார்த்தைப் பிரயோகம் கிழவரை அழச் செய்யும் நிலைக்குத் தள்ளிற்று. வேறு வழி இல்லை என்ற பின்னரும் கிழவர் பேசி மன்றாடினார். வீதி விபத்தொன்றில் தனது வலது கால் அகற்றப்பட்டதற்குப் பின்னர் இந்தவளவுக்குள் தான் வளர்த்திருக்கும் கீரைகளும், வல்லாரைகளுமே தனக்குச் சோறுபோடும் விடயத்தைச் சொன்னார்.

எதிரே இருக்கும் பள்ளிவாசலில் தொழ வரும் ஆட்கள் இவற்றைப் பிடுங்கி எடுத்துக் கொண்டு தரும் காசுகளிலேயே தனது சீவியம் நடப்பதாகச் சொன்னார். பிரதேச செயலாளர் கிழவரின் அழுகை கண்டு அசந்து போனார். எனினும் அவர் விசயத்துக்கே வந்தார்.

...... ஒரு நாளைக்கு மட்டும் தானே.... பயிர்கள் அழிஞ்சால் நாங்கள் நஷ்டஈடு பெற்றுத் தருவோம் ... நீங்களும் அடுத்த நாளே பயிர்களைப் போட்டுக் கொள்ளலாம்.... என்றார்.

கிழவர் குழப்பமடைந்தார்.

இந்தக் கீரைகளை வளர்த்தெடுக்க 3 மாதங்கள் பிடிக்கும் என்றார்..... தனக்குக் காய்ச்சலாக இருப்பதாகவும்..... இப்போது கடும் கோடை பிடித்துவிட்டதென்றும் சொன்னார்..... முக்கிய மாகவேலி அழிந்து போனால் அதைத்திருத்திக் கட்ட தன்னால் எழுந்து ஒரு கிடுகைக்கூட தூக்க முடியாதிருப்பதாக விளக்கினார்...."ஏன் ராசா என்ர சோத்துக்குள்ள மண்ணைப் போடுறியள்..." என்று மன்றாடினார்.



# ஜெயவேவா..

நற்பிட்டிமுனை பளீல்

எந்த அரசியல் கூட்டங்களுக்கும் அனுமதி கொடுப்பதில்லை என நிர்வாக சபையினர் தீர்மானித்திருப்பதாக கடந்த வாரம் கூறிய பக்கத்துப் பள்ளிவாசல் மு அத்தினின் பேரும் தேர்தலின் பின்னர் இடமாற்றம் செய்யப்படும் பிரமுகரின் பட்டியலில் இருந்தது.

பிரதேச செயலாளருக்கு வேறு வழி தெரியவில்லை, பிரமுகருக்கு இதெல்லாம் விளங்கவும் மாட்டாது. அவருக்கு விளங்குவதெல்லாம் முடியாது சேர் என்பவனையெல்லாம் மூடிய வைப்பது; அல்லது அவனின் பதவியில் பேனையை வைப்பது.

தராத பட்சத்தில் வளவு அபகரிக்கப்படும் என்றும், அன்று பின்னேரம் பொலிஸ் ஜீப்பில் தாங்களும் வருவதாகவும் தெரிவித்து விட்டுக் கிளம்பி விட்டார்கள்.

.....இனவாதத்தை அள்ளி வீசி, அநீதியான, அட்டூழியமான ஒரு சமூக அமைப்பில் நாம் வாழ நேர்ந்ததன் அவலம் என்ன....? இந்தப் பூமியில் உள்ள மனிதர்கள் யாவரும் நகமே வெட்டாத மனிதக் கரங்கள் அழுத்தும் துப்பாக்கித் திசையில் தங்கியிருப்பதன் மர்மம் என்ன...? நாம் போய்க் கொண்டிருப்பதெங்கே...? விடுதலை..... விடுதலை.... என்று எதிர்க்கட்சிக்காரர்கள் கனவிலும் பிடிபடாதபடி பயங்கரங்களை எம்முன் ஏன் நிரந்தரமாக்கி வைக்கிறார்கள்... இப்போது இவர்கள் கக்கும் இனத்துவேசம் மூலம் இந்த நாட்டை 600 தடவைகளுக்கு மேல் அழிக்க முடியும்....

...... போதாக்குறைக்கு நீதியான எம்கட்சிக்கு ஆதரவு அதிகரித்து வருவதைச் சகிக்க முடியாத சிலர் நாங்கள் பேரினவாதக் கட்சி என்று பிரச்சாரம் செய்து வருகின்றனர்.... உண்மையில் அவர்கள் தான் பேரினவாதக் கட்சிகளின் ஏஜென்டுகளாகத் தொழிற்படுகின்றனர்.... இந்த அழிவுசக்திகளை எதிர்த்துப் போராட வேண்டியது ஒவ்வொருவரதும் கடமை.....

....அதன் ஒரு அடையாளமாகவே கூட்டம் வைப்பதற்கு இடமில்லை என்றிருந்த போது இந்த வளவுக்கார மனிதர் தன் வளவை தானாகவே முன் வந்து தந்தார்.... அந்த முன்மாதிரியை நாம் எல்லோரும் பின்பற்ற வேண்டும்.... அதற்காக அவரை இந்த மேடையில் இருக்கச் செய்து கௌரவித்திருகின்றோம்..... என்று பிரமுகர் பேசி முடித்தார்.

பலத்த ஆரவாரங்கள் எழுந்தன. வெடிச்சத்தங்கள் முழங்கின. பரந்து விரிந்து தெரிந்த மனிதக் கூட்டத்தின் ஆயிரக்கணக்கான தலைகளை இரசித்த பிரமுகர்கள் சில நிமிடங்களின் பின் தமது வழமையான வேலைகளுக்காகக் கலையத் தொடங்கினர். பொலிஸ் வாகனங்களும், பட்டாளங்களும் பிரமுகரின் காரைத் தொடர்ந்து அணிவகுத்துச் சென்றன.

கீரைகளும், வல்லாரைகளும் முறிந்தும் துவைந்தும் இரண்டு நாட்களாகக் கிடந்தன. வேலியிலிருந்த சூழிகள் மாத்திரம் சுவடுகளாகத் தெரிந்தன. சாணியால் மெழுகிய திண்ணையில் கிழவர் உரத்த காய்ச்சலோடு படுத்துக் கிடந்தார். தனது பழுப்பேறிய கண்களைச் சுருக்கி வளவை உற்றுப்பார்த்தார்.

மறுநாள் காலை 7 மணியளவில் பிரதான வீதியில் அந்த ஓசை வெள்ளம் பெருக்கெடுத்தோடி வந்தது. கானகமே இடம் பெயர்ந்து வந்துவிட்டதைப் போல காட்டொலிகள் கேட்டன.

பாம்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து கையில் சலங்கையுடன் வாலில் நடந்தபடி வீதிவலம் வந்து கொண்டிருந்தன. இராட்சத தேள்கள் தமது ஒரு கொடுக்கில் பதாகைகளை இறுக்கிய படி நடனமாடிக் கொண்டிருந்தன.... தவளைகள்..... ஆமைகள் எல்லாம் ஆங்காங்கே சந்தோசமிகுதியால் துள்ளிக்குதித்தபடி..... காட்டில் கிடந்த பல்லிகள்..... ஓணான்கள்....: சிலந்திகள்..... மண்புழுக்கள்.... கரப்பான்கள் எல்லாமே தத்தம் தகுதிக்கேற்றபடி பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் பதாதைகளைத் தாங்கிக் கொண்டும் வந்து கொண்டிருந்தன..... தெள்ளு, மூட்டைப் பூச்சிகள், கடியன்கள் அனைத்தும் வீதிகளில்.... அப்போதுதான் விந்துடன் சேர்ந்த சூல்களும் கூட....

ஊர்வலம் சுமார் 3 மைல்களுக்கு நீண்டு தெரிந்தது. மக்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். என்ன நடந்தது என்று அறியும் ஆவலுடன் கதவு இடுக்குகளாலும்..... மதில்களுக்கு மேலாலும் தலைகளைத் தொங்க விட்டபடி ஊர்வலத்தைப் பார்த்து வியந்து நின்றனர். தம்மையும் மீறி வாயால் சத்தம் வந்து விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையில் அரசாங்கம் இலவசமாக வழங்கிய உணவு முத்திரை.... ஜனசவிய முத்திரைகள்... குடும்ப அட்டைகள்.... என்பவற்றைக் கொண்டு வாய்களை இறுக மூடி வைத்திருந்தனர் சிலர்.

ஊர்வலத்தினூடே தன் அருகே கடந்து சென்ற ஒரு மண்புழுவிடம் துணிவுள்ள ஓர் மாது கேட்டாள்.

''.....என்னஇது....''

மண்புழு துள்ளிக்குதித்தபடி நின்றது. அதனை ஒட்டிவந்த சில ஜீவராசிகளும் சற்று நின்றன.

''...மனுசி... தெரியாத செய்தி.... நாங்கள் வாக்குகள் எண்ணப் பட்ட அம்பாறைக் கச்சேரிப் பகுதிக் காடுகளுக்குள் இருந்து வருகின்றோம்.... 17 வருடங்களாக ஆட்சிக்கதிரையில் இருந்து வந்த பிரமுகர் 48 வாக்குகளால் தோற்றுவிட்டார்..... அரக்கர்களின் ஆட்சி முடிகிறது....ஜெயவேவா.... ஜெயவேவா.

அந்த ஜீவராசிகளுக்கு இருப்புக் கொள்ளவில்லை.... துள்ளின...! ஒரு தந்திக்கட்டையின் உயரத்திற்குத் துள்ளிக் குதித்த நாயொன்றுடன் போட்டி போட்டுத் துள்ளிக்குதித்தன....''

ஜெயவேவா....''

ஸ்... உலகம் கெட்டுப்போய்ச்சு.....'' என்றபடி மனிதர்கள் பார்த்துக்கொண்டு நின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சந்திரசேகரன் விடுதலை:
## ராஜதந்திரமா?
## சந்தர்ப்பவாதமா?

"மட்டக்களப்பு சிறைச்சாலை இருதடவை உடைக்கப்பட்ட போதும் நான் தப்பியோடவில்லை. நான் ஒரு நிரபராதி என்பதை உலகிற்கு நீதிமன்றத்தின் மூலம் நிரூபித்து விட்டு வெளியே செல்வதற்காக நாலரை வருடங்களாக காத்திருக்கும் நான் எனது தாயாருக்காக லட்சியத்தை கைவிட மாட்டேன்"
வண.பிதா சிங்கராயர்

சந்திரசேகரன் பிணையில் விடுதலையாவதற்கு காரணகர்த்தா செல்லச்சாமியே என்ற செய்தியை முதன் முதலில் வெளியிட்ட பெருமை சரிநிகரைச் சாரும். ஆனால் அடுத்தடுத்த வாசகர் கட்டுரை, கடிதம், ஆசிரியர் தலையங்கம் ஆகியவற்றில் காணப்பட்ட ஆத்திரத்துடன் கூடிய தொனி தவிர்க்கப்பட்டிருந்தால், அதற்கு பதில் அறிவு பூர்வமாக விளக்கம் தரப்பட்டிருந்தால், அவற்றின் தாக்கம் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

விடயங்கள் முன்வைக்கப்பட்ட விதத்தை விட முன்வைக்கப்பட்ட விடயத்தை ஆராய்வதே முக்கியமாகும் என்பதும் உண்மைதான்.

ராஜதந்திரம் என்றால் என்ன? ஒரு கட்சி அல்லது ஒரு நாடு பிறகட்சியுடன் அல்லது பிற நாட்டுடன் உறவு கொள்ளும் போது தனது அரசியலை முன்னெடுத்துச் செல்வதற்காக பிரயோகிக்கும் உத்தியே ராஜதந்திரமாகும்.
ஒரே சமயத்தில் மேற்கு வல்லரசுகளையும் சோவியத் ரஷ்யாவையும் பகைத்துக் கொண்டு அவற்றின் மீது தாக்குதல் தொடுத்த ஹிட்லரின் பிழையான ராஜதநதிரம் அவனது அழிவுக்குக் காரணமானது.

சந்தர்ப்பவாதம் என்றால் என்ன? அரசியல் நலனை விட தனது சொந்த நலனை முதன்மைப்படுத்துவதே சந்தர்ப்பவாதமாகும். சந்தர்ப்பவாதத்திற்கும் ராஜதந்திரத்திற்கும் இடையில் ஒரு சிறு மெல்லிய கோடே இருக்கிறது. கொள்கையைப் பணயம் வைக்கும் ராஜதந்திரங்களும், தந்திரோபாயங்களும் சந்தர்ப்பவாத வகைப்பட்டவையே.
இனிச் சந்திரசேகரனின் பிணை விவகாரம்:சிறையிலே இருந்து பல உலகத் தலைவர்கள் கூட அதிகாரத்தில் உள்ள அரசியல் வாதிகளின் உதவியை பயன்படுத்தி தமது விடுதலையை பெற்றிருக்கின்றார்கள். இது ஒன்றும் அரசியலில் புதிய விடயமல்ல. சீன புரட்சியின் முன்னணி தலைவர்களில் ஒருவரான சூ-என்-லாய் சிறைபட்டிருந்த சமயம் கட்சியின் அனுமதியுடன் தனது உறவினரான அரசியல் வாதி ஒருவரின் உதவியைப் பெற்று விடுதலையானார். பிற்காலத்தில் அரசியல் எதிரிகள் இவருக்கு எதிராக இவ்விவகாரத்தை தூக்கிப் பிடிக்கத் தவறவில்லை. அப்போது அவ் அவதூறுகளுக்கு சூ-என்-லாய் அல்ல சீன கம்யூனிஸ்ட் கட்சியே பதில் கூறியது.

"எமது தலைவர்களுக்கு உள்ள முக்கியத்துவமும் செல்வாக்கும் அதிகம். ஆனால் தலைவர்கள் எவ்வளவு தான் மகத்தானவர்களாக இருந்தாலும் தனிப்பட எந்த தீர்மானத்தையும் எடுப்பதற்கு உரிமையில்லை- குறிப்பாக தமது சொந்த விடுதலை போன்ற விவகாரங்களில்.

"லெனின் தேடப்படும் ஒரு நபர். அவர் தாமாக முன்வந்து சரணடைய வேண்டும்" என்று ரஷ்ய அரசு அறிவித்த போது அவ் விடயத்தைப் பற்றி தனது கருத்தை தோழர் லெனின் கூறினார். ஆனால் அது சம்பந்தமாக முடிவெடுக்கும் பொறுப்பை கட்சியிடமே அவர் விட்டு விட்டார்.

பிற்காலத்தில் என்னதான் தவறுகள் இழைத்தாலும், ஸ்டாலின் சிறையிலே வாடும் போது அதிலிருந்து தப்பி ஓடுவதற்குக் கூட கட்சியின் அனுமதிக்காக காத்திருந்தார்.

ஆனால் சந்திரசேகரன் துரதிஸ்டவசமாக கட்சியின் எந்த மட்டத்திலும் தீர்மானம் எடுக்கப்படாமல் தாமாக தமது பிணைபற்றி செல்லச்சாமியுடன் பேசி தீர்மானித்திருக்கிறார் என்பது இப்போது நிதர்சனமாகியுள்ளது. இது ஒரு தவறான முன்னுதாரணமாகும். ஆகவே தான் அவர் மாத்திரமே இப்போது அது பற்றி அறிக்கைகள் விடுத்துக் கொண்டிருக்கிறார்.

ம.ம.முன்னணியின் தலைவர் சந்திரசேகரனுக்கு மக்கள் ஆதரவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்பதை அவரது எதிரிகளும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக தேர்தல் ஒன்றில் சிறையிலே இருந்து கொண்டு வெற்றி பெற்ற பெருமை இவரையே சாரும். மக்கள் ஆதரவைப் பெறுவ்து எளிதான காரியமல்ல. அதனைப் பாதுகாப்பது தான் அதை விட சிரமமான காரியம். திரு.சந்திரசேகரன் இ.தொ.கா.வில் இருந்து செயற்பட்ட காலத்தில் அவர் ஒரு ஜனநாயகவாதி. ஆனால் தீவிரவாதி, நேர்மையானவர், துணிச்சல் உள்ளவர், என்ற நல்லபிப்பிராயம் ஏற்பட்டது. அவரை இ.தொ.கா தலைமையிலிருந்து விலக்கியதற்கு, அவரது செல்வாக்கு அதிகரித்து வந்ததால் அச்சம் கொண்ட இ.தொ.கா தலைமை அவரை திட்டமிட்டு ஓரம் கட்டியதே காரணமாகும்.

அப்போது சிலர் இவருக்கு எம்.பி. பதவி கொடுக்கப்பட்டிருந்தால் இவர் இ.தொ.காவை விட்டு விலகி இருக்கமாட்டார் எனக் குறை கூறினர். ஒரு உண்மையை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். சந்திரசேகரன் இ.தொ.காவில் புதிய தலைமுறையின் கருத்துக்களை வெளிப்படையாக கூறி வந்ததனாலேயே அதை விட்டு வெளியேற நேர்ந்தது. அதே சமயம் அவர் ஒரு உறுதியான கொள்கைப் போராட்டத்தை நடத்தி விட்டு அதிலிருந்து வெளியேறினார் எனக் கூற முடியாது. அதையிட்டு அவரைப் புரிந்து கொண்ட எவரும் அவரைக் கடுமையாக விமர்சிக்க முடியாது.

கடந்த மே தினக் கூட்டம் கொட்டகலையில் நடைபெற்ற போது திரு. சந்திரசேகரன் நிகழ்த்திய உரையில் இதற்கான விடையை அவரே வெளிப்படையாகக் கூறினார். "நான் அரசியலை படித்து விட்டு அரசியலுக்கு வந்தவன் அல்ல. மக்களே என்னை அரசியலில் ஈடுபட வைத்தனர். இ.தொ.கா.வில் இருக்கும் போது நான் முழுநேர அரசியலில் ஈடுபடவில்லை. நான் ஒரு தனியான கட்சியை அமைத்து அதற்கு தலைமை தாங்க வேண்டும் என என்றுமே முனைந்ததில்லை. சூழ் நிலைகளின் நிர்ப்பந்தங்களாலேயே மலையக மக்கள் முன்னணி உருவானது; முழுமையாக நான் அரசியலில் ஈடுபட நேர்ந்தது" என்று அவர் கூறினார்.

சூழ்நிலை நிர்ப்பந்தங்களால் வழிகாட்டப் படும் ஆரம்ப அரசியலில் அப்போது அவர் இருந்தார். எனவே அவரிடம் அப்போது அதிகம் எதிர்பார்ப்பது நியாயம் இல்லை. இப்போது மலையக அரசியலில் செல்வாக்கு செலுத்தும், ஒதுக்கி வைக்க முடியாத, சமூக சக்தியாக அவர் வளர்ந்துள்ளார். மலையகம் நம்பிக்கையோடு எதிர் பார்க்கும் ஒரு அமைப்பின், மலையக மக்கள் முன்னணியின் தலைவர். இப்போதும் அவர் சூழ்நிலையால் வழிகாட்டப்படும் ஒருவராக இருக்கக் கூடாது.

சந்திரசேகரனின் பிணை விவகாரம் இரு தரப்பையும் பொறுத்தமட்டில் ஒரு ராஜதந்திர நடவடிக்கையே. அதில் சந்தேகமில்லை. சந்தர்ப்ப சூழல்களால் ராஜ தந்திரத்தில் திரு.சந்திரசேகரன் வெற்றி பெற்றுவிட்டது போன்ற ஒரு நிலைமை இப்போது உருவாகியுள்ளது. ஆனால் இந்த வெற்றியில் மகிழ்ச்சிகரமான அம்சங்களை விட வேதனைக்குரிய அம்சங்களே அதிகம். இதனை ஒரு சம்பவமாக மாத்திரம் பாராமல் மொத்த நிகழ்ச்சி ஒட்டு மொத்தமான சூழல் ஆகியவற்றின் பின்னணியில் அதனைப் பார்ப்பது நல்லது. விளைவுகளை மாத்திரம் கொண்டு யதார்த்த



நிலைமைகளை எடை போடக் கூடாது.

ம.ம.தலைவர்கள் கைதான போது எதிர் கட்சிகள் குரல் எழுப்பின. இவை ஜனநாயகத்துக்கான நேச சக்திகளின் குரல்கள். முன்னணி ஆதரவாளர்களால் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவுடன் இவர்களின் விடுதலை தொடர்பாக பேசப்பட்டது என்பது உண்மையானால் அதுவும் சரியான நடவடிக்கையே. அதனை நல்லெண்ணம் படைத்த நேச சக்திகளின் நேர்மையான முயற்சிகளாகவே கருத வேண்டும்.

**ஹட்டன் அவதானி**

ஆனால் செல்லச்சாமியை ஒரு நேச சக்தியாக அன்றைய சூழலில் கருத முடியாது.. அவ்ரது அக்கறையை எதிரணிகளும் ஜனநாயக சக்திகளும் காட்டிய அக்கறையோடு ஒப்பிட முடியாது. இரண்டிற்கும் அடிப்படையிலே வேறுபாடுண்டு. செல்லச்சாமியின் அக்கறையின் பின்னணியைச் சற்றுப் பார்ப்போம். ஜனதிபதி விஜேதுங்க இப்போது இலங்கையில் இனப்பிரச்சினை என எதுவுமே கிடையாது என்று கூறிக் கொண்டிருந்தார். சிறுபான்மையினரின் தயவால் பெரும்பான்மையினர் வாழ வேண்டிய அவசியமில்லை என பிரச்சாரம் செய்து வந்தார். தனது அரசாங்கம் சிறுபான்மையினரின் தயவை எதிர்பாராத சிங்கள அரசாங்கம் என்று சிங்கள மக்களை நம்ப வைப்பதற்காக தொண்டமானின் சிறகுகளை கத்தரிக்க முயன்றார். தொண்டமானின் சந்தர்ப்பவாத அரசியல் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் இச்சந்தர்ப்பத்தில் அவர் விஜே



துங்காவின் போக்கிற்கு எதிராக முரண்பட்டார். அல்லது அந் நிலைக்கு சூழ்நிலைகளால் தள்ளப் பட்டார். ஆகவே சகல ஜனநாயக சக்திகளும் தொண்டமானை ஆதரித்தன. இச்சமயத்தில் விஜே துங்காவின் முயற்சிக்கு துணை போனவர் இந்த செல்லச்சாமி. இதனால் அவருக்கு "காட்டிக் கொடுத்த செல்லச்சாமி" என்ற பெயர் ஏற்பட்டது. மலையகத்தில் அவர் தலை காட்ட முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் அவர் விஜே துங்க அரசில் மென்மேலும் சார்ந்திருக்க வேண்டிய நிலைமை உருவானது.

இச்சூழலில் தொண்டமானைப் பல வீனப் படுத்தக்கூடிய ஒரு அணியை மலையகத்தில் உருவாக்க விஜே துங்க அரசு முயன்றது. செல்லச்சாமியினூடாக பேச்சு வார்த்தை நடத்தி சந்திரசேகரனை விடுதலை செய்வதன் மூலம் தொண்டமான் எதிர்ப்பு அணியை பலமடையச் செய்ய நினைத்தது. இதற்கு செல்லச்சாமியும் சந்திரசேகரனும் ஒரே அமைப்பில் ஒன்றுபட வேண்டும் என்பதில்லை. இது குதிரைக்கு "கரட்"டை நீட்டும் ராஜதந்திரமாகும். அரசின் பொறிக்குள் திரு.சந்திரசேகரன் அப்போது அகப்பட்டுக் கொண்டார் என்று தான் கருத வேண்டும். ஏனெனில் தென் மாகாண சபை தேர்தல் முடிவுகள் வேறுவிதமாக அமைந்து தொண்டமானின் முக்கியத்துவத்தை விஜே துங்க உணர்ந்து தனது தேர்தல் தந்திரோபாயத்தை மாற்றிக் கொள்ளாமல் இருந்திருந்தால் அதாவது சிறுபான்மையினருக்கும் தொண்டமானுக்கும் எதிரான விஜே துங்காவின் தேர்தல் அணுகு முறை மாறாதிருந்தால் பிணையில் விடுதலையான சந்திரசேகரன் பல நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகி இருப்பார். ம.ம.முன்னணி இக்கட்டான நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கும். எனவே சந்திரசேகரன் பிணை விவகாரம் ஒரு ராஜதந்திர நடவடிக்கை என்றால் அன்றைய சூழலில் அது ஒரு ஆபத்தானதும் தவறானதுமான செயற்பாடாகும்.

"மக்களிடமிருந்து தனிமைப்படாமல் அரசியலை முன்னெடுத்துச் செல்லும் அவசர தேவை காரணமாக இவ்வாறு செய்யப்பட்டது என இப்போது இச்செயலை விவரிக்க முடியாது. ஏனெனில் ஆரம்பத்தில் இருந்த நெருக்கடி நிலைமை பின்னர் மாறி விட்டது. மாகாணசபை தேர்தலின் பின்னர் இந்த தனிமைப்பாடு இல்லாமற் போய்விட்டது. முன்னணி தலைவர்களின் வழக்கு விசாரணை ஆரம்பமான பின்னர் மக்களுக்கு உண்மை நிலைமை புரிய ஆரம்பித்துவிட்டது. இதனால் ஏற்பட்டிருந்த அனுதாப அலையே சந்திர சேகரனை மாகாண சபை தேர்தலில் வெற்றி பெற செய்தது. இன்னும் அந்த அலை ஓயவில்லை.

நான் அண்மையில் ஒரு கிறிஸ்தவ பாதிரியாருடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது காலஞ் சென்ற வண.பிதா.சிங்கராயரின் மன உறுதியைப் பற்றி குறிப்பிட்டார். வண. பிதா.சிங்கராயரின் தாயார் மரணப் படுக்கையில் குற்றுயிரோடு இருந்த போது அந்த சம்பவம் நடைபெற்றது. சிங்கராயரின் வழக்கு தீர்ப்பு அரசுக்கு சாதகமாக அமையாது என்பது அப்போது நிதர்சனமாகி விட்டது. வழக்கு தீர்ப்பு வெளியானால் ஒரு நிரபராதியான கிறிஸ்தவ பாதியாரை நீண்ட காலம் பிணை மறுக்கப்பட்ட நிலையில் தடுப்புக் காவலில் வைத்திருந்த பழி தனது அரசைச் சாரும்; கிறிஸ்தவ நிறுவனங்களினதும், மனிதாபிமான அமைப்புகளினதும் கேள்வி- கண்டனகணைகளுக்கு இலக்காக வேண்டிவரும் என்பதை முன் கூட்டியே உணர்ந்த தந்திரசாலியான ஜே.ஆர். இந்த சிக்கலில் இருந்து தப்புவதற்காக ஒரு உபாயத்தைக் கையாண்டார். அவருக்கு நெருக்கமான கிறிஸ்தவ பாதிரி ஒருவர் தூது அனுப்பப்பட்டார். தாயாரின் உடல் நிலைமையைக் காரணங் காட்டி ஜனாதிபதிக்கு கருணை மனு ஒன்று தாக்கல் செய்தால் விடுதலை வழங்கப்படும் என சிங்கராயருக்கு அறிவிக்கப்பட்டது. அப்போது வண.பிதா.சிங்கராயர் பல தீராத நோய்களால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தார். ஆயினும் தனது நோயையும் தான் உயிரையே வைத்திருக்கும் தாயாரின் உடல் நிலைமையையும் பற்றி கவலைப்படாமல் ஆத்திரத்துடன் "மட்டக்களப்பு சிறைச்சாலை இரு தடவை உடைக்கப்பட்ட போதும் நான் தப்பியோடவில்லை. நான் ஒரு நிரபராதி என்பதை உலகிற்கு நீதிமன்றத்தின் மூலம் நிரூபித்து விட்டு வெளியே செல்வதற்காக நாலரை வருடங்களாக காத்திருக்கும் நான் எனது தாயாருக்காக லட்சியத்தை கைவிட மாட்டேன்" என முகத்தில் அடித்தாற் போல பதில் கூறினாராம். இதனால் அவரது மன உறுதி மக்களால் பாராட்டப்படுகிறது.

சந்திரசேகரன் தனது வழக்கை வெற்றி கொண்டு விடுதலையாகி இருந்தால் துணிச்சலும் வீரமும் பொருந்தியவர் என்ற பெருமை அவருக்குக் கிடைத்திருக்கும்.

திரு.சந்திரசேகரன் மீது பலத்த எதிர்ப்பார்ப்பு மக்கள் மத்தியில் இருக்கிறது. மேற்கூறிய தவறுகள் இன்னும் . ஒரு போக்காக (Tendency) உருவாகி விட்டதாக நான் கருதவில்லை. அவற்றை காலங்கடப்பதற்கு முன்னர் சரி செய்யா விட்டால் ம.ம.முன்னணி வலது சாரி சந்தர்ப்பவாத கட்சியாக, மற்றொரு இ.தொ.கவாக மாறிவிடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இஸ்லாமிய அடிப்படைவாதத்தினதும் ஆணாதிக்கக் கருத்து நிலையினதும் வன்மையான எதிர்ப்புக்குள்ளாகிய இன்னொரு பெண் எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரீன். பங்களாதேஷ் எழுத்தாளரான தஸ்லீமா நஸ்ரீனின் லஜ்ஜா (வெட்கம்) என்ற நாவலும், சமீபத்தில் கல்கத்தா ஸ்டேஸ்மன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இஸ்லாம் சமயம் பற்றி அவர் கூறிய கருத்துக்களும் மதவாதிகளின் கடும் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளன.

சமூகத்திலும் குடும்பத்திலும் இடம் பெறும் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறை அம்சங்களை வெளிப்படையாக விமர்சிப்பவையாக அவரது எழுத்துக்கள் அமைந்துள்ளன. இஸ்லாமிய நாட்டில் வாழ்ந்து கொண்டும் தமது கருத்துக்களைத் துணிவாக வெளிப்படுத்தி, இன்று சமூகப் பகிஸ்கரிப்பையும், கொலை அச்சுறுத்தல்களையும் எதிர் கொள்ளும் நஸ்ரீன் அடிப்படைவாதிகளுக்கு ஒரு சவாலாகவே தோற்றமளிக்கிறார்.

மத ஒடுக்குமுறைகளுக்கும் ஆணாதிக்கத்திற்கும் எதிராக எழுதும் பெண் எழுத்தாளர்கள் இத்தகைய எதிர்ப்பைச் சம்பாதிப்பதும், அவர்களது எழுத்துக்கள் அவர்களது நாடுகளிலேயே தடை செய்யப்படுவதும் முன்பும் நிகழ்ந்துள்ளது.

எகிப்தியப் பெண் எழுத்தாளர் நவலா எல் சாடவி இத்தகைய எதிர்ப்பைச் சம்பாதித்தவர். அவரது நூல்கள் எகிப்தில் தடை செய்யப்பட்டதுடன் அவர் வகித்த அரசாங்கப் பதவியினின்றும் விலக்கப்பட்டார். சர்வதேசரீதியில் பெண்கள் அமைப்புகளதும் எழுத்தாளர் அமைப்புகளதும் கண்டனத்தின் பின்னரே அவரது எழுத்துக்களின் மீதான தடையை எகிப்திய அரசாங்கம் நீக்கியது.

அண்மையில் சுவிஸில் நடைபெற்ற புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழில் எழுதும் எழுத்தாளர்கள், கவிஞர்கள் இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்ட இலக்கியச் சந்திப்பில் தஸ்லீமா நஸ்ரீனினது எழுதும் சுதந்திரம், கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் என்பவற்றுக்கு ஆதரவாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தஸ்லீமா நஸ்ரீனின் கருத்துச் சுதந்திரத்திற்கு விதிக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கும் கட்டுப்பாட்டுக்கும் எதிராக சர்வதேசரீதியில் கண்டனம் தெரிவிக்கப்படுதல் வேண்டும். அவர் மீதான கைது உத்தரவை வாபஸ் வாங்குமாறு பங்களாதேஷ் அரசாங்கத்தை பெண்கள் இயக்கங்களும், மனித உரிமை இயக்கங்களும் எழுத்தாளர் இயக்கங்களும் கோருதல் வேண்டும்.

கீழே, தஸ்லீமா நஸ்ரீன் எழுதிய பத்திரிகைப் பத்திகள் சிலவற்றின் தமிழ் மொழியாக்கத்தை ஜேர்மனியிலிருந்து வெளியாகும் சிந்தனை இதழிலிருந்து எடுத்துத் தருகிறோம்.

ஆ-ர்

# தஸ்லீமா நஸ்ரீன்

# யாருக்கு வெட்கம்?

1

''பெண்களின் சமூக, சமய பெறுமானங்களினைப் பாதுகாக்கும் விதமாக, பங்களாதேஷின் வயது வந்த பெண்கள் அனைவரும் அணியும் சேலைகளின் அளவு 1.22 X 5.54 மீற்றர்களாய் இருத்தல் வேண்டும். இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டு வரும் ஏழு நாட்களுக்குள் அனைத்துப் பெண்களும் இதை நடைமுறைப்படுத்தல் வேண்டும். இந்த அறிவித்தலை எதிர்ப்பவர்களும் மறுப்பவர்களும் சட்டப்படி குற்றவாளிகள் ஆகின்றனர்'' என்ற முக்கிய அறிவிப்பு கடந்த மார்ச் 28 அன்றைய பங்களாதேஷின் செய்திப்பத்திரிகைகளில் இடம் பெற்றது. பங்களாதேஷ் அரசாங்கமே இந்த அறிவிப்பை விடுத்திருந்தது.

ஏற்கனவே ஆபத்தான நிலையிலிருந்த பெண்களின் சமூக, சமய பெறுமானங்கள் அவர்களின் ேசலையின நீள அகலத்தை வரையறை செய்யும் இந்த முறையினால் மேலும் மோசமாகியுள்ளது. ஒரு சேலையின் அளவினையும் அதன் நிறத்தையும் நிர்ணயிப்பது அதை அணியும் பெண்ணின் அளவும், அவளது விருப்பமும், அவளது பணப்பையிலுள்ள பணமுந்தான். சேலையினை அளவுகோலாகக் கொண்டு பெண்களை அளவிட முனைவது அவமதிப்பு மட்டுமல்ல சட்டத்திற்கும் முரணானது இது. நுகர்வோரின் விருப்பத்தின் (கேள்வி Demand) அடிப்படையிலேயே ஆடையுற்பத்தியாளர்கள் பலவித அளவிலான சேலைகளைத் தயாரிக்கிறார்கள். நான் 12 முழ சேலையை அணிகின்றேன், இது எந்தவிதமான சமய விதிகளுக்கமையவும் அல்ல, நான் அணிவது எனக்குப் பொருத்தமாகவிருக்கிறது அவ்வளவே. வெளியே சென்று வேலைபார்க்கும் கிராமத்து வறிய பெண்களுக்கு 10 முழ அளவிலான சேலைகளே விரும்பத்தக்கனவாகவும் உடுக்கவசதியானவையாகவும் இருக்கின்றன.

இந்த நாட்டைச் சேர்ந்த பல பெண்கள் ஒரு சேலையை மூன்றாக வெட்டி மூன்று சேலைகளாக்கிப் பாவிக்கும் நிலையில் உள்ளவர்கள். சிலர் தாம் தோய்த்த சேலையை உடலில் அணிந்த வண்ணமே உலரவும் விடுகின்றனர். மாற்றுவதற்கு வேறொரு சேலை அவர்களிடம் இல்லை. சிலர் வீடுவீடாய் இரந்து வேண்டியே தமது மானத்தை மறைக்கின்றனர். சாதாரணமாக ஒரு சேலை அணிவதே பெரிய கேள்விக்குறியாகவிருக்கும் இத்தகைய பெண்களுக்கு 5.5 மீற்றர் சேலை தான் கட்டாயம் கட்ட வேண்டும் என்று கட்டளை விடுத்திருக்கிறது அரசாங்கம். மதத்தை எமது சேலைகளின் நீளம் அகலம் என்ற மட்டத்திற்கு கீழிறக்கிக் குறுக்குவதன் மூலம் மதத்தை அகௌரவப்படுத்தியிருக்கிறது அரசாங்கம்.

2.

இரண்டாவது தடவையாக முஸ்லீம் புத்திஜீவிகளினாலும் தலைவர்களினாலும் எனக்கு மரணம் முன்மொழியப்பட்டுள்ளது.

'சாத்தானின் செய்யுள்' நாவலிற்காக சல்மான் ருஷ்டிக்கு மரணதண்டனை வழங்கப்பட்டபோது அவரின் உரிமைக்காக குரல் கொடுத்தற்காய் முதன்முறையாக எச்சரிக்கப்பட்டேன்.

'பர்தா' விற்கு எதிரானவள் என்று இப்பொழுது இரண்டாவது தடவையாக மரணத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளேன்.

எனக்குத் தெரியும் ஒருநாள் அவர்கள் என்னை ''அல்லாவே பெரியவர்'' என்ற கோஷத்தோடு கொலை செய்வார்கள். அதையிட்டு நான் அஞ்சவில்லை.

வீதியில் இறங்கினால் விபத்தில் அகப்படும் அபாயம் இருக்கிறது என்பதற்காக நான் வீதியில் இறங்கி நடக்காமல் இருப்பதில்லையே. மின்சார உபகரணங்களைப் பாவிக்கும் போது மின்னதிர்ச்சியினால் மரணம் சம்பவிக்கும் அபாயம் உண்டு. அதற்காக நான் அவற்றைப் பாவிக்காமல் விடுகிறேனா? இல்லையே, அதுபோலத்தான் இதுவும் எனக்கு. இந்த சமூகத்தில தான நான் தொடர்ந்தும் வாழவேண்டும். அதுவொரு புலியைப் போல என்னைப் பிடித்து தின்ன வருகின்றது. அது என் மீதான கொலைவெறியை நிறுத்தாது என்று தெரிந்த போதும் நான் வாழத்தான் வேண்டும். வாழத்தான் போகிறேன். தமது பேனாக்களை அநீதியுடன் சமரசம் செய்து கொள்ள மறுப்பவர்கள், என்றும், நியாயத்திற்கான தமது குரலை இன்னமும் முற்றாக மௌனமாக்கிக் கொள்ளாதவர்கள் என்றும் ஆண்களில் எவராவது இன்னமும் இருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. சில ஆண்கள் இருக்கிறார்கள் அவர்கள் ஒரு பெண்ணின் பக்கம் நியாயம் இருந்த போதிலும் அவருடன் சரிசமமாய் குரல் கொடுப்பதை ஒரு தர்மசங்கடமான நிலையென நினைப்பவர்கள்.

ஒருவேளை, நான் ஒரு பெண்ணாய் பிறந்ததன் பாவத்தை கழுவுவதற்காக என்னை அவர்கள் கொல்வதை அமைதியாய் அனுமதிக்க வேண்டுமோ தெரியவில்லை.






3.

''உன் மனைவி இறந்தால் உனக்கு அதிர்ஷ்டம் உண்டு. உன் கால் நடை இறப்பின் அது உன் துரதிர்ஷ்டம்'' என்றொரு பழமொழி வழக்கத்தில் உண்டு. 21ம் நூற்றாண்டை நெருங்கிவிட்ட இந்த காலத்திலும் செவிகளுக்கெட்டும் பழமொழி இது.

உனது மனைவி இறந்து விட்டாள், நீ இன்னொருத்தியை மணக்கிறாய். நீ புதிய கால்நடை வாங்குவதானால் அவற்றிற்கு எப்படியும் பணம் கொடுத்தே ஆகவேண்டும். இதோடு ஒப்பிடுகையில் வருகின்ற புதுமணமகள் வரும்போது தன்னுடன் பணத்தையும் கொண்டுவருவாள். உனது மனைவியை அலட்சியம் செய்வது போல் கால்நடைய்யை அலட்சியம் செய்துவிட முடியாது. இங்கு மனைவியை விடவும் கால்நடை அதிக பெறுமதி வாய்ந்தது என்பது ஒன்றும் அதிசயமில்லை.

அண்மையில் பங்களாதேஷ் இளம் பெண்ணொருத்தி விற்கப்பட்டாள். இவளை விற்றவர்கள் இவளது பெறுமதிக்காகப் பெற்றுக் கொண்டது இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட ஆறு கால்நடைகளை! இந்தச் செய்தியைக் கேட்டு பலர் கலவரப்பட்டுள்ளனர். ஆனால் என்னை இது பெரிதும் வியப்பில் ஆழ்த்தவில்லை. இந்த நல்ல செய்தியைக் கேட்டுச் சந்தோஷப்படுவதைத் தவிரவும் வேறொரு வழி எனக்குத் தெரியவில்லை.

சந்தோஷமாக இருக்காதா என்ன? ஒரு பெண்ணின் விலையாக ஆறு கால்நடைகளைப் பெறுவதென்பது எவ்வளவு பெரிய விடயம் தெரியுமா?

கால்நடைகளைப் பெற்றுக் கொண்டவர்களைப் பொறுத்தவரையில் இது நல்லதொரு இலாபகரமான வியாபாரமாக இருந்திருக்க வேண்டும். இந்த ஆறு கொழுத்த, அழகான கால்நடைகளும் பலவீனமான மெலிந்த பங்களாதேஷிய இளம்பெண்ணொருத்தியை விடவும் பெறுமதி மிக்கதும் உபயோகமானதும்தானே? பெண்ணை விற்றவரைப் பொறுத்தவரையில் இலாபம் தான், பெண்ணிற்கு எந்த பெறுமதியும் இல்லாத நாட்டிலே அவளைக் கொடுத்து ஆறு கால்நடைகளைப் பெற்றுவிட்டாரே. பெண்ணை வாங்கியவர்கள் தான் பாவம். பெண்ணிற்கு எந்தப் பெறுமதியும் இல்லாத நாட்டிலே ஆறு கால்நடைகளைக் கொடுத்த இவர்கள் ஏமாற்றப்பட்டவர்கள் இல்லையா? நான் அந்த கால்நடை கடத்தல்காரர்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த நிகழ்வானது பெண்களின் பெறுமானத்தைக் கொஞ்சமாவது உயர்த்துமானால் நல்லதுதான்.

மரியாதைக்குரிய எமது சமூகத்திலே பெண்ணிற்கு எவ்வித பெறுமதியும் இல்லை.

பெண்குழந்தை கருவிலேயே அழிக்கப்படுகிறாள் அல்லது ஆறு கால்நடைகளுக்காக ஒரு கடத்தல் காரனுக்கு விற்கப்படுகிறாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# ஜூலை இனக்கொலையின் போது நான் என்ன செய்தேன்?

எமது சகோதரப் பத்திரிகையான 'யுக்திய' விலிருந்து நிஷாந்த எழுதுகிறார்.

துர்பாக்கியம் சூழ்ந்த ஒரு இரவைத் தொடர்ந் து பயங்கரமான காலை. அது குறித்து அக்கறையற்றுக் கொழும்பு மனிதர்கள் வேலைக்கு விரைந்தார்கள். பாடசாலைக்குப் போவதற்காக நானும் பஸ்ஸில் ஏறினேன். இரவு நடந்த சம்பவங்களைப் பற்றிப் பெரும்பாலானோர் அறிந்திருக்கவில்லை. கொழும்பு நகருக்கு 7 கிலோ மீற்றர் தள்ளி திம்பிரிகஸ்ஸாயவில் நான் பயணித்த பஸ் நின்று விட்டது. எங்களுக்கு முன்னால் எல்லாத் திசைகளிலும் நெருப்பு சமுத்திரம் போல ஆக்கிரமித்திருந்தது.

''நேற்றுப் பதின்மூன்று ஆமிக்காரரை
யாழ்ப்பாணத்தில் சுட்டுப் போட்டாங்கள்''
யாரோ சொல்லிக் கேட்டது.

திம்பிரிகஸ்ஸாயவிலிருந்து எனது பாடசாலையான ஆனந்தாக் கல்லூரிக்குச் செல்லும் வழி நீள எரிப்பும் கொள்ளையும் கொலையும் தான். 1983 ஜூலைப் படுகொலைகள் பற்றிய எனது முதலாவது காட்சிப் படிமம் இப்படித்தான் விரிந்தது.

பாடசாலைக்குச் செல்லும் வழியில் நான் கண்டதெல்லாம் கொடூரமும் குரூரமும்தான். எங்கள் பாடசாலையைச் சேர்ந்தவர்களில் சிலரும் இந்தக் கொள்ளைகளில் பங்குபற்றியதோடு தாராளமாக வழங்கப்பட்ட சிற்றுண்டி, சாராய வகையறாக்களையும் பங்கிட்டுக் கொண்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் எல்லோரும் கொள்ளையடிப்பதிலேயே குறியாய் இருந்ததை நான் அவதானிக்க முடிந்தது. பிற்பாடு அரச பயங்கரவாதத்தின் துணையோடு மட்டும்தான் குண்டர்களும் காடையர்களும் கத்திகள் பொல்லுகள் வாள்களுடனும் இனவாத சுலோகங்களுடனும் தமிழர்களைக் கொலை செய்ய ஆரம்பித்தார்கள். தமிழர்களாக அடையாளங் காணப்பட்ட முஸ்லீம்கள் கூட இந்தப் படுகொலைக்குத் தப்ப முடியவில்லை.

கொல்வதோடு மட்டும் நிறுத்தி விடாமல் அந்த மிருகப் பிறவிகள் உடல்களுக்குத் தீயும் வைத்தன. தெருவோரம் எரிந்து கிடந்த உடல்கள் பயங்கரமான அனுபவமாக மட்டுமல்லாமல் துயரத்தைக் கிளப்பும் அனுபவமாகவும் இருந்தன.

பாடசாலை மூடப்பட்டு விட்டது. எனவே, நான் நண்பர்களுடன் நகரெங்கும் சுற்றி வந்தேன். மாலை ஆறு மணிக்குப் பிற்பாடுதான் நான் வீடு போய்ச் சேர்ந்தேன். அவ்வளவு நேரம் நகரில் திரிந்தமை, வாழ்க்கையில் அதுவரை நான் கண்டிராத குரூரத்தையும் மிருகத்தனத்தையும் என் கண்களுக்கு முன்னால் எழுப்பிற்று.

இந்த வரிகளை நீங்கள் வாசிக்கின்ற போது ஜுலைப் படுகொலைகளிலெல்லாம் நானும் தொடர்புற்றிருந்தேனோ என நீங்கள் யோசிக்கக் கூடும். ஒருவகையில் நானும் மறைமுகமாகப் பங்குபற்றியிருந்திருக்கிறேன் என்பதை இங்கு ஒப்புக் கொள்ள வேண்டும்.

நகரில் சுற்றித் திரிந்த போது பசியையும் தாகத்தையும் தணிக்கத் தாராளமாகவே 'கொள்ளையடிக்கப்பட்டு வினியோகிக்கப்பட்ட பிஸ்கற்றுகளையும், யானை மார்க் சோடாக்களையும் நாம் ஏற்றுக் கொண்டோம். இந்த வகையில் கொள்ளையடிப்புக்கு ஒரு தார்மீக ஆதரவை நான் வழங்கியிருந்தேன். இன்றும் கூட நினைக்க நினைக்க இதனையிட்டு மிகவும் மனவருத்தமும் குற்ற உணர்வும் என்னைச் சூழ்கிறது.

அன்றைய நாள், வீடு திரும்பியதும் வீட்டிலுள்ளோர்க்கு நடந்த விஷயங்களை நான் சொன்ன போது அப்பாவிடம் பயங்கரமாக 'வாங்கிக் கட்டிக்' கொண்டேன். அத்தோடு நில்லாது என்னை வீட்டை விட்டு வெளியேறாமல் அவர் முற்றாகவே தடுத்து விட்டார். நல்லதோர் சோஷலிஸப் பாரம்பரியத்தில் வந்தவர் எனது அப்பா. என்னுடைய நடத்தை மூலம் நானும் ஜுலை அநர்த்தங்களுக்குப் பங்களித்திருக்கிறேன் என அவர் திட்டவட்டமாகச் சொல்லி விட்டார்.

எப்போதாவது ஒரு நாள் இந்த அநியாயங்களுக்காக நீங்கள் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்றும் அவர் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார்.

ஜூலைப் படுகொலைகளிலும் கொள்ளைகளிலும் நான் தீவிரமாகப் பங்கேற்க முடியாமலிருந்ததன் காரணம் எங்கள் வீட்டு சோஷலிஸப் பாரம்பரியம் என்றுதான் நான் கருதுகின்றேன்.

உயர்தர வகுப்பில் இருக்கும் போதே, இலங்கைக் கொம்யூனிஸ் கட்சியின் மாணவரமைப்பான ஜாதிக சிஷ்ய சங்கமயவின் உறுப்பினர்களிலொருவனாக நான் இருந்தேன். இதனால்தான் பல சந்தர்ப்பங்களில் தமிழர்களுக்கெதிராக என் பாடசாலை நண்பர்கள் சுலோகமெழுப்பிக் கூக்குரலிட்ட போது நான் அவர்களுடன் தர்க்கம் புரிய நேர்ந்தது.

''கொலனித்துவ நாட்களின் போது எங்கள் ஆனந்தாக் கல்லூரியில் சிங்களம் கற்பிக்கக் கூடாது என்று தடை செய்யப்பட்ட போது அதனை வெளிப்படையாக எதிர்த்தவர் ஆனந்தக் குமாரசாமிதானே! '' என்று நான் சொன்னேன்.

அந்த நேரத்தில் பெரிய அரசியலறிவு என எதுவும் எனக்கிருக்கவில்லை. என்றாலும் நல்லது, கெட்டது இரண்டையும் பிரித்தறியக் கூடிய ஒரு பொதுப் புத்தியாவது எனக்கிருந்தது.

ஒரு இடத்தில் 4முஸ்லீம்கள் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டிருந்தார்கள். அந்த இடத்தைப் பார்த்த எல்லாச் சிங்களவர்களும் ''என்ன கொடுமை இது?'' என்றுதான் முனக நேர்ந்தது. பெரும்பான்மையான சிங்கள மக்கள் பௌத்தர்கள். அதனால் கர்மவினையில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள். எனவே இத்தகைய அநியாயங்களைச் சகித்துக் கொள்வது அவர்களுக்கு இயலாததாகவே இருந்திருக்கும். பெரும்பான்மையான சிங்கள மக்கள் தமிழ் மக்களைப் பாதுகாத்தார்கள் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிடலாம். சிங்கள மக்கள் இயல்பாகவே இனவாதிகள் அல்லர் என்பதைச் சில வரலாற்றுதாரணங்கள் மூலம் சுட்டலாம்.

1817இல் பிரித்தானியருக்கெதிரான கிளர்ச்சிகளுக்குத் தலைமை தாங்கி வழி நடத்தியவர் துரைசாமி என்பவரே என அறியக் கிடக்கிறது. அக்காலகட்டத்தில் சிங்கள-தமிழ்ப் பிளவுகளோ சிங்கள இனவாதமோ இருந்திருக்கவில்லை என்பதை இது காட்டுகின்றது.

தமிழ் மக்களின் கூட்டாட்சிக் கோரிக்கை என்பது ''வாழு; வாழவிடு'' என்ற அடிப்படையிலேயே முன்வைக்கப்பட்டது என்பதை நாம் உணர வேண்டும். 1983இன் பிற்பாடு தமிழ் இளைஞர்களின் ஆயுதக் கிளர்ச்சி மேலெழுந்தது. இதற்கு ஜுலை83 படுகொலைகளும் ஒரு காரணம்தான். இன்று நாமெல்லாரும் திக்குத் திசை தெரியாத சூழலில் இருப்பதாகத் தோன்றுகிறது.
ஜுலை83 இன்ப்படுகொலைகளிலிருந்து நான் கற்றுக் கொண்ட பாடம் என்ன?

இதுதான்:
''சிறுபான்மையினர்'' என்ற ஒரு பிரிவு எமக்குள்ளே இருக்கக் கூடாது. சமத்துவமான உரிமைகளுடன் சமத்துவமான நிலையிலேயே மக்கள் குழுக்கள் வாழ முடியும். அனுதாபம் வழங்கப்பட வேண்டியவர்களாக ஒரு மக்கள் குழுவை நாம் நடத்த முடியாது. கௌரவமும் சமத்துவமும்தான் நாம் தரவேண்டியது. எனவே ''சிறுபான்மையினர்'' என்ற சொல்லைப் பாவிப்பதையே நான் தவிர்த்து விடுகிறேன்.

எனவே, அன்புள்ள நண்பரே,
மேலாதிக்க உணர்விலிருந்து நாம் எல்லோரும் விடுபடுவோம். மனிதத்துவத்தின் உதயம் எங்கள் எல்லோருக்கும் கிடைப்பதற்காக நாம் உழைப்போம்.

# வாழைச்சேனைப் படுகொலை: கண்துடைப்பு விசாரணை!

- என்.எஸ்.குமரன்

ஜூன் 17ம் திகதி வெள்ளிக்கிழமையன்று வாழைச்சேனையில் ஜூம்மாத் தொழுகைக்கு அவசரமாகச் சென்று கொண்டிருந்த ஒரு இளைஞரைப் பொலிசார் தடுத்து நிறுத்தி உரிய பத்திரங்களைக் கேட்டுள்ளனர். இந்த மோட்டார் சைக்கிள் இளைஞர், தான் தொழுகைக்குப் பிந்திவிட்டதான அவசரத்தில் பத்திரங்களை வீட்டில் வைத்துவிட்டு வந்து விட்டதாகக் கூறினார். பொலிஸார் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். இளைஞரோ தன்து சைக்கிளை வைத்துக் கொள்ளும்படியும் தொழுகைக்குச் சென்று வந்த பின் பத்திரங்களைக் காட்டி சைக்கிளை மீட்டெடுப்பதாகவும் வேண்டினார். அருகில் கூடிய பொதுமக்களும் அவரை அனுமதிக்குமாறு கோரியுள்ளனர். இதற்கு அனுமதியளிக்க மறுத்த பொலிஸார் இளைஞரை ஜீப்புக்குள் தள்ளி ஏற்றியுள்ளனர். அத்தோடு முகத்தில் அறைந்து தாக்கியுள்ளனர்.

அச்சமும் பதட்டமும் கொண்ட இளைஞர் பொலிஸாரிடமிருந்து தப்பி பள்ளிவாசலுள் அடைக்கலம் வேண்டியுள்ளார். இதனையடுத்து பொலிஸ் படையும் ஆயுதங்கள் சகிதம் காலில் சப்பாத்துடன் பள்ளிக்குள் நுழைய முயற்சித்த போது மக்கள் அவர்களைத் தடுத்து விட்டனர். அதேநேரம் பின்னால் வந்த இன்னொரு பொலிஸ் அணி வாசலில் நின்று எவரையும் உள்ளே விடாது அரணமைத்துப் பள்ளிவாசலுள் நுழைந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். பத்து நிமிடங்கள் வரை துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகம் தொடர்ந்தது.



துப்பாக்கிச் சூட்டினால் தொழுகைக்கு வந்திருந்த பொதுமக்கள் காயத்துக்குள்ளானார்கள். அத்துடன் பள்ளியின் மாடியிலிருந்த 15வயதுப் பாடசாலைச் சிறுவனான ரபாய்தீன் (8ம் வகுப்பு) சுடப்பட்டு இரத்தம் பெருக இறந்து போனான். மேலும் மூவர் படுகாயத்துடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அதில் ஒருவர் பின்னர் இறந்து விட்டதாக இறுதியாகக் கிடைத்த தகவல் தெரிவிக்கின்றது.

இச்சம்பவத்தை முன்னிட்டு அடுத்தநாள் சனிக்கிழமை வாழைச்சேனைப் பகுதியில் முஸ்லீம், தமிழ் வர்த்தகர்கள் கடையடைத்து ஹர்த்தால் புரிந்து கண்டனத்தைத் தெரிவித்திருந்தனர்.

சம்பவதினத்தன்று மாலை பொலிஸ் உயர் அதிகாரிகள் முஸ்லீம் காங்கிரசைச் சேர்ந்த உறுப்பினர்கள், பள்ளி நிர்வாகத்தினர் ஒன்றுகூடிக் கதைத்த போது பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் ''பொலிஸார் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். இராணுவத்தினர் அதற்குப் பதிலாக கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும்'' என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இங்குதான் சிக்கலே உள்ளது. இக்கோரத்தனமான செயலைப் புரிந்த

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தலைவரின் அதிகார வெறிக்கு பலியாகும் மட்டு ப.நோ.கூ.சங்கம்!

மட்டக்களப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரின் எதேச்சாதிகாரப் போக்கு காரணமாக அண்மையில் பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமான பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரியவருகிறது.

இதுபற்றி மேலும் கூறப்படுவதாவது, பாடசாலை மாணவிகளை ஏற்றிச் சென்ற ப.கூ.ச பஸ் ஒன்று மல்வத்தை எனும் இடத்தில் புரண்டதனால் நடத்துனர் இறந்ததுடன் பல மாணவிகள் படுகாயம் அடைந்துள்ளனர். இதற்குக் காரணம் அனுபவமற்ற பஸ் திருத்துபவர் ஒருவரை சாரதியாக நியமித்தமையே எனக் கூறப்படுகிறது. தலைமையின் எதேச்சாதிகாரமான இந்த நடவடிக்கைகளை ஆரம்பத்தில் இருந்தே எதிர்த்துவந்த பொது முகாமையாளர் சுந்தரலிங்கம் எந்த வித காரணமும் இன்றி பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் தனது நிலையை விளக்கி சகல திணைக்கள தலைவர்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளார்.

கடந்த இருவாரங்களுக்கு முன்பு கூட மட்டக்களப்பு ப.நோ.கூ.ச அந்திம கால சேவை ஒன்றை நடாத்துவதற்கு முச்சக்கரவண்டி ஒன்றை கொள்வனவு செய்வதென முடிவு செய்திருக்கிறது என்றும், தலைவர் இதை கவனத்திலெடுக்காமலேயே அதிகாரத்தைப் பாவித்து ப.நோ.கூ.ச பணத்தில் கொழும்பில் இருந்து பழைய வான் ஒன்றை வாங்கி வந்துள்ளார் என்றும் இதற்காக 2 1/2 லட்சம் ரூபா செலவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் அதன் பெறுமதி ரூபா 85,000 மட்டுமே ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இவரது பொறுப்பற்ற செயல்களால் ப.நோ.கூ.சங்கத்தின் அபிவிருத்தி பெருமளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை காலமும் மட்டக்களப்பு வாழ் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்கி வந்த நான்கு பஸ்கள் ஏலத்தில் விற்கப்படவுள்ளன என்றும் இதற்குக் காரணம் இவற்றைப் பராமரிக்க இப்போதைய நிர்வாகத்தால் முடியாதுள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரைகாலமும் திரு.பத்மநாதன் ஐ.தே.க.வின் தூண் ஆக இருந்தமையால் இவரை எதிர்க்கப் பின்வாங்கிய பலரும் இப்போது இவரின் செல்வாக்கு குறைந்து வருவதால் இவரைத் தலைமைப் பதவியில் இருந்து தூக்கி வீசிவிட்டு சுந்தரேசன் எனும் சபை இயக்குனர் ஒருவரைத் தலைவராக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர் என்று ப.நோ.கூ.சங்க வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

- சத்தியேந்திரா-

## ஐ.தே.கவின்....

தம்புள்ளைக்கு அண்மையில் இருக்கும் தலகிரியாகம எனுமிடத்தில் ஒரு சி.சு.கட்சிக் காரியாலயம் ஐ.தே.கட்சியினரால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. நத்தொட எனுமிடத்தில் எதிர்க்கட்சியினரின் போஸ்டர்கள், அலங்காரங்களைப் பொலிஸார் கிழித்தெறிந்து விட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. மாத்தளையில் அரசாங்கத்துக்கு சொந்தமான வாகனங்களையும் அலிக் அலுவிகார குழுவினர் பாவிப்பதாகவும் நகர சபை ஊழியர்களைப் போஸ்டர் ஒட்டுவது போன்ற தேர்தல் வேலைகளுக்காகப் பயன்படுத்துவதாகவும் தெரியவருகிறது.

### கொழும்பில் கண்ணீர்ப்புகை

புறக்கோட்டையிலோ, ஐ.தே.கட்சியின் இரண்டு பிரிவினருக்கு இடையில் பெரும் மோதல் ஏற்பட்டது. பிரேமதாச மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு ஆதரவான குழுவினரும் சங்கதாச ஆதரவுக் குழுவினரும் மோதிக் கொண்டதில் பொலிஸ் கண்ணீர்ப் புகைக் குண்டுள் பயன்படுத்த நேர்ந்தது. இன்னொரு சந்தர்ப்பத்தில் ஒரு பௌத்த பிக்குவும் சுடப்பட்டுள்ளதாத் தெரிய வருகிறது.

### கோவிலுள்ளிருந்து தாக்குதல்

புலத் சிங்கள, பதுளை, கேகாலை ஆகிய இடங்களிலும் ஐ.தே.கட்சி ஆதரவாளர்களும் சில சமயங்களில் வேட்பாளர்களும் தாக்குதல் நிகழ்த்துவதில் முன் நின்றதாகத் தெரியவருகிறது. ரண்வலவில் மோசமாகத் தாக்கப்பட்ட பொ.ஐ. முன்னணி ஆதரவாளர் ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புலத் சிங்கள பகுதியிலும் ஐ.தே.க வேட்பாளர் ஜயவிக்கிரம பெரேரா தலைமையில் சென்ற குழுவினர். பொ.ஐ.முன்னணியினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

முதியாங்கன பௌத்த கோவிலுக்கு நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்ததன் பிற்பாடு வழிபடச் சென்ற பொ.ஐ.முன்னணியினர் மீது கோவிலுள் ஒளித்திருந்த ஐ.தே.கட்சியினர் பலத்த தாக்குதலை மேற்கொண்டனர். காய விபரங்கள் தெரிவில்லை.

## நான்...

'இதனை வியாபார தந்திரம்' என்று சாடுவதற்கு தங்களுக்கு என்ன அருகதை உண்டு? சரிநிகர் மட்டுமென்ன, குறைவா?

இலங்கை எழுத்தில் வலிமைக் குறைவு என்று எழுதி சில ஆரோக்கியமான ஆலோசனைகளை தருவது அடுத்த இதழை சிறப்பாய் வெளிக்கொணர உதவும். அதைச் செய்திருக்கலாமே?

சரிநிகர் 50வது இதழை வெளியிடப் போகிறது. இதுவரை மலையகம் சார்பான எத்தனை படைப்புகளை (சிறுகதை, கவிதைகளை) வெளியிட்டுள்ளீர்கள்? வெளியிடும் கட்டுரைகள் கூட வியாபார தந்திரம் தான் என்று நான் சொன்னால் அது மிகையாமோ?

சரிநிகருக்கு மலையகத்தில் பரவலான வாசகர்கள் உண்டு. அவர்களிடம் விற்கத்தான் சில கட்டுரைகளை வெளியிட்டு, குறிப்பிட்ட சில அரசியல் வாதிகளுக்கு விளம்பரம் தேடுகின்றீர்கள் என்று நான் வாதாடலாம். இல்லையா?

இந்தியா ருடே 'இலங்கை எழுத்து'க்கு செய்த பங்களிப்பில் ஒரு துளியைக் கூட சரிநிகர் மலையக எழுத்துக்குச் செய்யவில்லை என்பது உண்மை.

இனி - எல்லோரையும் குற்றம் காணும் உங்கள் துப்பறிதலை/ நெற்றிக்கண் திறப்பை வாசகர்கள் ஏற்றுக் கொள்ளும்படியாக எழுதவும்.

எம்.எச்.எம்.ஜவ்பர்
டிக்கோயா

## எதிரிக்கு..

தீர்க்கப்பட வேண்டிய இனப்பிரச்சினை உண்டு. அதன் காரணமாகவே இந்தியா அகதிகளை திருப்பி அனுப்ப முடியாதுள்ளது என்ற பார்வையினால் சிங்கள அரசு மீது ஏற்பட்ட சர்வதேச அழுத்தத்தை இது நீக்கி விட்டது. இந்த விடயத்தில் டெல்லி ஜெயலலிதாவின் கோரிக்கையை சாட்டாகக் காட்டியது. இது அப்பட்டமான பொய்! ஈழத்து அகதிகள் பிரச்சினை இலங்கை அரசிற்கும் -இந்திய மத்திய அரசிற்கும் உரிய விடயம். டெல்லியின் தீர்மானத்தை அறிந்து, அதைத் துரிதப்படுத்தவே ஜெயலலிதா குதித்தார்.

இவையெல்லாம் பிரேமாவிற்கும் ஏனைய சிங்கள இனவாதிகளுக்கும் நம்பிக்கையை ஊட்டின அரசியல் தீர்வொன்று கொடுத்திடாமல் தமிழரை இழுத்தடித்துப் பேய்க்காட்டுவதற்கும், புலிகள் மீதான யுத்தம் என்ற போர்வையில் தமிழினத்தைத் துவம்சம் செய்வதற்கும் இந்தியாவின் நிலைப்பாடு தமக்குச் சாதகமாகவே உளதென்று அவர்கள் கண்டனர். அத்துடன் இந்தியா அழுத்தம் கொடுக்காத நிலையில் சர்வதேசச் சமூகமும் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை பற்றி எவ்வித மூச்சும் விடாது எனவும் அவர்கள் உணர்ந்தனர்.

ஜாதிக சிந்தனவாதிகளான குணதாச, அமர சேகர, நளின் த சில்வா, ஹெல உருமய தலைவர் திலக் கருணாரத்தின போன்ற பலரும் இந்தியாவின் இனிய நண்பராயினர்.

## வாழைச்சேனை...

பொலிஸாரைக் கடுமையாகத் தண்டிக்கக் கோருவதற்குப் பதிலாக அவர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் எனக் கோரியது ஆச்சரியம் கொள்ள வைக்கிறது. அக் கோரிக்கைக்கிணங்க வாழைச்சேனை ஏ.எஸ்.பி உட்பட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சப் இன்ஸ்பெக்டர்கள் உட்பட 100பேர் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

இடமாற்றம் செய்யப்படுவதால் மேற்படி பொலிஸ் கொலைஞர்கள் வாழைச்சேனையில் தங்களது நடவடிக்கைகளைப் புரியாது அதே நடவடிக்கையை இன்னொரு பிரதேசத்தில் புரிவதற்கான அனுமதியையே வழங்க இவர்கள் கோருகின்றனர். இதைவிட பொலிஸாருக்குப் பதிலாக இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் அகிம்சாவாதிகள் என்ற எண்ணத்தில்தான் இந்த கோரிக்கை விடப்பட்டது என்று எண்ணத் தோன்றுகின்றது.

முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கடந்த 23ம் திகதி பாராளுமன்ற அமர்விற்கு சகலரையும் மேற்படி நிகழ்ச்சிக்கு கண்டனம் தெரிவித்து கையில் கறுப்புப்பட்டி அணிந்து வரச்சொல்லி கோரிக்கை விடுத்திருந்தார்.

எத்தனை பா.உக்கள் கையில் கறுப்புப் பட்டி அணிந்து சென்றார்கள் என்று தெரியவில்லை!

இதற்கிடையில் இச் சம்பவத்தைப் பற்றி 'பாதுகாப்பு நடவடிக்கை தலைமையக அறிக்கை'யில் சம்பந்தப்பட்ட இளைஞர் குழப்பம் விளைவிக்க முற்பட்டார் என்றும் பொதுமக்கள் கல்லெறிந்தனர் என்றும் பொலிஸாரின் அடாவடித்தனங்களை நியாயப்படுத்த முற்பட்டிருக்கின்றனர்.

பொதுமக்கள் மீதான பாதுகாப்பு படையினரின் தாக்குதல்கள் ஒன்றும் புதிய நிகழ்ச்சி அல்ல. அதற்கான விசாரணைக் குழுக்கள் கூட நியாயமான தீர்ப்புகள் வழங்கப்படாமல் தொடங்கிய இடத்தில் முற்றுப் பெற்ற விசாரணைகளும் எத்தனையோ. சம்பந்தப்பட்ட அரச பாதுகாப்புள்ள பாதுகாப்புக் கொலைஞர்கள் மீதான நடவடிக்கைகளும் நியாயமாக நடத்தப்பட்டதில்லை. ஆனால், அவர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டதும் புதிய விடயமல்ல.' கொக்கட்டிச்சோலை, குமுதினிப்படகுக் கொலை, கிளாலிச் சம்பவம், பனிச்சங்கேணிச் சம்பவம், மைலந்தனைச் சம்பவம், சூரியகந்த சம்பவம் என்பவை மேற்படி நிகழ்வுகளுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

## தனிநபர்களுக்கு வாக்களியுங்கள்!
### ம.தொ.கா. கோரிக்கை.

இந்நாட்டில் ஆட்சிக் கட்டிலை அலங்கரிக்க எத்தனம் செய்து கொண்டிருக்கும் ஐ.தே.க அல்லது ஸ்ரீ.ல.சு.க இரண்டுமே பேரினவாத கட்சிகளாகும். இவ்விரு கட்சிகளும் மலையக மக்களின் ஜீவாதார உரிமைகள் எவற்றிலும் அக்கறை காட்டவில்லை. மாறாக சந்தர்ப்பங்கள் கிடைத்த போதெல்லாம் இம்மக்கள் எதுவித உரிமைகளையும் பெற்றிடுவதிலிருந்து தடுத்து நிறுத்துவதில் முன்நின்று வந்துள்ளது.

பல்வேறு கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டிருக்கும் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களும் ஆசனம் ஒன்றை பெறுவதையே முன் வைத்து இக்கட்சிகளுக்கு முண்டு கொடுத்து வந்துள்ளனர். நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலிலும் மலையக மக்களின் உரிமைகளை அல்லது சலுகைகளை முன் வைத்து இப்பேரினவாத கட்சிகளிடம் பேரம் பேசி எவற்றையும் பெற்றுக் கொள்ள முனையாது. தங்களின் நியமனம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதையும் ஆழ்ந்த கவலையுடன் உற்று நோக்குகின்றது.

எனவே மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் செயல் திட்டம் எதனையும் கொண்டிராத இவ்விரு பேரினவாத கட்சிகளையும் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் ஆதரிப்பதில்லை என தீர்மானிப்பதோடு, மலையக மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு செல்ல விரும்புகின்ற தனிப்பட்ட பிரதிநிதிகள் அளிக்கின்ற திடமான உறுதிமொழியின் அடிப்படையிலேயே தங்களின் வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும் என மக்களை மலையக தொழிலாளர் காங்கிரஸ் வேண்டுகின்றது. இவ்வாறு கோரும் அறிக்கையொன்றை மலையக தொழிலாளர் காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

## அரசாங்க அதிபரின் அவஸ்தை!

ஐ.தே.க சார்பில் போட்டியிடுவார் என்றும், கிழக்கு மாகாணத்தில் ஐ.தே.க அமைப்பாளராகவும் வருவார் என்றும் பரவலாக ஆரூடம் கூறப்பட்ட அரசாங்க அதிபர் மோனகுருசாமி அவர்களின் நிலை இன்று மிகவும் பரிதாபகரமானதாகியுள்ளதாக தெரிய வருகிறது.

தோல்வியுறப் போகும் ஐ.தே.க.வின் சார்பில் தேர்தலில் நிற்கப் பயந்து அதை விட்டு இரகசியமாக அவர் சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்துப் பேரம் பேசியதாகவும், அங்கும் அவர் நிராகரிக்கப்படவே மூக்குடைபட்டுப்போய் திரும்பி வந்து விட்டதாகவும், இவரது இரகசியம் இப்போது ஐ.தே.க வினருக்கு தெரியவந்துள்ளதால் அவரது நிலை 'உள்ளதையும் கெடுத்த கொள்ளிக்கண்ணன்' நிலையாகியிருப்பதாகவும் மட்டக்களப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# வன்னியில் தேர்தல் திருவிழா:

# பிச்சை போடு!

வன்னி தேர்தல் தொகுதியின் வரலாற்றில் ஒருபோதும் இல்லாத வகையில் ஏழு அரசியல் கட்சிகளும் மூன்று சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப், முஸ்லீம் காங்கிரஸ், தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணி நவசமசமாஜக் கட்சி ஆகிய கட்சிகளும் இந்திரன் (கே.ரீ.குலேந்திரன்) தலைமையிலான ஒரு சுயேட்சைக்குழுவும் எருக்கலம் பிட்டியைச் சேர்ந்த கப்பலார்பிச்சை ரஹமெத் துல்லா என்பவரது தலைமையிலான ஒரு முஸ்லீம் சுயேட்சைக்குழுவும் இன்னுமொரு முஸ்லீம் சுயேட்சைக்குழுவுமே இவ்வாறு களத்தில் இறங்கியுள்ளன.

வடபகுதியின் கேந்திர முக்கியத்துவமும் வடகிழக்கு பிரதேசத்தின் சிவில் நிர்வாக நிலைமைகளில் குறிப்பிடத்தக்க மிகமுக்கிய இடத்தைப் பெற்றுள்ளதுமாகிய வவுனியாவை உள்ளடக்கிய வன்னியில் தமிழ்கட்சிகளின் தலைவர்கள் சிலரும் வரிந்துகட்டிக் கொண்டு இந்த தேர்தல் போரில் குதித்துள்ளார்கள்.

தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம்பரம் இன்னுமொரு சிரேஷ்ட தலைவராகிய வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.ஆர்.எல்.எப் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் டெலோவின் தலைவர் அ.செல்வம் ஆகியோருடன் புளொட் தலைவர் த.சித்தார்த்தனும் இங்கு போட்டியிடவிருப்பதாகத் தெரிகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் என்ற பதவியையும் பஜீரோவுடன் கூடிய பகட்டு அதிகாரத்தையும் இலக்காகக் கொண்டு 'நீ, நான்' என்று கட்சித்தலைமைகளும் முக்கியஸ்தர்களும் இந்த தேர்தலில் போட்டியிட முண்டியடிப்பதையே பொதுவாகக் காணமுடிகின்றது. அரசியல் நீரோட்டத்தில் இணைந்துள்ள தமிழ் கட்சிகளைப் பொருத்தமட்டில் இனப்பிரச்சினைக்குரிய தீர்வென்பது தாங்கள் பாராளுமன்றத்திற்குச் செல்வதிலேயே தங்கியுள்ளது என தீர்மானித்துவிட்டார்களோ என்ற முடிவையே பார்வையாளர்கள் மத்தியில் ஏற்படுத்துவதாக இது அமைந்துள்ளது.

தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை நடைமுறையில் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக 'ஐம்பதுக்கு ஐம்பது' எனவும் ''சமஷ்டி' எனவும் ஆரம்பித்து இனி முடியாது....'' ''தமிழீழமே தீர்வு'' என்று தனிநாட்டு முடிவுக்குப் போய் ''மீண்டும் சமஷ்டி'' நிலைக்குச் சறுக்கி அதுவும் சரிவராத நிலையில் ''பிச்சை வேண்டாம் நாயைப் பிடி'' என்பது போல பாராளுமன்ற ஆசனத்தைக் கொண்ட தொகுதி நிலையே போதும் என்று இந்த தமிழ் தலைவர்கள் இப்போது முடிவு செய்து விட்டார்களே என்ற கருத்தே தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

வன்னித் தொகுதியில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் திருமதி இராசமனோகரி புலேந்திரன் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர் பட்டியலுக்குக் கட்சியின் பலமுனைகளிலும் அதிருப்தி ஏற்பட்டது. முக்கியமாக முன்னாள் கல்வி ராஜாங்க அமைச்சராகிய திருமதி புலேந்திரனின் (கணவரின் சகோதரரான) மைத்துனராகிய கே.ரீ.குலேந்திரனின் பெயர் வேட்பு மனு பட்டியலில் இடம் பெறாமையே அதற்கு முக்கிய காரணமாயிற்று. கட்சியின் மேல்மட்டம் வரையில் இந்த அதிருப்தி குறித்து, தெரிவித்து விவாதிக்கப்பட்ட போதிலும் மாவட்டத் தலைவியாகிய திருமதி புலேந்திரனின் வேட்பாளர் தெரிவே இறுதி முடிவென அறிவிக்கப்பட்டு விட்டது.

இதனாலேயே கே.ரீ.குலேந்திரன் சுயேட்சையில் போட்டியிட களத்தில் இறங்கியுள்ளார். தமிழ் பகுதியாகிய வவுனியா தேர்தல் தொகுதியில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அளவிற்குப் பேரினவாத கட்சியாகிய ஐ.தே.கவை உருவாக்கி வளர்த்தெடுத்த அமரர் கே.ரீ.புலேந்திரனின் சகோதரரான அவருக்கு மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கை நிரூபிக்காமல் விடமாட்டேன் என சபதமிட்டு 'வன்னி அம்மையாருக்கு' எதிராக தேர்தல் களத்தில் குதித்துள்ளார். வன்னியிலும் ஒரு குடும்ப அரசியல் சண்டைக்கான ஆரம்பமாக அதனைக் கொண்டால் தவறில்லை. ஏனெனில் வன்னி அம்மையார் தனது கணவனின் அரசியல் வழியைப் பின்பற்றி அரசியல் வாரிசுகளாக தனது இரு புத்திரிகளையும் உருவாக்க வேண்டும் என்ற திட்டத்தோடு செயற்பட்டு வருகிறாராம்.

மறுபக்கத்தில் வன்னியில் ஒரு பேரினவாதக் கட்சி மட்டும் இருந்தால் போதாது. பொதுஜன ஐக்கிய முன்னணியையும் இங்கு நிலையூன்ற வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டது போல தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் முக்கியஸ்தரும் முன்னாள் நகரசபைத் தலைவரும் சட்டத்தரணியுமாகிய ஐயாத்துரை கேதீஸ்வரன் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குத் தலைமை தாங்கி தேர்தலில் போட்டியிடுகின்றார்.

மொத்தத்தில் வவுனியா மன்னார் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய வன்னி தேர்தல் தொகுதி, இலங்கையின் பத்தாவது பாராளுமன்றத் தேர்தலில் குரங்கின் கையிற் சிக்கிய பூமாலையைப் போல ஒரு பலமுனை அரசியல் போட்டியில் அரசியல் வாதிகளிடம் சிக்கி சிதையப் போகின்றது என்பதில் சந்தேகமில்லை.

# அக்கரைப்பற்று: அரசியல் தலைமைகளின் சதி?

அக்கரைப்பற்று பிரதேச செயலகமாக இயங்கிக் கொண்டிருந்த பிரதேச செயலகம், இன்று ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் (தமிழ்ப்பிரிவு) கருங்கொடித்தீவு (முஸ்லீம் பிரிவு) பிரதேச செயலகம் என இரண்டு செயலகங்களாக பிரிக்கப்பட்டு நிர்வாக அலுவல்கள் நடைபெற்று வருகின்றன.

இப் பிரிக்கப்பட்ட பிரதேச செயலகங்களின் எல்லைகள் தொடர்பான விபரங்கள், அம்பாறை கச்சேரியில் இருந்து அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்கு (இன்றைய கருங்கொடித்தீவு பிரதேச செயலகம்) அனுப்பப்பட்டுள்ளது. ஆயினும் இந்த எல்லைகள் தொடர்பான விபரங்கள் ஆலையடி வேம்பு பிரதேச சபைக்கு இன்னமும் அனுப்பப்படவில்லை.

ஆலையடிவேம்பு பிரதேச எல்லைக்குள் முஸ்லீம் மக்களின் காணிகள் மட்டுமல்ல கருங்கொடித்தீவு பிரதேச மக்களுக்கு தேவையான களிமண், மணல் ஆகியவையும் அடங்கியுள்ளன. இத்தேவைகளை ஆலையடி வேம்பு பிரதேச சபையின் அனுமதியுடன் எடுத்துச் செல்லமுடியும் எனக் கூறப்பட்ட போதும் இவற்றை எடுத்துச் செல்ல அது அனுமதி வழங்குவதில்லை. அரசியல் தலைவர்கள் பலரது தலையீட்டுடன் நடந்துள்ள இந்த நிகழ்ச்சியானது கொஞ்சம் கூட நியாய மற்றது என்கிறார் கருங்கொடி தீவு பி.செ.அதிகாரி ஒருவர்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாழும் முஸ்லீம் மக்களும், தமிழ் மக்களும் ஒருவரில் ஒருவர் தங்கியே வாழுகின்றனர். அரசியல் தலைமைகளின் சுயநலன்களுக்காக செய்யப்பட்ட இச் சதிச் செயலான எல்லை பிரித்தலானது எதிர்காலத்தில் இரு இனங்களுக்கிடையிலான மோதலாக உருவாகுமா என்ற அச்சம் நிலவுகின்றது என்றும் எதிர்காலத்தில் இன மோதல்கள் உருவாகாமல் இருக்க எல்லைகள் மீண்டும் மீளமைக்கப்படுமாயின் பயனுள்ளதாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுத் தேர்தலா? போர்த் தேர்தலா?

யாழ் தீவுப்பகுதிகளில், கேந்திர முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படும் காரை நகரில் கடந்த ஒரு மாத காலமாக ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஜூன் மாதம் 10ம் திகதி பலத்த பாதுகாவலையும் மீறி, பாலைவனம் போன்ற பரந்த மணல் வெளியில் ஊடுருவி பதுங்கியிருந்த புலிகளின் கண்ணிவெடி தாக்குதலில் மூன்று அதிகாரிகள் உட்பட நான்கு கடற்படையினர் பலியாக நேர்ந்தது. கடற்படையினரின் வாகனத்திற்கு வைக்கப்பட்ட இந்த தாக்குதல் இலக்கினால் வேறு சில வீரர்களும் படுகாயமடைந்தார்கள்.

கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள காரைநகரில் ஈ.பி.டீ.பி உறுப்பினர்களும், எண்ணிக்கையில் குறைந்த வயோதிபர்களான பொதுமக்களுமே உள்ளார்கள். இந்த பிரதேசத்தினுள் புலிகள் ஊடுருவது என்பது இலகுவான காரியமல்ல. எனினும் புலிகள் ஊடுருவியது மட்டுமல்லாமல் வெற்றிகரமாக தாக்குதலையும் நடத்தியுள்ளமை அங்குள்ள கடற்படையினரைப் பெரிதும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளதுடன் நெருக்கடிக்கும் ஆளாகியுள்ளது. இதனால் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்த தாக்குதலையடுத்து காலவரையறையற்ற ஊரடங்கு சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் மட்டுமல்லாமல் இங்குள்ள ஈ.பி.டி.பியினரது நடமாட்டங்களையும் மட்டுப்படுத்தியுள்ள படையினர் இவர்கள் ஒவ்வொருவரினதும் நடமாட்டங்கள் நடவடிக்கைகளையும் மிகவும் உன்னிப்பாக கவனித்து வருகிறார்களாம். உள்ளே இருப்பவர்களின் ஒத்தாசையினால்தான் புலிகள் துணிவாக ஊடுருவுகின்றார்களோ என்ற சந்தேகம் தான் இதற்கு காரணம் என கூறப்படுகின்றது.

இந்த தாக்குதல் சம்பவத்தையடுத்து படையினரின் பாதுகாப்பிற்கும் நோட்டமிடும் காவல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கும் இடைஞ்சலாக உள்ள பல கல்வீடுகள் தரைமட்டமாக்கப்படுவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இங்கு ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டதையடுத்து வெளியார் எவரும் காரைநகரில் குடிமனைப் பகுதிக்குள் அனுமதிக்கப்படாதது போலவே உள்ளே இருப்பவர்களும் வெளியிடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப் படுவதில்லை.

அண்மையில் நடந்து முடிந்த நயினாதீவு நாகபூசனி அம்மன் திருவிழாவுக்காக காரை நகரில் இருந்து சென்ற வைத்தியர் ஒருவரையும் ஊருக்குத் திரும்பிச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாம். ஓய்வு பெற்ற அரச ஊழியரான இவரே காரைநகரில் வைத்திய சேவையாற்றி வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது இப்படி இருக்க அண்மைய சில வாரங்களாகவே புலிகள் காரை நகரினுள் ஊடுருவுவதற்காக கப்பல தடவைகள் முயற்சிகளைத் தொடர்ந்து மேற் கொண்டு வருவதாகவும் கெரில்லா பாணியில் புலிகளும் படையினரும் சோளக பருவக் காற்றுக் காலம் காரணமாக வற்றிச் செல்லும் பரவைக் கடல் பகுதியின் சிறுசிறு மணற் திட்டுக்கள் பற்றைகளில் பதுங்கு குழிகள் அமைத்து இரவு பகல் காற்று வெய்யில் என்று பாராமல் பதுங்கி இருந்து தருணம் பார்த்து தாக்குதல் நடத்தி வருகின்றார்களாம். இந்த ஏட்டிக்குப் போட்டியான பதுங்கித் தாக்கும் நடவடிக்கைகளில் இருதரப்பிலுமே அவ்வப்போது உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருகின்றன. இத்தகைய ஒரு சூழலில் நடைபெறப்போகும் பொதுத் தேர்தல் பொதுத் தேர்தலாக அல்ல போர்த் தேர்தலாகவே இருக்கப் போகிறது.

# பிரதேச சபையும் அதிகார பரவலாக்கமும்

எல்லா பிரதேச செயலகத்திற்கும் ஒரு பிரதேச சபை இருப்பது தான் நடைமுறை. ஆனால் அதற்கான சகல அம்சங்களையும் கொண்டிருக்கும் காரைத்தீவு பிரதேச செயலகத்திற்கு ஒரு பிரதேச சபை இல்லை. இப் பிரதேச செயலகத்தின் கீழ் 12 தமிழ் கிராம சேவகர் பிரிவுகளும், 5 முஸ்லீம் கிராம சேவகர் பிரிவுகளும் இருந்தும் பிரதேச சபை இல்லாத நிலையுமே நிலவுகிறது.

இன்று காரைதீவு பிரதேச செயலகம் நிந்தவூர் பிரதேச சபையின் கீழே இயங்குகின்றது. இப் பிரதேச சபைக்கு காரைதீவில் சுயேட்சைக் குழுவாக கடந்த தேர்தலில் போட்டியிட்டவர்கள் 95% வீதமாக வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளனர்..

காரைதீவு மக்களுக்கான ஒரு பிரதேச சபை வழங்காமையானது அதிகாரப்பரவலாக்கத்தின் கீழ் தமக்குரிய அடிப்படை உரிமையை மீறும் நடவடிக்கையோவென இம் மக்கள் கருதுகின்றனர்.

இப்பிரதேச பிரஜைகள் குழுவினர் தமிழ் கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் இடையிலான பிளவுகளினால் கடந்த பிரதேச சபைத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்டனர். எதிர்வரும் பொதுத்தேர்தலிலும் அம்பாறை தமிழ் பிரதேச மக்களை ஒன்று சேர்த்து தமிழர் மகா சங்கம் என்ற பெயரில் சுயேட்சையாகப் போட்டியிடுகின்றனர்.

சரிநிகர் மாதமிருமுறை இதழ் இல. 18/2 அலோ சாலை ? கொழும்பு 03, [illegible]த்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்
அச்சுப்பதிவு: 334, காலிவீதி இரத்மலானை நவமக அச்சகம்.
1994-07.12
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்